Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 61 • 02.10.2016



வெளிநாட்டு பெண்களை குறிவைக்கும் இலங்கை ஆண்கள்



## “பிரபாகரன் இஸ் ஏ கிரேட் லீடர்”

பக்தியாக பேசும் கீர்த்தி



## ‘வங்கி முகாமையாளராக இருந்த பாலகுமாரன் புலிகளின் முக்கியஸ்தரானது எப்படி?’

கொழும்பில் இயங்கி வரும் பிரபல்யமான SB TRAVELS AND TOURS PVT LTD இலக்கம் 324 அலுத்மாவத்தை வீதியிலும் அத்துடன் தனது கிளைகளை கதிரேசன் வீதியிலும் தற்போது யாழ் மண்ணில் இலக்கம் 216 கஸ்தூரியார் வீதியிலும் தனது கிளையை விஸ்தரித்துள்ளது




# SB TRAVELS & TOURS (PVT) LTD.

வானில் பறக்கும் கனவுகளை

உடன் உங்கள் கனவுகளை நினைவாக்கிட எமது சேவைகள்...

IATA Accredited Agent

- இங்கு அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களையும் வீசாக்களையும் மிகச்சிறந்த முறையில் செய்து தரப்படுகிறது.
- இந்தியாவுக்கான விசாக்கள் வெகு விரைவிலும் மற்றும் மலேசியா, தாய்லாந்து, டுபாய் ஆகிய நாடுகளுக்குமான வீசாக்கள் செய்து தரப்படும் பயணக்காப்புறுதி பிரயாண திகதி மாற்றம் சுற்றுலா ஒழுங்கமைப்பு Hotel முன் ஏற்பாடுகளும் செய்து தரப்படும்
- ஐரோப்பிய நாடுகளுக்குமான பயணச்சீட்டில் விசேட விலைக்கழிவுகளும் வீசா ஆலோசனைகளும் வழங்கப்படும்
- மேலும் BUDJECT AIRLINES SPICEJET , AIR ASIA, FLY DUBAI, AIRARABIA , ROTANA , ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணத்தில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்
- அத்துடன் தற்போது விசேட விலைக்கழிவுகளாக சென்னை 19800 மதுரை 17500 டோகா 16000 துபாய் 15000 சாஜா 13000 ஆகிய குறைந்த கட்டணங்களில் பெற்றுக்கொள்ளலாம்.




No. 216, Kasthuriyar Road,
Jaffna, Sri Lanka.
0212229555 | 0212228555 |
0766911080 | 0766911081

No. 324, Aluthmawatha Road,
Modara, Colombo - 15.
011 254 0208 | 011 254 0111
077 108 3480 | 077 108 3481/82

No. 132, Sri Kathiresan Street,
Colombo - 13.
011 233 3322 | 011 233 4470
077 108 3483 | 076 691 1090

E-mail : sbtravels216@yahoo.com | sbtravels132@yahoo.com | sbtravels132@gmail.com






அசல் யாழ்ப்பாண சுவை மற்றும் தரம் குன்றாத அனைத்துப்பாரம்பரிய உணவு வகைகளையும் சுவைத்து மகிழ தமிழ் மக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு உணவகம்


# AACHE

HOT FOOD RESTAURANT


# ஆச்சி

ஹாட் பூட் ரெஸ்ட்ரொரன்ட்

மிகவும் சுத்தமானது அத்தோடு மிக மிக தரமானது. செயற்கை சுவையூட்டிகள் அற்றது. யாழ்ப்பாண பாரம்பரியத்தைக் கொண்டது. குறுகிய காலத்தில் அதிகளவான வாடிக்கையாளரைப் பெற்று யாழ்ப்பாணத்தில் தன்னிகரில்லாது முன்னிலை வகிக்கும் ஒரேயொரு உணவகம்.



புதன், சனி ஞாயிறு போன்ற நாட்களில் மதியம் சுவையான யாழ். ஒடியல் கூழினை சுவைத்து மகிழலாம்...



சகல விதமான வைபவங்களுக்குமான அனைத்து உணவு வகைகளையும் ஓடர் செய்து உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

147, பலாலி வீதி, திருநெல்வேலி.

கிளைகள்
01. நவீன சந்தை, மானிப்பாய்.
102. கண்டி வீதி, சாவகச்சேரி.
கைதடி கிழக்கு, கைதடி.

தொலைபேசி
021 222 5001 | 021 205 7455

HOT LINE 021 222 5010

# எழுக தமிழ் பதைபதைத்தவர்கள் யார்?

**அரசியல் தீர்வு நெருங்கும் சமயத்தில் இப்படியான பேரணி நடப்பது அதை குழப்பும் என்ற வாதம் சரியானதல்ல. ஏனெனில், எழுக தமிழில் வலியுறுத்தப்பட்டுள்ளது தமிழர்களின் அடிப்படையான கோரிக்கைகள்.**




கிருத்திக் போஸ்நிஹாலே

கடந்த வாரம் தமிழ் அரசியலரங்கை இரண்டுபடவைத்துநடந்துமுடிந்துள்ளது எழுக தமிழ். தமிழ் மக்கள் பேரவை முன்னெடுத்த எழுக தமிழ் பேரணியில் தமிழ் அரசியல்கட்சிகளில் பெரும்பாலானவையும், வடக்கிலுள்ள பொதுஅமைப்புக்களில் அனேகமானவையும் ஆதரவளிக்க, மொத்த இலங்கையும் இப்பொழுது உச்சரித்து கொண்டிருப்பது எழுக தமிழ்!

எழுக தமிழ் இப்படியொரு பேரெழுச்சியை ஏற்படுத்துமென யாருமே எதிர்பார்க்கவில்லையென்பதுதான் உண்மை. ஏற்பாட்டாளர்களே இப்படியொரு எழுச்சியை கற்பனை பண்ணியிருக்க மாட்டார்கள். முழு யாழ்ப்பாணமும் ஸ்தம்பித்தது. வடக்கின் பெரும்பாலான நகரங்கள் செயலிழந்தன. முழு தமிழர்களும் பரபரத்துக் கொண்டிருந்தார்கள், மொத்த இலங்கையும் யாழ்ப்பாணத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் பெரும்பேரணியாக முற்றவெளிக்கு சென்ற மக்கள் எழுக தமிழ் பிரகடனத்தை எடுத்துக்கொண்டனர்.

முற்றவெளியில் கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் உரத்த குரலில் எடுத்துக்கொண்ட எழுக தமிழ் பிரகடனம் இன்றுவரை முழு இலங்கையிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. தமிழர்களில் சிறுபகுதியினர் அசூசையாக பார்க்க, முழு தென்னிலங்கையும் அடிமடியில் தீப்பிடித்ததை போல பதைபதைத்து ஓடித்திரிகிறார்கள்.

மகிந்த ராஜபக்ச முதல் முளைத்து மூன்று இலைவிடாத உள்ளூர் அரசியல் வாதிகள் வரை அனைவருமே எழுக தமிழ், முதல்வர் விக்னேஸ்வரன் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். பிரபாகரனிற்கு பின்னர் தென்னிலங்கை இனவாதிகளை பதைபதைக்க வைத்திருக்கிறார் விக்னேஸ்வரன். அதனால்த்தான் பிரபாகரனின் பெயரை உச்சரித்த வாய்களெல்லாம் விக்னேஸ்வரன் பெயரை உச்சரிக்கின்றன. விக்னேஸ்வரன் நல்லிணக்கத்தை குழப்புகிறார், விக்னேஸ்வரனை கைது செய் என்றெல்லாம் புதுப்புது டிசைன்களில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

## யாருக்கு எதிர்?

எழுக தமிழ் பேரணி அறிவிக்கப்பட்டதுமே சலசலப்பு ஆரம்பித்து விட்டது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் உயர்மட்டகுழுக் கூட்டத்திலும் இதுபற்றி பேசப்பட்டது. புதிய அரசியலமைப்பிற்கு எதிரானதாக பேரணி அமைந்துவிடக்கூடாதென்ற அச்சம் இரா.சம்பந்தனிடம் இருந்தது. மக்களின் உணர்வுகளிற்கு மதிப்பளிக்க வேண்டுமென பேரணி ஏற்பாட்டில் அங்கம் வகித்த கட்சிகள் சம்பந்தனிற்கு விளக்கியுள்ளன. அதனை அவரும் ஏற்றுக்கொண்டார்.

இரா.சம்பந்தன் அதனை ஏற்றுக் கொண்டார். ஆனால், தமிழரசுக்கட்சி ஏற்றுக் கொண்டதா என்பதை அறுதியிட முடியாது. எழுக தமிழில் தமக்கு உடன்பாடில்லையென்பதை தமிழரசுக்கட்சி அறிவித்தது. முகப்புத்தகம் வைத்துள்ள தொண்டர்கள் எழுக தமிழிற்கு எதிராக பெரும் அலப்பறையே செய்தனர். அவர்களின் அலப்பறைதான், எழுக தமிழ் தமிழரசுக்கட்சிக்கு எதிரானதென்பதை போன்ற தோற்றத்தை உருவாக்கியது.

சில பத்திரிகைகளும் "எள்ளெண்ணை" ஊற்றி பற்ற வைக்க முயன்றன. ஆனால் தீ பற்றியதென்னவோ முற்றவெளியில்த்தான்.

மகிந்தவும் கூட்டாளிகளும்

எழுக தமிழை தொடர்ந்து தெற்கில் இன்னும் நிலநடுக்கம் வராததொன்றுதான் குறை. மற்றபடி, கொதிக்கிறது... குலுங்குகிறது. பிரிவினையை தூண்டுகிறார்கள், ஐக்கியத்தை குழப்புகிறார்கள், தமிழ் இளைஞர்களை வன்முறை நோக்கி தள்ளுகிறார்கள் என தெற்கு அரசியல்வாதிகள் ஆளாளுக்கு கொதிக்கிறார்கள்.

இவர்கள் அனைவரின் கொதிப்பின் பின்னாலுள்ளது ஒரேயொரு காரணம்தான். அதுநாம் வெற்றிகொண்ட தமிழர்கள் மீண்டும் நமக்கு சவால் விடுவதை போல நடப்பதா?

எழுக தமிழை தாங்கிக்கொள்ள முடியாமல் மகிந்த ராஜபக்ச கொதிப்பதன் பின்னணியும் இதுதான்: "2009 இல் அனைத்துலக சட்டங்களையும், மனிதாபிமான நெறி முறையையும் மீறி தமிழர்களை அழித்து, நிலங்களை கைப்பற்றி... இராணுவ, புலனாய்வுத்துறை, இராணுவ ஆளுனரின் இறுக்கமான பிடியில் தமிழர்களை வைத்திருந்தேன். அதையும் மீறி இப்பொழுது தமிழர்கள் வீதிக்கிறங்க தொடங்கி விட்டார்களே... எனது வெற்றிவாதம் என்னாவது?" என்பதுதான் மகிந்த மற்றும் தெற்கு இனவாதிகளின் பதைபதைப்பு.

தமிழர்களின் கலை, கலாச்சாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளை நிறுத்து, சிங்கள குடியேற்றங்களை நிறுத்து, தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை வெளியேற்று, தமிழர்களின் தேசிய இன அடையாளத்தை அங்கீகரித்து ஒற்றையாட்சிக்கு அப்பாலான தீர்வை தா, வடக்கிற்குள் அதிகரிக்கும் போதைப்பாவனையை கட்டுப்படுத்து என்பதுதான் எழுக தமிழின் கோரிக்கை.




இது தமிழர்களின் அடிப்படையான கோரிக்கை. அடிப்படையான கோரிக்கைகளை எழுப்புவதே இனவாதம் என்றால் தமிழர்கள் எதுவுமே பேசாமல் இரு என்பது தானே அர்த்தம். அல்லது, ஞானசார தேரர் சொல்வதை போல பெட்டி படுக்கையுடன் தமிழகத்திற்கு இடம்பெயர்வதா?

எழுக தமிழ் பேரணி அவசியமற்றது, நல்லிணக்க செயற்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும், தெற்கு இனவாதிகளிற்கு தீனி போடும், சில மாதம் பொறுக்க கூடாதா என்று தமிழர்கள் சிலரும் கேள்வியெழுப்புகிறார்கள்.

"நீங்கள் வேறு நாடையா... நாங்கள் வேறு நாடு" தனித்தமிழீழம் தந்துவிடுங்கள் என்பது எழுக தமிழின் கோரிக்கை அல்ல. ஐக்கிய இலங்கைக்கு எதிரான எந்த கோசத்தையும் எழுக தமிழ் எழுப்பவில்லை. ஒற்றையாட்சி முறைமை வேறு, ஐக்கிய இலங்கை வேறு என்பதை பலர் புரிந்து கொள்ள தவறுகிறார்கள்.

ஒரு மக்கள் கூட்டம் இனமாக சிந்திப்பதும், இனமாக திரள்வதும் தவறாகாது. குறிப்பாக உரிமைப்போராட்டம் நிகழ்த்தும் மக்கள் கூட்டம் அப்படி சிந்திப்பதும், திரள்வதுமே அதன் தார்மீக கோரிக்கையை உயிர்ப்புடன் வைத்திருக்கும். அந்த திரள்வும், எழுச்சியும் இன்னொரு இனத்திற்கு எதிரானதாகவோ, இனத்தின் உரிமைகளை நசுக்குவதாகவோ அமையாத வரை அதை வரவேற்கலாம்.

எழுக தமிழில் நடந்ததும் அதுதான்!

சுரங்கப் பாதைகள் கிடையாது!

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் சமயம் இது. இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழர்களும் பங்கெடுக்கிறார்கள். முழு தமிழினத்தின் அபிலாசைகளையும் உள்வாங்குவதாக அரசியலமைப்பு அமைய வேண்டும். ஆனால் அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் யாரும் வாய் திறக்கவில்லை. எமக்கு என்ன தேவை என்பதை பதிவு செய்யவும், எமது அபிலாசைகளை கடந்து சென்றால் மக்கள் மன்றத்தில் பதில் சொல்ல வேண்டுமென்பதையும் வலியுறுத்த மக்கள் இப்படி சுயாதீனமாக திரள்வது அவசியம்.

அரசியல் தீர்வு நெருங்கும் சமயத்தில் இப்படியான பேரணி நடப்பது அதை குழப்பும் என்ற வாதம் சரியானதல்ல. ஏனெனில், எழுக தமிழில் வலியுறுத்தப்பட்டுள்ளது இணைந்த வடக்குகிழக்கு, சமஷ்டி போன்ற தமிழர்களின் அடிப்படையான கோரிக்கைகள். தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்துவதும் இதைதான். அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்பாக நடந்து கொள்ளாது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் இரகசியமாக நடந்து வருகிறது. ஓரிரண்டு மாதங்களில் வெளியிடுவதாக கூறுகிறார்கள். அப்பொழுதும் இதே எதிர்வினைதான் தெற்கில் வரப்போகிறது. இந்த எதிர்வினையை காரணம் காட்டி, அரசியலமைப்பு திருத்தத்தை கைவிட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

அரசு செய்யும் இந்த அரசியலமைப்பு திருத்த முறை நம்பிக்கையளிப்பதாக இல்லை. தமிழர்களின் அரசியல் உரிமைகளை அங்கீகரித்து, கௌரவமாக வாழும் தீர்வை வழங்குவதெனில், அது பற்றிய புரிந்துணர்வை தெற்கில் ஏற்படுத்த வேண்டும். தமிழர்களிற்கு என்ன கொடுக்கப்போகிறோம் என்பதை இரகசியமாக வைத்திருந்து, ஓரிரவில் இராணுவசதி புரட்சி மாதிரி அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்ற முடியாது. இப்படியான இரகசிய திருத்தங்களில் தமிழர்களும் நம்பிக்கை கொள்வது சாத்தியமில்லை.

வடக்கில் அத்துமீறல்களை செய்து தமிழர்களை சீண்டி, எதிர்ப்பு குரல் எழ வைத்து, அதை காட்டி தெற்கிலும் அரசியல் செய்வது குள்ளநரித்தனம். தமிழர்களின் எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்றும் அரசியலமைப்பை உருவாக்குவதெனில் சிங்கள மக்களின் மனங்களில் தமிழர்களின் கோரிக்கைகளின் நியாயத்தை உணர்த்த வேண்டும். தமிழர்களும் ஒரு தேசிய இனம் என்பதை புரிய வைக்க வேண்டும். இரண்டு இனங்களும் சம உரிமையை அனுபவித்தால் தான் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாமென்பதை உணர்த்த வேண்டும்.

தமிழர்கள் வாய் திறந்தால் சிங்களவர்கள் கோபித்து விடுவார்கள் என்ற வாதங்களையெல்லாம் தூக்கி எறிந்து விட வேண்டும். ஏனெனில்,

நல்லிணக்கத்திற்கு இரகசிய பாதைகள் கிடையாது!

# விசாவிற்காக காதல்வலையை கையில் எடுக்கும் இலங்கை ஆண்கள்

இலங்கையில் இருந்து வெளிநாட்டிற்கு புலம்பெயர்ந்த இளைஞன் ஒருவன் தனக்கு விசா கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இளம் பெண் ஒருவரை தனது காதல் வலையில் வீழ்த்தியுள்ளான்.

ஒரு ஆண்மகனால்தான் ஏமாற்றப்பட்டதை நினைத்து வேதனையுற்ற அப்பெண், தனது மனவலியை பகிர்ந்துகொண்டதோடு மட்டுமல்லாமல், இலங்கை ஆண்களுக்கு அறிவுரை ஒன்றை கூறியுள்ளார்.

அப்பெண்ணின் காதல் கதை இதோ எங்களுடைய முதல் சந்திப்பின் போதே, அவன் தனக்கு விசா கிடைக்கவில்லை என்று உண்மையை என்னிடம் தெரிவித்தான். எங்கள் சந்திப்பிற்கு அச்சாரம் இட்ட இந்த விசா என்ற வார்த்தையை அன்று நாங்கள் பேசிக்கொண்டதோடு சரி அதன் பின்னர் நாங்கள் இருவரும் ஒருபோது பேசிகொண்டதில்லை.

அன்று தொடங்கிய எங்கள் சந்திப்பு நீடித்துக்கொண்ட சென்றது. இந்த சந்திப்பின் மூலம் நாங்கள் இருவரும் ஆழமாக ஒருவரையொருவர் காதலிக்க தொடங்கினோம். அவரது இதயத்தில் எனக்காக ஒரு இடம் இருப்பதையும், எனது இதயத்தில் அவருக்காக ஒரு இடம் இருப்பதையும் எங்கள் இருவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எனக்குள் இதுபோன்ற ஒருவித மாற்றம் எழுந்ததே இல்லை. அவனை நான் பார்க்கும்போதெல்லாம் என் மனதுக்குள் பட்டாம்பூச்சிகள் சிறகடிக்கும். "கண்கள் இரண்டால் என் கண்கள் இரண்டால்", "முன்பே வா என் அன்பே வா" ஆகிய காதல் கீதங்கள் என் மனதுக்குள் ரீங்காரம் இசைத்து என்னை பரவசப்படுத்தும்.

என் மனதுக்கு அவன் எப்படி வந்தான் என்பதை நினைத்து கொண்டு படுக்கையில் இருக்கையில், வானத்து நட்சத்திரங்கள் ஒன்று திரண்டு எங்கள் இருவரின் உருவத்தை ஒன்றாக இணைத்து என் கண்களை கிரங்கடிக்கும்.

நாங்கள் இவருவரும் ஒருவரையொருவர் ஒன்றாக புரிந்துவைத்துக்கொண்டோம். அவன் ஒருபோதும் என் பெண்மையை பற்றி சந்தேகம் கொண்டது கிடையாது. அதுபோன்று எந்தவொரு செயலையும் செய்யவேண்டும் என என்னை கட்டாயப்படுத்தியது கிடையாது. எனது உணர்வுகளுக்கு மதிப்பளித்தான்.

எங்கள் இருவருக்குள்ளும் இணைபிரியாத ஒரு பந்தம் உருவானது. இதனால் எங்கள் இருவரையும் யாராலும் பிரிக்க முடியாது என்பதை உணர்ந்தேன். 4 மாதங்கள் கடந்தது. ஒரு நாள் என்னிடம் ஒரு கேள்வியை எழுப்பினான். என்னை திருமணம் செய்து கொள்கிறாயா? இந்த கேள்வியை கேட்டதும் நான் அதிர்ச்சியில் உறைந்தேன். ஏனெனில், நாம் சந்தித்து 4 மாதங்கள் தான் ஆகிறது. அதுவும் இல்லாமல் இதனை அறிந்தால் எனது பெற்றோர் என்ன சொல்வார்களோ என்று.

எனது வயது 19, அவனின் வயது 26. எந்த ஒரு தமிழ் தாயும் 19 வயதுடைய தனது மகளை தனியாக வெளியில் அனுப்ப அனுமதிக்கமாட்டார்கள். அதோடு எனக்கும் அவருக்கும் 7 வயது வித்தியாசம்.

ஆனால், "காதலுக்கு வயதில்லை" என்று சொல்வார்கள். அதுதான் என் வாழ்வில் நடந்தது. அவர் எந்த அளவுக்கு எனக்கு பொருத்தமாக இருக்கிறார் என்பதை பற்றியெல்லாம் நான் சிந்திக்கவில்லை.

அவன் மீதுள்ள அளவுகடந்த அன்பே, என்னை இப்படியெல்லாம் சிந்திக்க தூண்டியது. இருப்பினும் இந்த சிறுவயதில் திருமணம் செய்துகொள்ள வேண்டுமா என்ற கேள்வி என் மனதுக்குள் எழுந்தது.

நான் பட்டப்படிப்பு முடிக்க வேண்டும், வேலைக்கு செல்ல வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையெல்லாம் எனக்குள் இருந்தது. ஆனால் அவனின் நோக்கம் எல்லாம் ஒன்று தான், என்னை திருமணம் செய்துகொள்ளவேண்டும், அதன் மூலம் அவனுக்கு விசா, பட்டப்படிப்பு, வேலை, பணம் ஆகிய அனைத்தும் கிடைக்க வேண்டும்.

சொல்லப்போனால், அவனின் கண்களுக்கு நான் Golden Ticket போன்று தெரிந்துள்ளேன். நாங்கள் இருவரும் காதலிப்பதை அவனது பெற்றோரிடம் சென்று, நான் தான் தெரிவிக்க என்று என்னிடம் கேட்டுக்கொண்டான். மேலும் எனது பெற்றோரிடமும் வந்து முறைப்படி என்னை பெண் கேட்பதிலும் அவன் பின்வாங்கினான்.

விசா என்ற போர்வையில் காதல் நாடகமாடிய அவனின் சுயரூபம் எனக்கு தெரியவந்தது. இவனுக்கு எப்போது விசா கிடைப்பது? எப்போது தொழில் கிடைப்பது? இவை இருந்தால் தான் எனது பெற்றோர் இவனை மாப்பிள்ளையாக ஏற்றுக்கொள்வார்கள்.

இவனின் விருப்பமும் இலங்கைக்கு செல்வதில்லை, மாறாக வெளிநாட்டிலேயே வசிக்க வேண்டும், அதற்கு என்னை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான்.

அவனுக்கு உண்மையாக இருந்தேன்; அவன் இல்லாமல் என்னால் வாழ முடியாத என்பதை உணர்ந்தேன், ஆனால் என்னுடைய உணர்வுகளோடு விளையாடிய அவனை மறப்பதை தவிர எனக்கு வேறு வழிதெரியவில்லை. அதனால் அவனை கைவிட்டு எனது பாதையில் பயணிக்க ஆரம்பித்துவிட்டேன்.

இந்த காதலின் மூலம் நேர்மறையான எண்ணங்களை கற்றுக்கொண்டேன். அந்த எண்ணங்களோடு பயணிப்பதால் எனது வாழ்க்கை தற்போது நன்றாக இருக்கிறது.



**என்னுடைய உணர்வுகளோடு விளையாடிய அவனை மறப்பதை தவிர எனக்கு வேறு வழிதெரியவில்லை. அதனால் அவனை கைவிட்டு எனது பாதையில் பயணிக்க ஆரம்பித்துவிட்டேன்**



இதன் மூலம், விசா இல்லாமல் வெளிநாட்டில்வசிக்கும் ஆண்களுக்கும்ஒன்று கூறிக்கொள்கிறேன், உங்களுக்கு எதிர்காலம் இங்கு இல்லை என்று நான் கூறவரவில்லை. ஆனால் விசா கிடைக்க வேண்டும் என்பதற்காக, எந்தவொரு பெண்ணின் உணர்வுகளோடும் விளையாடதீர்கள். இலங்கையில் எவ்வளவோ அழகான பெண்கள் வசிக்கிறார்கள், அங்கு சென்று உங்களுக்கு பிடித்த பெண்களை திருமணம் செய்துகொள்ளுங்கள்.

ஆனால், அதற்கு பதிலாக என்னை போன்று பெண்களின் அழகான இதயத்தை நொறுக்காதீர்கள்.

எனது இந்த கதையினை வெளிநாட்டு பெண்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். விசா இல்லாத ஆண்களின் காதல் வலையில் ஒருபோதும் விழுந்து விடாதீர்கள், ஏனெனில் உங்களை பயன்படுத்தி அவர்கள் விசா பெற்றுவிட்டார்கள் என்றால் உங்களை விட்டு பிரிந்துசென்று விடுவார்கள். இறுதியில் நீங்கள் தான் மன நிம்மதி இழந்து தவிப்பீர்கள்.

## நகைச்சுவை

ஒருவர்: விளம்பரத்தில நடிக்க கூப்பிட்டதும் அந்த நடிகர் எலி மருந்தைப்போய் ஏன் குடித்தார்?

மற்றவர்: அவர் எதையும் பயன்படுத்திப் பார்க்காமல் சிபாரிசு செய்யமாட்டாராம்

பாடகர்: என் பாட்ட கேட்க இவ்வளவு தூரம் வரணுமா? எனக்குப் பெருமையா இருக்கு!

ரசிகர்: அவசரத்திற்குத் தற்கொலை செய்ய எந்தக் கருவியும் கிடைக்கலயே...!

ஒருவர்: தற்கொலை செய்ய தூக்கு கயிறு வாங்கப் போனீயே என்னாச்சு?

மற்றவர்: ரெண்டு கயிறு வாங்கினா ஒன்னு இலவசமாம். அதான் இரண்டு கயிறுக்கு ஆள் தேடிகிட்டிருக்கேன்.

தூதன்: போரிடாமலே வெற்றிக் கொடியை ஏற்றிக்கொள்ள கயிறு பரிசளித்த உங்களுக்கு எங்கள் அரசர் நன்றி தெரிவிக்கச் சொன்னார்

எதிரி அரசன்: போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடிய உங்கள் அரசனுக்கு நான் கொடுத்த தூக்குக் கயிறுடா அது.

ஒருவர்: ஹெல்மெட் போட்டு கிட்டு ஏன் தற்கொலை செய்யப்போறீங்க?

மற்றவர்: முகம் தெரியாமல் போனால் இன்சுரன்ஸ் கிடைக்காதாம்...!

காதலன்: தற்கொலை செய்யப் போகிற போது நகையோட போகனுமா?

காதலி: அப்பதான் பத்திரிக்கையில போடுற படம் அழகாயிருக்கும்.

# எட்கா எதற்கு?

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலும் கைச்சாத்திடப்படவுள்ள எட்கா உடன்படிக்கைக்கு உள்நாட்டில் எதிர்ப்புக்கள் வலுத்து வருகிறது. தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு வெளியிடுகின்றன. தெற்கு மக்கள் வீதிக்கும் இறங்கத் தொடங்கிவிட்டனர். எனினும், எட்கா தேவையென்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதை போல் தெரிகிறது. அதனால்த்தான் மக்களின் தீவிர எதிர்ப்பின் மத்தியிலும் எட்கா பேச்சுக்களை இந்தியாவுடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான எட்கா எனப்படும் பொருளாதார தொழில்நுட்ப உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வாய்ப்பு புதிய அரசு உருவானதிலிருந்தே அதிகரித்திருந்தது. எனினும், உள்நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்புக்கள்தான் அதனை இன்னும் தாமதித்து வைத்திருக்கிறது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் பல்வேறு தொழில்துறையினர் இலங்கை வரலாம். அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய வர்த்தகதுறை அமைச்சர் நிர்மலா சீதாராமனிடமும் இந்த விடயத்தை ஊடகவியலாளர்கள் கேட்டார்கள். இலங்கை அரசைப்போல இந்த கேள்வியை மௌனமாகத்தான் கடந்து செல்ல முயன்றார். ஆனால் விடாமல் கேட்டபோது, நழுவல் பதிலளித்திருந்தார். இந்தியர்கள் வருவதைபோல, இலங்கையர்களும் செல்லாமே என்பதே இந்த பதில்.

இன்று நாடுகளின் பூகோள எல்லைகளின் அர்த்தங்களையே சுருக்கியபடி உலகமயமாக்கல் பொருளாதாரம் பிரமாண்ட உருவெடுப்பதுடன், புதிய பொருளாதார எல்லைகளை வகுத்துக்கொண்டிருக்கிறது. சுயஉற்பத்தி, தன்னிறைவு போன்ற சில பத்தாண்டுகளிற்கு முந்தைய பொருளாதார சொல்லாடல்களின் அர்த்தங்களை முழுமையாக இழக்கச் செய்துவிட்டது. இந்த பொருளாதாரகொள்கையின் தீர்மானிக்கும், பெரும் பலமீட்டுபவர்களாக பெருமுதலாளிகள் இருப்பார்கள். அவர்களின் வர்த்தக எல்லைகளை விரிவுபடுத்த முதலாளிகளின் பிரதிநிதிகளாக அரசுகள் செயற்பட்டு கொண்டிருக்கும் காலம்.

இந்த பொருளாதாரகொள்கை முழுமையாக பிழையானது என்ற வாதம் சரியல்ல. ஆனால் நிவர்த்தி செய்யப்படாத பல குறைகள் உள்ளன. எட்கா மூலமாக இலங்கை என்னென்ன நலன்களை, பாதிப்புக்களை சந்திக்கும் என்ற முழுமையான விளக்கம் மக்களிடம் போய் சேர வேண்டும்.

ஏனெனில் எட்காவினால் நன்மையிருந்தால் மாத்திரமல்ல, தீமையெனில் அதையும் அனுபவிக்கப் போவது மக்களே. எட்கா தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன.

முதலாவது, பிரமாண்ட இந்திய சந்தையுடன் இலங்கையின் வலுவற்ற சிறிய பொருளாதாரம் நிபந்தனைகளின்றி இணைக்கப்பட்டால் என்ன நடக்கும்? சந்தேகமேயின்றி சொல்லலாம் இலங்கையின் பொருளாதாரம் என்ற ஒன்று காணாமல் போய்விடும். தனித்த பொருளாதார கொள்கை, ஸ்வதந்தன்மையை இலங்கை பேண முடியாது. நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையையும், தொழிலாளர் பாதுகாப்பையும் இலங்கை அரசு தீர்மானிக்காமல் இந்திய பெருமுலாளிகள்தான் தீர்மானிப்பார்கள்.

இந்த தன்மை வளர்ச்சியடைந்தால், அப்போது ஒரு மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்தால் என்ன நடக்கும்? ஐநா மனித உரிமைகள் பேரவையை கூட்டிவைத்து வருடக்கணக்கில் கூட்டி விளையாடிக்கொண்டிருக்க மாட்டார்கள். ஆட்சியை வீழ்த்த பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தலாம். நாடுகளின் நலன்களிற்காக உள்ளூர் அப்பாவிகள் விலை கொடுப்பார்கள்.

இந்தியாவின் தொழில்தேர்ச்சிமிக்க தொழிலாளர்களின் வருகை உள்ளூரில் பாதிப்புக்களை ஏற்படுத்தும். தொழில்தேர்ச்சிமிக்கவர்களின் வருகை தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் என்ற சாதகம் இருந்தாலும், ஏராளமானவர்களின் தொழிலிழப்பு அல்லது முறையான அங்கீகாரமின்மையை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இலங்கையிலிருந்தும் தொழிலாளர்கள் செல்லலாம் என்ற சரத்து உள்ளயென்ற சமாதானத்தின் ஆபத்து என்னவெனில், இலங்கையிலிருந்து கூலித்தொழிலாளர்கள்தான் செல்வார்கள்.

முக்கியமாக இலங்கையின் இயற்கை மற்றும் கனிய வளங்கள் சூறையாடப்படும். பொறுப்புக்கூற வேண்டிய உள்ளூர்பொறிமுறையே இயற்கைக்கு எதிராக அமைந்திருக்கும்போது, இலங்கைக்குள் வரும் பெருமுதலாளிகள் சூழல் ஆர்வலர்களாக இருப்பார்கள் என நினைப்பது முட்டாள்தனம். அதனால் அவதானத்துடனும் வரையறைகளுடனுமே எட்கா வரையப்பட வேண்டும்.

ஆனால் இதுபற்றியெல்லாம் தமிழ் சூழலில் உரையாடப்படவேயில்லை. எட்கா வேண்டாம் என சமஉரிமை இயக்கம் ஒட்டியுள்ள சுவரொட்டிகளிற்கு அப்பால் எட்கா பற்றி தமிழர்கள் மத்தியில் ஒன்றும் நடக்கவில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் பேசவில்லை. இதுபற்றிய பிரக்ஞையும் யாரிடமுமில்லை. எட்கா பற்றி யாரும் அலட்டிக்கொள்ளவில்லை.

உங்கள் பிரதிநிதிகளின் மௌனத்திற்கும் சேர்த்தே விலையை கொடுப்பீர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள் மக்களே!

**தீபம்**
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**எம்.ஏ.சுமந்திரன்**
**– த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர்**
வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு மொழிவாரியான அலகு உருவாக்கப்பட வேண்டும். ஆனால் அது முஸ்லீம் மக்களின் சம்மதத்தோடுதான் செய்யப்பட வேண்டும். முஸ்லீம் மக்களின் கூற்று ரிசாட் பதியுதீனின் கூற்றால் வரும் ஒன்றல்ல. அஷ்ரப் உயிருடன் இருந்தபோதே இணைப்பு தொடர்பில் தமிழர் விடுதலைகூட்டணியுடன் எழுத்துமூல ஒப்புதல்கூட வழங்கப்பட்டுள்ளது. அந்த ஒப்புதல் இன்றும் செல்லும் என்பதை முஸ்லீம் காங்கிரஸ் தொடர்ச்சியாக எங்களுக்கு வலியுறுத்தி வருகிறது.




**எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்**
**– இராஜாங்க அமைச்சர்**
முஸ்லீம்களுக்கு தனியானமாகாணம் இல்லாமல் ஒருபோதும் வடகிழக்கு இணைப்பை அஷ்ரப் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறான நிபந்தனைகள் ஏதுமின்றி தலைவர் அஷ்ரப் இணைப்பிற்கு ஒப்புதல் வழங்கியிருந்தால் அந்த உடன்படிக்கையை சுமந்திரன் எம்.பி வெளிப்படுத்த வேண்டும்.



**ரவூப் ஹக்கீம்**
**– அமைச்சர்**
முஸ்லீம்களின் அங்கீகாரம் இல்லாமல் வடக்கு கிழக்கு இணைக்கப்படலாம். முஸ்லீம் காங்கிரஸ் தலைமை அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டது என்ற கதை உலாவுகிறது. அதில் எந்த உண்மையும் இல்லை. வடக்கு கிழக்கு இணைப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்புகூட நடத்தப்படலாம். அது முழுநாட்டு மக்களதும் பெரும்பான்மை அபிப்பிராயத்தை கேட்பதாக இருக்கும். ஓரிரு நபர்களால் அதை நிறைவேற்ற முடியாது.



**உதய கம்மன்பில**
**– கூ.எதிரணி, பாராளுமன்ற உறுப்பினர்**
கூட்டு எதிரணியிலுள்ள வாசுதேவ நாணயக்காரவுக்கும் வடக்கு முதல்வருக்கும் இருக்கும் உறவுமுறையை சாதகமாக பயன்படுத்தி இரத்த உறவென கூறி சேறுபூசும் நடவடிக்கையில் சிலர் இறங்கியுள்ளனர். விக்னேஸ்வரனுடன் இணைந்து நாம் சதித்திட்டம் தீட்டவில்லை. வாசுதேவவின் மகன் விக்னேஸ்வரனின் மகளை மணம் முடித்திருந்தாலும், இலங்கை அரசியலில் வாசுவின் மகனுக்கும் எனக்கும் ஒரேநிலைப்பாடுதான் உள்ளது. எனவே சேறுபூசலில் உறவுமுறை காரணத்தை ஏற்க முடியாது.



**நாமல் ராஜபக்ச**
**– கூ.எதிரணி, பாராளுமன்ற உறுப்பினர்**
நாட்டில் எவ்வளவு பிரச்சனை இருந்தும் அரசுக்கு அது பிரச்சனையில்லை. இலட்சக்கணக்கான மக்கள் குடிநீரின்றி தவிக்கிறார்கள். அரசுக்கு அது தெரியவில்லை. எனது சகோதரனுக்கு பரிசாக கிடைத்த நிலம்தான் அரசுக்கு பெரிய பிரச்சனையாக உள்ளது. இந்த அரசு பதவிக்கு வந்ததும் முதலில் செய்தது சடலங்களை தோண்டியதும், நிலங்களை அளந்ததும்தான்.

## எண்ணிக்கை

**21** இலங்கையில் நாளாந்தம் உயிரிழக்கும் இதய நோயாளிகள்

**600** ஏக்கர் நிலம் 2 வாரத்தில் வலி.வடக்கில் விடுவிக்கப்படவுள்ளது

**5,021** கிழக்குமாகாணத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள்

**33,465** யாழ்மாவட்டத்தில் போசாக்கு குறைபாட்டுடன் வாழும் குடும்பங்கள்

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தெரிவாகும் தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk



# நிம்மதி கெடுக்கிறதா நிந்தவூர் மின்நிலையம்?

எம்.எம்.இஸ்மாயில்

நிந்தவூர், அட்டப்பளம் 23 ஆம் பிரிவில் இயங்கி வருகின்ற மின்னிலையம் பலத்த வாத பிரதிவாதங்களை தோற்றுவித்துள்ளது. கடந்த இரண்டரை வருடங்களாக இயங்கி வரும் இந்த தொழிற்சாலையால் மக்களும், வளங்களும் ' பாதிக்கப்படுவதாக பிரதேச மக்கள் குரல் கொடுப்பதையடுத்து சர்ச்சை வெடித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச்சபையின் கண்காணிப்பின்கீழ் அமைக்கப்பட்ட இந்த மின்நிலையம், முறையான அனுமதியை பெற்றுள்ளதென்ற வாதத்தை மக்கள் ஏற்பதாக இல்லை. Sustainable Energy Authorityன் வகைப்படுத்தலுக்கு அமைய மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி (Renewable Energy) வளங்களின் மூலம் மின் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாய கிராமமான நிந்தவூரில் மின்நிலையம் அமைக்கப்பட்டதன் மூலம் விவசாயம் முழுமையாக பாதிக்கப்படும் என்ற குரல்கள் வலுப்பெற்று வருகிறது. மின்நிலைய கழிவுகள் கொட்டப்படுவதால் நிலம் மாசடைகிறதென்பது அவர்கள் குற்றச்சாட்டு. நெல் ஆலைகளிலிருந்து பெறப்படும் உமியை மின்நிலையத்தில் பயன்படுத்துகிறார்கள். எரிந்த கரியை வயல்நிலங்களில் கொட்டுவதால் நிலமும், நீரும் மாசடைகிறதென்பது அவர்கள் குற்றச்சாட்டு. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை மின்நிலையத்தினர் மறுக்கின்றனர்.

"விவசாயக் கழிவுகள் நடுநிலை காபன் (Carbonnetural) என்று அழைக்கப்படுகிறது. அதாவது இவ்விவசாயக் கழிவுகள் பூரண தகனத்துக்கு உட்படுத்தப்படும்போது விடுவிக்கப்படும் $CO_2$ வாயு ஒளித்தொகுப்பு மூலமாக மீண்டும் புத்துயிக்கப்படுகிறது. இச்சமனிலை தொடர்ச்சியாக சூழலில் நடைபெறுகிறது. மாறாக புதுப்பிக்க முடியாத (non renewable energy) வளங்களான நிலக்கரி, பெற்றோலிய எரிபொருட்கள் மூலமாக மின் உற்பத்தி நடைபெறுகின்றபோது விடுவிக்கப்படுகின்ற அதிகளவான $NO_x$, $SO_2$, $CO$, $CO_2$ போன்ற வாயுக்கள் சூழல் சமநிலையை பேணாமலும், வெப்பத்தையும் அதிகரித்து சூழலையும் மாசு படுத்துகிறது. இதனாலேயே மத்திய சுற்றாடல் சபை (Central Environmental Authority ),Sustainable Energy Authority போன்ற அரச நிறுவனங்கள் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களைக் (Hydro, Wind, Biomass, Solar power Generation) கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கு பரிந்துரைக்கின்றது.

இதில் வெளியிடப்படும் புகையிலுள்ள தூசி துணிக்கைகள் இரண்டு வகையான பொறிமுறைகள் மூலம் (Mechanical filter, Bag filter) பல முறைகள் வடிகட்டப்பட்டு சுற்றாடல் சபையின் வரையறுக்கப்பட்ட நியமங்களுக்கமைய வெளியிடப்படுகிறது. அதேநேரம் ஆண்டுக்கு 03 தடவைகள் இவைகள் பரிசோதிக்கப்பட்டு மத்திய சுற்றாடல் சபைக்கு அறிக்கைகள் (Emission test report) சமர்ப்பிக்கப்படுகிறது.

இதில் வெளியிடப்படும் திண்மக்கழிவான சாம்பல் விவசாய உரமாகவும், நீர் தேங்கி நிற்கும் பள்ளக்காணிகளை நிரப்புவதற்கும் (Land filling), Ash block, Ash concrete சீமெந்து தயாரிப்பு போன்ற பிரயோசனமான கழிவாக சூழலுக்கு ஏற்ப பாதுகாப்பான முறையில் வெளியிடப்படுகிறது. அதேநேரம் எங்களது நிறுவனம் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இந்த திண்மக்கழிவை எவ்வாறு நேர்த்தியான நுகர்வுப் பொருளாக மாற்ற முடியும் என்பதனையும் ஆய்வு செய்து வருகிறது" என்கிறார்கள் மின்நிலையத்தினர்.


பிரதேச சுற்றுச்சூழல் ஆர்வலர்களோ மாறுபட்ட கருத்தை வைத்திருக்கிறார்கள். அரச நிறுவனங்களின் அனுமதியொன்றை வைத்து மின்நிலையத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்படியான விவகாரங்களில் அரச நிறுவன அனுமதி எப்படி பெறப்படுகிறதென்பது ஊரறிந்த இரகசியம் என்கிறார்கள்.

மின்உற்பத்தி நிலையத்திற்கு நிலக்கீழ் நீர் பெருமளவில் உறிஞ்சி எடுக்கப்படுகிறது. அளவு கணக்கற்ற நீர் உறிஞ்சி எடுக்கப்படுவதால் பிரதேசத்தின் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்துவிட்டதாக பிரதேசவாசிகள் கூறுகிறார்கள். நிலத்தடி நீர் அதிவேகமாக உறிஞ்சப்படுவதால் கடல்நீர் தரைக்கு கீழால் ஊடுருவும் வாய்ப்புள்ளதாகவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. மின்நிலைய கழிவுகளையும் வயல்களிற்கே செலுத்துகிறார்கள், அதனால் அறுவடையில் வீழ்ச்சியேற்பட்டுள்ளதென்பதும் அவர்கள் குற்றச்சாட்டு.

மின்நிலைய சுற்றாடலில் வாழும் மக்களிற்கு சிரங்கு தொற்று அதிகமாக ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. மின்நிலையத்திலிருந்து வெளியாகும் கார்பன் கூட்டத்து (சிலிக்கன்) மூலக்கூறு இதற்கான காரணமாக இருக்கலாமென்ற அச்சம் அங்கு பரவியுள்ளது.

மின்தேவை பூர்த்தியாகிறது, தொழில் வாய்ப்பு என்ற சுலோகங்களிற்கு அப்பால் மக்களின் கவலைகள் கரிசனைக்குட்படுத்தப்பட வேண்டும். மின்நிலையத்தால் தோல் வியாதிகள் ஏற்படுகிறது, மரங்களில் பாதிப்புதென்படுகிறதென பிரதேசவாசிகளால் பல படங்கள் சமூகவலைத்தளங்களில் பரவவிடப்படுகிறது. இந்த கவலைகள் தீர்க்கப்பட வேண்டும்.

மக்களை அச்சத்தில் வாழவைக்கும் எந்த தொழில்துறையும் மக்களிற்கானதாக இருக்க முடியாதென்பதே யதார்த்தம்.




தோல்நோய்க்கு இலக்கான ஒருவர்



தாவரங்களின் பாதிப்பு



வயலில் கொட்டப்பட்ட கழிவுகள்



நிந்தவூரில் மட்டும் 43 அரிசி ஆலைகள் உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் 150 அரிசி ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகளிலிருந்து நாளொன்றுக்கு சராசரியாக 332 தொன் உமிக் கழிவு வெளியேற்றப்படுகிறது. இக்கழிவு உமி 4500 Giga joule அல்லது 10.5Mw சக்தியை (அதாவது 04க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு ஒரு நாளைக்கு தேவையான 275000 மின் அலகுகள் unit) தன்னகத்தே கொண்டுள்ளது. மின்நிலையத்தில் கழிவு உமியை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி 48000 மின் அலகுகளை (unit) நாளொன்றுக்கு 16000 குடும்பங்களுடைய மின் சக்தி தேவையை பூர்த்தி செய்கிறது.

# புலிகளும் பாலகுமாரனும்



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 3

பாலகுமாரன் விடுதலைப்புலிகள் அமைப்பில் ஒரு கௌரவ உறுப்பினராக இருந்தார். பாலகுமாரனிற்கு புலிகள் கொடுத்த பணியென்றால் அது இறுதி யுத்த சமயத்தில்த்தான். ஆட்சேர்ப்பு. கட்டாய ஆட்சேர்ப்பிற்கு முதற்படியாக வன்னியை வலயங்களாக பிரித்து ஒவ்வொரு முக்கியஸ்தரை பொறுப்பாக நியமித்தார்கள். உடையார் கட்டு பகுதியில் பாலகுமாரன் செயற்பட்டார். வீதியில் செல்லும், வீடுகளில் உள்ள இளைஞர் யுவதிகளை ஒரு இடத்தில் ஒன்றாக சேர்த்து தீவிர பிரசாரம் செய்வார்கள். பாலகுமாரன் அதில் தீவிரமாக ஈடுபட்டார்.

பாலகுமாரன் வங்கி முகாமையாளராக இருந்தவர். புலோலி வங்கியில் பணிபுரிந்தார். புலோலி வங்கி கொள்ளையுடன் சிறைக்கு சென்று, விடுதலை அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட தொடங்கிவிட்டார்.

வடமராட்சியின் மந்திகை பகுதியை சேர்ந்த்வர் பாலகுமாரன். இடதுசாரி கருத்துக்களில் ஈடுபாடாகி, சீனசார்பு இடதுசாரி கட்சியுடன் நெருக்கமாக செயற்பட்டும் வந்தார். சமூக அக்கறை கொண்டவராகவும் விளங்கினார். அந்த சமயத்தில் ஆயுதவழியில் நம்பிக்கை கொண்ட இளைஞர்கள் உருவாக தொடங்கிவிட்டனர். ஆயுதவழியில் ஈர்ப்புள்ள இளைஞர்கள் எல்லா கிராமங்களிலும் கணிசமாக உருவாகிவிட்டனர். அப்படியான எண்ணமுடைய இளைஞர்களை சந்திக்கும்போது பாலகுமாரன் கொடுக்கும் ஆலோசனை, முதலில் உயர்தரம் வரை படித்து முடித்துவிட்டு அரசியலில் இறங்குங்கள். அரசியலிற்கு இறங்கும்போது முதிர்ச்சி அவசியம் என்பது.

வங்கி முகாமையாளராக இருந்தாலும், சமூக அக்கறை காரணமாக பகுதி நேரமாக சமூகக்கல்வி, வரலாறு கற்பித்துக் கொண்டிருந்தார். மந்திகை பகுதியில் இயங்கிய யாழ்ரன் என்ற தனியார்கல்வி நிறையத்திலும், வேறு சில இடங்களிலும் பகுதிநேரமாக கற்பித்தார். இதை வருமானம் ஈட்டும் தொழிலாக செய்யவில்லை. இப்படியாக பாலகுமாரனின் வாழ்வு நகர்ந்து கொண்டிருந்தது.

இந்த இடத்தில் ஒரு பின்னோக்கிய பார்வைக்கு செல்ல வேண்டும். அகிம்சைவழியால் எந்த தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாதென தீர்மானித்த இளைஞர்கள் 1970 களின் தொடக்கத்தில் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர். பாரம்பரிய தமிழ் அரசியல்வாதிகளின் போக்கு விடுதலைக்கு உதவாதென பகிரங்கமாக பேச தொடங்கி, பின்னாளில் பிரபல்யமான விடுதலை அமைப்புக்களின் தலைவர்கள் அப்போது சிறிய குழுக்களாக இயங்க தொடங்கினார்கள். சத்தியசீலன், பிரபாகரன், சிறீசபாரத்தினம், குட்டிமணி, தங்கத்துரை, பத்மநாபா போன்றவர்கள் அவர்களில் சிலர்.

அப்போது இளைஞர்களிற்கு புகலிடமாக இருந்தது தமிழ் மாணவர் பேரவை. அவர்கள் தமிழர்விடுதலைக்கூட்டணியின் செயற்பாடுகளிற்கு இடையூறாக இருக்கிறார்கள் என, தமிழர் விடுதலைக்கூட்டணியின் மறைமுக ஆதரவுடன் தமிழ் இளைஞர் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. எனினும், இளைஞர் பேரவை ஆரம்பித்த சில வருடங்களிலேயே குழப்பங்கள் ஆரம்பித்து விட்டது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் செல்லப்பிள்ளையாக செயற்படுகிறதென்ற அதிருப்தி உறுப்பினர்களிற்கிடையில் எழ ஆரம்பித்தது. விளைவு, 1975 இல் பேரவையிலிருந்து பலர் வெளியேறி ஈழவிடுதலை இயக்கம் என்ற அமைப்பை ஆரம்பித்தனர். புஸ்பராசா, முத்துக்குமாரசாமி, சுந்தர், வரதராஜபெருமாள் போன்றவர்கள் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். யாழ் நகரத்திலுள்ள ரிம்மர் மண்டபத்தில் மாநாடு நடத்தி, தமிழீழ விடுதலை இயக்கம் பற்றிய பகிரங்க அறிவித்தலை வெளியிட்டனர்.

எரிமலை என்ற வாராந்த பத்திரிகையையும் வெளியிட்டுக் கொண்டிருந்தனர். இந்த சமயத்தில் 1975 இன் பிற்பகுதியில் யாழ்ப்பாண மேயர் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் பதினொருவர் கொல்லப்பட்டதற்கு துரையப்பாதான் காரணம், அவர் கொல்லப்பட வேண்டியவர்தான் என்ற கருத்தை தமிழர்விடுதலைக் கூட்டணி மேடை தோறும் பரப்பி வந்தது. இந்த சமயத்தில் துரையப்பா கொல்லப்பட்டார். துரையப்பாவை கொன்றது இளைஞர் பேரவை, தமிழீழ விடுத இயக்கங்களை சேர்ந்தவர்களாகத்தான் இருக்கலாமென கருதிய பொலிசார் இரண்டு அமைப்புக்களின் உறுப்பினர்களையும் தேடித்தேடி வேட்டையாடினார்கள்.

தமிழீழவிடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் பெரும்பாலானவர்கள் கைதாகி சிறைக்கு சென்றனர். அதன் மத்தியகுழுவிலிருந்த இரண்டு பேரும், செயற்பாட்டாளர்கள் சிலரும்தான் தப்பித்து தலைமறைவாக இருந்தனர்.

ஏற்கனவே வாராந்தம் எரிமலை யென்ற சஞ்சிகையையும் வெளியிடுகிறார்கள். தலைமறைவு வாழ்க்கைக்கும் பணம் தேவை. பெரும் பணத்தட்டுப்பாடு. என்ன செய்யலாமென யோசித்தபோதுதான் வங்கிக் கொள்ளைக்கு திட்டமிட்டமிட்டார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்தது புலோலி வங்கி. பாலகுமாரன் முகாமையாளர்.

ஈழவிடுதலை இயக்க உறுப்பினர்கள் பாலகுமாரனை சந்தித்து பேசினார்கள். தீவிர எண்ணமுடைய இளைஞர்களுடன் அவருக்கிருந்த அபிமானம் காரணமாக விடயம் சுலபமாக முடிந்தது. குறிப்பிட்ட தினமொன்றில் வங்கியை கொள்ளையிட அனுமதித்தார். அந்த வங்கியில் பாலகுமாரன் தவிர்ந்த இன்னும் இரண்டு பணியாளர்கள் இருந்தார்கள். அவர்களிற்கு விடயம் தெரியாது.

வங்கிக்கொள்ளையின் பின்னர் காவல்த்துறை தீவிர விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை கைது செய்தது. பாலகுமாரனிற்கு விடயம் ஏற்கனவே தெரியும். அதனை பொலிசார் கண்டறிந்து சிறை சென்றார். பின்னர் ஈரோஸ் அமைப்புடன் செயற்பட்டார். ஈரோஸ் அமைப்பில் இருந்தபோது அவர் இயக்கங்களுடன் ஏட்டிக்குப் போட்டியான அணுகுமுறை கொண்டவரல்ல. அதனால் 1990இல் ஈரோஸை கலைத்துவிட்டு புலிகளுடன் இணைவது சுலபமானது.

அதன்பின்னர் அவரை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் என விளித்தார்கள். அரசியல்த்துறையுடன் இணைந்து இருந்தார். கூட்டங்களில் பேசுவது, நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதென அவரது நாட்கள் கழிந்தன.

அவர் போர்க்களத்திற்கு சென்றவரல்ல. இறுதி யுத்தம் தீவிரம் பெற்று, முதலாவது பாதுகாப்பு வலயம் அறிவிக்கப்பட்டது. உடையார்கட்டு சந்தி தொடக்கம் கைவேலி வரையான பகுதி பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. இந்தபகுதியில் உள்ள வள்ளிபுனம் பாடசாலை மருத்துவமனையாக்கப்பட்டது. 2009 ஜனவரி இறுதியில் பாதுகாப்பு வலயம் மீது இராணுவம் அகோர செல் தாக்குதல் நடத்தியது. இதில் 50 வரையான மக்கள் கொல்லப்பட்டதாக அப்போது ஊடகங்களில் செய்தி வெளியானது. மருத்துவமனையாக இருந்த வள்ளிபுனம் பாடசாலைக்குள் யாரையோ பார்த்துவிட்டு வந்த பாலகுமாரன் வாசலில் விழுந்த செல்லரால் கையில் காயமடைந்தார். இறுதி வரை அந்த காயத்துடனேயே வாழ்ந்தார்.

குடும்பத்துடன் விடுதலைப்புலிகளிடமிருந்து தப்பி இராணுவத்திடம் செல்வதற்கு அவர் முயன்றபோதுதான் அவரது குடும்பத்தில் இரண்டாவது நபர் காயமடைந்தார்.

(தொடரும்)





சிறீசபாரத்தினம், பிரபாகரன், பாலகுமாரன், பத்மநாபா



அல்பிரட் துரையப்பா

### குறிப்பு

1. புலோலி வங்கிக்கொள்ளை வழக்கில் தற்போதைய வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசாவும் கைதாகியிருந்தார். தமிழீழ விடுதலை இயக்கத்துடன் அவரும் இணைந்து செயற்பட்டிருந்தார்.
2. 1977 இல் தமிழீழ விடுதலை இயக்கம் முழுமையாக செயலிழந்தது. அந்த சமயத்தில் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தர் முத்துக்குமாரசாமியை சந்தித்து, தமிழீழ விடுதலை இயக்கம் என்ற பெயரை பயன்படுத்த ஒப்புதல் பெற்றனர். அதன்பின்னரே தம்முடன் செயற்பட்டவர்களை ஒன்றிணைந்து தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) என்ற இயக்கத்தை ஆரம்பித்தனர். அதன் இப்போதைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.



# “பிரபாகரன் இஸ் ஏ கிரேட் லீடர்”

## கீர்த்தி சுரேஷ் சொல்கிறார்

தமிழகத்திலிருந்து
யமுனா பாக்கியநாதன்

லண்டன்ல படிச்சேங்க. அங்க நிறைய ஈழத் தமிழர்கள் நண்பர்களானார்கள். இன்னிக்கும் என் நெருங்கிய நண்பர்கள் வட்டத்தில ஈழத் தமிழர்கள் உள்ளனர். தீபம். ஈழத்து பத்திரிகை என நாம் ஆரம்பித்ததுமே சர சரவெனப் பேச ஆரம்பிக்கிறார் கீர்த்தி சுரேஷ்.

**சிவகார்த்திகேயன் படம்... தனுஷ் படம், விஜய் படம்.. அல்லு அர்ஜுன் படம். கீர்த்திதான் நம்பர் ஒன் ஹீரோயினா?**

நீங்கவேற எனக்குப் பயமா இருக்குங்க. எல்லோராலும் கவனிக்கப்படுகிறேன்



என்பதை நினைக்கப் பதட்டமாக உள்ளது. ஆண்டவன் அனுக்கிரகம்தான்... வேறென்ன சொல்ல. சடுதியாக நடிக்க வந்தேன். திரும்பிப் பார்த்தால் விஜய் படம். என்னை நம்பிப் பணம் போடுகிறார்கள் என்பதால் பொறுப்பும் வருகிறது. அப்பா தயாரிப்பாளர் என்பதனால் தயாரிப்பாளர்களின் வலி தெரியும். அவங்க தோற்கக் கூடாது. அவங்க நல்லா இருந்தால்தான் நாங்கள் நன்றாக இருப்போம்.

**தொடரி படத்தில் நடித்த அனுபவம்?**

ஷூட்டிங்கில் ஒருநாள் பிரபு சாலமன் சாரிடம் இவ்வளவு நடிகைகள் இருந்தும் ஒரு படம் கூட வெளியாகாத என்னை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள் எனக் கேட்டேன். 'உன் சிரிப்பில்.. அழகும், அப்பாவித்தனமும் கொட்டிக்கிடக்கிறதுமா' என்றார். மகிழ்ச்சி.

**தனுஷ்...**

தனுஷ் போன்ற அசத்தலான நடிகர்களுடன் நடிக்கும்போது நடிப்பைக் கற்றுக் கொள்ளாலாம். ஷூட்டிங்கில் தனுஷ் நடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். பல நடிப்புப் பயிற்சி வகுப்புகளுக்கு போனதற்கு அது சமானமாக இருக்கும்.

**உங்களைப்போல நன்றாக தமிழ் பேசத் தெரிந்த நாயகியைப் பார்த்து நாட்களாகி விட்டதே...**

தமிழ் என் தாய்மொழி. அப்பா மலையாளம். அம்மா, அக்கா, பாட்டியுடன் தமிழில்தான் பேசுவேன். அப்பாவின் உறவினர்களுடன் மட்டும்தான் மலையாளத்தில் பேசுவேன். தமிழில் எழுதப் படிக்கக் கூடத் தெரியும். ஆனால், நடிக்க வந்த பிறகுதான் தமிழ் பேசுவதன் அருமையைப் புரிந்து கொண்டேன். படப்பிடிப்பில் லைட் பாய் வரைக்கும் நம்ம பொண்ணு என அன்பாக தமிழில் பேசுகிறார்கள். அது ஒரு வரம்.

**நடிக்க வந்தது தற்செயலானதா இல்லை... திட்டமிட்டதா?**

படிப்புத்தான் உனக்கு சோறு போடும் என வீட்டில் சொல்லி லண்டனுக்கு அனுப்பி படிக்க வைத்தார்கள். நடிப்பை தேடிப் போகக் கூடாது அதுவாக உன்னைத் தேடி வரவேண்டும் என்றார் அப்பா.. சரி என்னை வைத்துப் படம் தயாரிங்க என அப்பாவிடம் கேட்டேன்.. அந்த ரிஸ்க் எல்லாம் எடுக்க முடியாதும்மா என்றார். கல்லூரியில் மூன்றாம் வருடம் படித்துக் கொண்டிருக்கும் போது பிரியதர்ஷன் அங்கிள் அழைத்து கீதாஞ்சலி படத்தில் நடிக்கும் வாய்ப்பைக் கொடுத்தார். மோகன்லால் உட்பட அந்தப் படத்தில் நடித்த அனைவருமே அப்பாவின் நண்பர்கள். அதனால் அப்பா ஒப்புக்கொண்டார். முதல் படத்திலேயே இரட்டை வேடம் என மிகவும் சவாலாக அமைந்த படம் அது.

**அம்மா மேனகா என்ன அட்வைஸ் கொடுத்தார்?**

'யாரையும் காக்க வைக்கக் கூடாது. படப்பிடிப்பில் யாருடைய மனமும் புண்படாமல் நடந்து கொள்ள வேண்டும். எல்லோரையும் சமமாக மதிக்க வேண்டும் என்றார். அதை வேத வாக்காகக் கொண்டு நடந்து வருகிறேன்.

**நீங்கள் தமிழில் நடித்த ஹீரோகளைப் பற்றி சொல்லுங்கள்?**

விக்ரம் பிரபு அதிகமாகப் பேச மாட்டார். அமைதியாக இருப்பார். எப்போதாவது சில வார்த்தைகள் சொல்லிக் கலாய்ப்பார். விக்ரமுடன் நடிப்பதில் உள்ள மகிழ்ச்சி என்னவென்றால், எனது அம்மா சிவாஜியுடனும், பிரபுவுடனும் நடித்துள்ளார். அந்தப் பாரம்பரியத்தை நான் காப்பாற்றுகிறேன். தமிழில் என் முதல் படமே சிவாஜி குடும்பத்தில் இருந்து வந்த ஒருவருடன் நடிக்கக் கிடைத்தது அதிஷ்டம். எனக்கே தெரியாது... பிரபு சார்தான் சொன்னார், அவரின் முதல் படத்தில் தங்கை வேடத்தில் நடித்தது எனது அம்மாவாம்.

சிவகார்த்திகேயன் ரெம்ப ஜாலி, அவரும் சூரி அண்ணாவும் சேர்ந்து கண்ணீர் வரும் வரைக்கும் கலாய்ப்பார்கள். தனியே பாராட்டுவது மட்டும் இல்லாமல் சரியாக நடிக்கா விட்டால் இப்படி நடிக்கலாமே எனக் கூறுவார்.

பாபி சிம்ஹா அமைதியானவர். ஆனால், அற்புதமான நடிகர். நல்ல நண்பர். தனுஷ் நடிப்புப் பிரளயம். விஜய் சார் ஷூட்டிங்கில் அதிகம் பேச மாட்டார். ஆனால், ஆக்ஷன் சொன்னதும் அவரின் அதகளம் இருக்கே அதை வார்த்தைகளில் சொல்ல முடியாது

**நிறைய காதல் அழைப்புகள் வந்திருக்குமே?**

நீங்க வேற. ஸ்கூல் நாட்களில் ஒருத்தன் கூட பார்த்ததே இல்லை. நான் அவ்வளவு கேவலமாக இருக்கேனா என நினைப்பேன். வெறுப்பாக இருக்கும். நான் படித்த காலேஜில் பசங்க கம்மி. அங்கேயும் பெரிதாக அழைப்புகள் வரவில்லை.

**என்ன கவலையாக சொல்கிறீர்கள்..**

ஆமாங்க.. வேற எப்பிடி சொல்ல சிரிக்கிறார்.

**உங்க ட்ரீம் பாய் எப்படி இருக்க வேண்டும்?**

பணம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பாசமா இருக்கணும். என்னை நல்லாப் பாத்துக்கணும். அது மட்டும் போதும்.

**இத்தனை படங்களில் நடிக்கிறீர்கள்... ஒரு படத்தின் ஷூட்டிங்கை கூடவா இலங்கையில் வைக்க கூடாது?**

இலங்கையில் ஷூட்டிங் வைத்தால் அதை

> **தமிழ் என் தாய்மொழி. அப்பா மலையாளம். அம்மா, அக்கா, பாட்டியுடன் தமிழில்தான் பேசுவேன். அப்பாவின் உறவினர்களுடன் மட்டும்தான் மலையாளத்தில் பேசுவேன். தமிழில் எழுதப் படிக்கக் கூடத் தெரியும்.**



தமிழ் பகுதிகளில் வைத்தால் சந்தோசப் படுவேன்.

**இலங்கை என்றதும் உடனடியாக என்ன நினைவுக்கு வரும்?**

இதொரு கேள்வியா.. நான் உட்பட இந்தியாவில் இருக்கும் எல்லா தமிழர்களிற்கும் பிரபாகரன்தான் நினைவுக்கு வருவார். பிரபாகரன் இஸ் ஏ கிரேட் லீடர். எனக்கு நிறைய ஈழ ப்ரெண்டஸ் இருக்காங்க. அவர்கள் எல்லோரும் பிரபாகரனை கடவுள் மாதிரி பார்ப்பதை கண்டிருக்கிறன்.


**ஈழத்திலிருந்து வரும் சினிமாக்களை பார்த்திருக்கிறீர்களா?**

அண்மையில் பார்த்ததில்லை. லண்டனில் இருந்தப்போ. தீபம் ரீவி பார்த்திருக்கன். அதில சில சோட் ப்லிம்ஸ் பார்த்திருக்கிறன். இப்ப அதற்கான வாய்ப்பு கிடையாது.

**எப்போதும் சிரித்துக்கொண்டுதான் இருப்பீர்களா?**

நாம் சிரித்தால் தானே மற்றவர்களை சிரிக்க வைக்க முடியும். சிரித்த முகம் இலகுவாக மனதில் பதிந்து விடும்.

சிரித்தபடி விடை தருகிறார் கீர்த்தி...




# எல்லாமே இந்தியா தானா?

நம்மாழ்வார்

யாழில் இந்திய நிதியுதவியுடன் கலாசார மத்திய நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான முன்னோடிப் பணிகள் ஆரம்பித்து விட்டன. யாழ் நூலகத்திற்கு அண்மையில் அமையவுள்ளது. இந்த திட்டம் முன்னைய மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இழுபறியில் இருந்தது. அந்த கலாசார மண்டபத்தின் ஒரு பகுதியை இந்தியா கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்பது மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் ஏற்றுக்கொள்ளப்படாததும் இழுபறிக்கு முக்கிய காரணம்.

எது எப்படியோ ஆட்சி மாற்றத்தின் பின் கலாசார மத்திய நிலையம் அமைப்பது உறுதி செய்யப்பட்டு, திட்டங்கள் ஆரம்பித்து விட்டன. கலாசார மத்திய நிலைய விவகாரத்தில் மட்டுமல்ல, இந்தியாவின் பிராந்திய நலன்களிற்கு இடையூறாக நடந்தால் என்ன நடக்குமென்பதை மகிந்த ராஜபக்ச 2015 ஜனவரியில் கற்றுக்கொண்டு விட்டார்.

உலகை பங்குபோட்டுக்கொள்ளும் வல்லரசுகளின் போட்டியில் சிறிய தேசிய இனங்களின் அடையாளங்கள் கரைந்து கொண்டு செல்கின்றன. தனி அடையாளங்களை பேண எத்தனிக்கும் சிறிய தேசிய இனங்களும், சிறிய நாடுகளும் காணாமல் போய்விடும். இலங்கையில் இதற்கு இரண்டு உதா



ரணங்கள். ஒன்று விடுதலை புலிகள். மற்றது மகிந்த ராஜபக்ச. இந்திய பிராந்திய வல்லரசு என்பது தனியே தமிழர்களின் தனிஅடையாளங்களிற்கு மட்டும்தான் எதிராக இருந்ததென்று யாரும் கணக்கிட தேவையில்லை. இனங்களின் அடையாளங்களை பேண எத்தனிப்பவர்கள் அத்தனை பேருக்குமே பிராந்திய வல்லரசுகள் எதிராளிகள்தான்.

அமெரிக்காவை சுற்றியுள்ள தென்னமெரிக்க நாடுகள், ரஷ்யாவை சுற்றியுள்ள நாடுகள், இந்தியாவை சுற்றியுள்ள நாடுகள் எல்லாம் இந்த சிக்கலை எதிர்கொள்கின்றன.

இன்றைய திகதியில் யாழ்ப்பாணத்தில் அதிக நிகழ்வுகளில் கலந்துகொள்பவர் விக்னேஸ்வரனோ, ரெஜினோல்ட் கூரேயோ அல்ல. யாழிலுள்ள இந்திய துணைத்தூதர் நடராஜன்தான். உதவி நிகழ்வுகள், கலை கலாசார நிகழ்வுகள், பொது நிகழ்வுகள் என அனைத்திலும் பிரசன்னமாகிறார். ஆலயங்களிற்கு உதவிகள் செய்கிறார்கள். பரத நாட்டிய நிகழ்வு, இசைக்கச்சேரி, பட்டிமன்றம் நடக்கிறது. ஏன்.. அம்பேத்கரின் நினைவுநாள் கூட நடக்கிறது. அண்மையில், யாழில் அம்பேத்கர் நினைவுநாள் நடந்தது. அதில் கலந்துகொண்டவர்களில் பலருக்கு அம்பேத்கர் யாரென்பதோ, அவருக்கும் இலங்கைக்குமென்ன சம்பந்தமென்பதோ தெரியாது. இசைநிகழ்ச்சி பார்க்க போனார்கள்.

இப்படி இந்தியா மெதுவாக தமிழர்களிற்குள் தனது பிடியை இறுக்குகிறது. இது வெளிப்படையான கலை பண்பாட்டு பிடி. சாதாரணசனங்கள் அறிந்து கொள்ளாமல் அரசியல்பிடியை நன்றாகவே இறுக்கி விட்டது. இந்தியா தீர்வு தரும் என்று மக்கள் பிரதிநிதிகள் உளமார நம்பி, அதை நம்புமாறு மக்களிடமும் கேட்பதன் இரகசியம் இதுதான்.

நம்மத்தியிலுள்ள மூதியவர்களை பாருங்கள், அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்திய மனநிலையால் ஆனவர்கள். இந்திய சினிமா, இந்திய கலைகள், இந்திய சஞ்சிகைகள், இந்திய தொலைக்காட்சி அலைவரிசை என்றுதான் வாழ்கிறார்கள். இலங்கை தொலைக்காட்சி அலைவரிசையை பார்க்காமல் சன் நியூசை பார்ப்பவர்கள் நம்மத்தியில் எத்தனை பேர்? நம்மவர்களின் கலை, இலக்கிய, பண்பாட்டு வெளிப்பாட்டிற்கு இந்திய ஆதிக்கம்தான் உடனடி எதிரியாக இருக்கிறது.

சுதந்திரத்திற்கு பின்னரான தமிழ் அரசியலும் பெரிதும் இந்திய சாயலிலேயே உருவாகியது. தமிழகத்தின் உணர்ச்சிமிக்க மேடைப்பேச்சு அரசியலை தமிழ் அரசியல்வாதிகள் கடத்தி வந்தார்கள். உதயசூரியன் சின்னத்தின் பின்னணியிலும் ஏதாவது ஈர்ப்புக்கள் இருந்திருக்கலாம்.

அதனால்த்தான் நமது அரசியல்வாதிகள் 'ஈழத்து காந்தி' என செல்வநாயகத்தை அழைத்தார்கள். ஈழத்து சௌந்தரராஜன், ஈழத்து ஞ் என ஏராளமானவர்களை கண்டிருப்பீர்கள். இப்படியாக சுயஅடையாளங்களை விட, இந்திய அடையாளம் மேலானதென்ற எண்ணம் நம்மவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஆயுதமோதல்கள் உச்சமடைந்திருந்த சமயத்தில் நிகழ்ந்த குறிப்பிடும்படியான விடயங்களில் ஒன்று, சுய அடையாளங்களை மீட்டெடுத்தது. இந்திய சினிமா, இந்திய மனோபாவத்திலிருந்து இளம் சமூகம் குறிப்பிடும்படி விலகியிருக்க தொடங்கிய காலகட்டம் இது. 80, 90களின் பிள்ளைகள் இதற்குள் அடக்கம். எனினும், யுத்தம் முடிந்த பின்னர் மீண்டும் இந்திய மாயை உருவாக்கம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனை யாழிலுள்ள இந்திய துணைதூதரகம் கச்சிதமாக செய்து வருகிறது.

இந்தியாவுடன் பாரம்பரிய தொடர்பு, தொப்புள்கொடி உறவு என்றெல்லாம் சொல்லி நம்மவர்கள் சுய சமாதானமடையலாம். ஆனால் அடையாளமிழப்பென்பது ஒரு இனம் கொடுக்கும் ஆகப்பெரிய விலை. தமிழ் அடையாளங்களை பேணுவதை நோக்கமாக கொண்டுதான் எழுக தமிழ் அண்மையில் நடந்தது. இதற்காகத்தான் நீண்ட போராட்டத்தில் தமிழினம் ஈடுபடுகிறது. எனினும், இந்திய அடையாளங்களை விரும்பி ஏற்கிறது. இது எவ்வளவு பெரிய தர்க்க முரண்?



▶ ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனத்தின் வடக்கு கிழக்கு மாகாண இளைஞர் பன்மைத்துவம் என்னும் செயற்பாட்டின் அடிப்படையிலான விளையாட்டு கலை நிகழ்வுகளும் திருகோணமலையில் நடத்தப்பட்டது. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.



# எழுக தமிழ்: இது வீதியில் நடக்காதவை!

அன்ரனி பாலசிங்கம்


கடந்த வாரம் எழுக தமிழ் பேரணி யாழில் நடந்து முடிந்திருக்கிறது. வட்டுக் கோட்டை தீர்மானம் போல, சுதுமலை பிரகடனம் போல, பொங்குதமிழ் போல, எழுக தமிழும் ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் பேசப்படும் ஒன்றாக இருக்கும். காரணம், அது பேசிய அரசியல் மற்றும் மக்கள் திரள்.

எழுக தமிழ் பேரணி கிட்டத்தட்ட ஒரு பாஸ்ட் பூட். மிக அவசரமாக தயாரிக்கப் பட்டது. அதன் ஒழுங்கமைப்பில் இருந்த போதாமைகள் தமிழ் அரசியல் தலைவர்கள், கட்சிகளின் நிர்வாக ஆளுமைத்திறனிற்கு இறுதி எடுத்துக்காட்டு. இவை எதனாலும், அந்த மக்கள் எழுச்சியை கொச்சைப்படுத்த முடியாது. அந்த மக்கள் எழுச்சியின் பின்னால் நடந்த சம்பவங்களை வெளிப்படுத்துவதே இந்த கட்டுரையாளனின் நோக்கம்.

பல்லாயிரம் ' மக்கள் இலட்சியத்தால் ஒன்றுபட்டு வீதிக்கிறங்கினார்கள், நல்லூரடி மற்றும் பல்கலையிலிருந்து பேரணியாக கிளம்பி முற்றவெளி மைதானத்தில் எழுக தமிழ்பிரகடனம்செய்தார்கள் என்பதெல்லாம் விலாவாரியாக செய்தியாகிவிட்டது. செய்தியாகாத, வீதியில் பகிரங்கமாக நடக்காத, கட்டாயம் பேசப்பட வேண்டிய சில விவகாரங்கள் இவை.

எழுக தமிழ் ஒரு பாஸ்ட் பூட். இரண்டு மாதங்களிற்கு உட்பட்ட தயாரிப்பு. எழுக தமிழிற்கு பல நோக்கங்கள் இருந்தன. அவற்றில்





ஒன்றைத்தவிர மற்றைய அனைத்தையும் பகிரங்க பிரகடனமாக்கியுள்ளனர். ஒன்றை பகிரங்கமாக பேசவில்லை. ஏற்பாட்டாளர்கள் பெரும்பாலானவர்களுடன் இந்த கட்டுரை யாளர் தனிப்பட்ட நட்புரீதியில் பேசியபோது புலப்பட்ட ஒன்று, இரகசிய அரசியலமைப்பு உருவாக்கம். அரசியலமைப்பு உருவாக்கத்தில் என்ன நடக்கிறதென்பது தெரியவில்லையென மேடையில் பேசப்பட்டிருந்தாலும், இந்த அரசியல் பெரியது. மக்கள் நினைப்பதைவிட ஆழமானது.

அரசியலமைப்பு உருவாக்கத்தில் சில பேரங்கள் நடக்கிறதென்றும், தமிழர் பிரதி நிதிகள் தனிப்பட்டரீதியில் அதற்கு துணை போகிறார்கள் என்று அச்சப்பட்டார்கள். கடந்த தேர்தல் முடிவு தமிழ்தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த மற்றைய கட்சிகளிற்கு உவப்பில்லாமல் அமைந்திருந்தது. இது தமிழரசுக்கட்சி பிரமுகர்களிற்கு உற்சாகத்தை கொடுத்துள்ளதாகவும், • அரசியலமைப்பு விவகாரம் வேறு தேர்தல் வேறு என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்பதை புரியவைக்க வேண்டுமென்று பேசினார்கள்.

இலங்கை வரலாற்றில் அரசியல் சாசன உருவாக்கத்தில் முதன்முறையாக தமிழர்கள் பங்கேற்பதால், தமிழர்களின் அபிலாசைகளை முழுமையாக உள்ளடக்கும் விதத்தில் சாசனம் அமைய வேண்டும், அதற்கு பகிரங்க கலந்துரையாடல்கள் நிகழ வேண்டுமென்பது ஏற்பாட்டாளர்களின் நிலைப்பாடு.

தமிழ் மக்கள் பேரவை, புளொட், ஈ.பி.ஆர். எல்.எவ், தமிழ்தேசிய மக்கள் முன்னணி என்பன பேரணிக்கான முன்னேற்பாடுகளை செய்தன. கூட்டமைப்பின் நான்கு கட்சிகளில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் பேரணிக்கு ஆதரவு. தமிழரசுக்கட்சி ஆதரவில்லை. ரெலோதான் மக்கள் அதிருப்தியை சம்பாதித்த கட்சி.

செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைப் பிற்குள் கழுவும் மீனில் நழுவும் மீன் அரசியல் தான் செய்கிறார். பேரணிக்கு போனால் தமிழரசுக்கட்சி கோபிக்கும். போகாவிட்டால் மக்கள் எழுச்சியில் பங்கேற்கவில்லையென்ற பழிச்சொல் கிடைக்கும். பேரணிக்கு இரண்டுநாள் முன்னர், கருணாநிதி பாணியில் ஆதரவு மாதிரியான அறிக்கையொன்றை வெளியிட்டுவிட்டு, தலைவர்கள் வீட்டில் இருந்து விட்டார்கள்.

இப்படியான பின்னணியில் மக்கள் எவ்வளவு கூடுவார்கள் என்ற சந்தேகம் இருந்தது. இருக்கும் கட்சிகளில் அதிக சனத்தை திரட்டும் சக்தி கொண்டதாக தமிழரசுக்கட்சியே இருந்தது. ஆயினும் அந்த பேரெழுச்சி நிச்சயம் அவர்களை சில விடயங் களிலாவது சுயபரிசோதனை செய்ய செய்யும். கட்டுரையாளரின் மதிப்பீட் டின்படி அன்றைய பேரணியில் ஒன்பதாயிரத் திற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டி ருக்கலாம். சுயாதீன மதிப்பீட்டாளர்கள் பன்னிரண்டாயிரம் வரை அதிக பட்ச எண்ணிக்கையாக மதிப்பிடுகிறார்கள்.

ஏற்பாட்டாளர்களுடன் பேசிக்கொண்டி ருந்த போது, பேரணிக்கு ஒருவாரம் முன்பிருந்தே குழப்பும் நடவடிக்கைகள் பற்றிய புகார்களை சொல்லத்தொடங்கிவிட்டார்கள். தமிழரசுக்கட்சியின் சில பிரமுகர்கள் மீதும் ஏற்பாட்டாளர்கள் விரல் நீட்டுகிறார்கள். அதில் இன்னொரு வில்லங்கம், தானாக வந்து ஒட்டிக்கொண்ட, ஈ.பி.டி.பி. பேரணியில் நாங்களும் வருகிறோம் என ஈ.பி.டி.பியும் புறப் பட்டது. ஈ.பி.டி.பி பேரணியில் இணைந்து, டக்ளஸ் தேவானந்தாவின் படத்துடன் யாரும் கூட்டத்தில் கலந்தால், முழுதாக அடிபட்டு விடும் என்பது ஏற்பாட்டாளர்களிற்கும் தெரியும். ஆனால் பன்மைத்துவம் பேசிக் கொண்டு, நீங்கள் வரக்கூடாதென சொல்ல முடியாமல் ஏற்பாட்டாளர்கள் நெளிந்து கொண்டிருந்த சமயத்தில்த்தான், ஏற்பாட்டில் பங்கேற்ற ஒரு அமைப்பு ஈ.பி.டி.பி பங்கு பற்றக்கூடாதென அறிக்கைவிட்டு, விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ஈ.பி.டி.பி பேரணியை குழப்பும் நடவடிக் கையில் ஈடுபடுகிறதென்ற சந்தேகம் ஏற்பாட் டாளர்களிடம் இருந்தது. ஈ.பி.டி.பி பங்கேற்றால் போராட்டம் மக்களிடம் எடுபடாமல் நீர்த்துவிடும் என்ற ஆலோசனை அரசமட்டத்தில் உருவாகி, அங்கிருந்து கடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் நம்பினார்கள். ஜனநாயகப் போராளிகள் ஆதரவளிப்பதாக ஒட்டப்பட்ட சுவரொட்டி களின் பின்னணியும் இதுதான் என்பது ஏற்பாட்டாளர்களின் சந்தேகம். வலுவான நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் ஈ.பி.டி.பி பேரணியை நீர்த்துபோக செய்ய அனைத்து முயற்சியும் செய்யுமென்ற அச்சம் ஏற்பாட் டாளர்களிடம் இறுதிவரை இருந்தது.

எழுக தமிழிற்கு போட்டியாக பேரணி யொன்றை செய்யும் முடிவை ஈ.பி.டி.பி எட்டியபோது, அதற்கு கட்சி உயர்மட்டத்தில் ஆதரவு கிடைக்கவில்லையென்பது உள்வீட்டு தகவல். அவசியமான மக்கள் போராட்டத்தை நீர்த்துபோக செய்யும்விதமான காரியங்களில் இனியும் ஈடுபடகூடாதென பலர் வற்புறுத்தியபோதும், கட்சி தலைவர் தலைமையில் போட்டி பேரணி முடிவு எட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

எழுக தமிழிற்காக முன்பதிவு செய்யப் பட்ட தனியார் பேருந்துகளை அதிகவிலை கொடுத்து ஈ.பி.டி.பியினர் தமது தேவைக்கு எடுத்துக்கொண்டுவிட்டதாக பேரணியி லன்றுகாலையில் ஏற்பாட்டாளர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர், வடக்கு போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் மேலதிக பஸ்களை பெற்றுக்கொள்ள உதவியுள்ளார்.

பேரணியிலன்று ஈ.பி.டி.பியின் திட்டம் என்னவென்பது ஏற்பாட்டாளர்களிற்கு தெரியவில்லை. சிறிதர் தியேட்டர் சுற்று வட்டாரத்தில் ஏற்பாட்டாளர்கள் ஒரு கண் வைத்திருந்தார்கள்.

நல்லூரில் காலை 9 மணிக்கு பேரணி ஆரம்பிக்குமென சொல்லப்பட்டிருந்தாலும், 10 மணிக்கே ஆரம்பித்தது. பேரணியில் கலந்து கொள்பவர்களை இராணுவம், பொலிஸ், கடற்படை புலனாய்வாளர்கள் வீடியோ பதிவு செய்தார்கள்.

நல்லூரில் பேரணி ஆரம்பித்த சிறிது நேரத்தில் பல்கலையிலும் ஆரம்பித்தது. இரண்டு பேரணியும் கந்தர்மடத்தில் சந்தித்து பலாலி வீதியால் நகரம் நோக்கி சென்றன. இந்த சமயத்தில் சிறிதர் தியேட்டரிலும் பேரணிக்கு தயார்செய்யப்பட்டது. ஈ.பி.டி.பிக்கு தண்ணீர் காட்டி இலுப்பையடி சந்தியால் திரும்பி, நாவலர் வீதியால் சென்று கஸ்தூரியார் வீதியால் நகர்ந்தது.

இதற்குள் ஈ.பி.டி.பி பேரணி நகர்ந்து வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகில் நடுவீதியை மறித்து நின்றது. இந்தபாதைதான் பேரணியின் திட்டமிட்ட பாதை. இரண்டும் அருகருகே வந்தபோது மோதல் சூழலும் ஏற்படலாம். ஏற்பாட்டாளர்கள் உடனடியாக முடிவெடுத்து, துரையப்பா விளையாட்டரங்கைசுற்றி கோட்டையடியால் பேரணியை நகர்த்தி முற்றவெளிக்கு கொண்டுவந்தனர்.

பொதுக்கூட்டத்திற்கான நேரத்தை நடுப்பகலில் எதற்காக தேர்ந்தெடுத்தார்கள் என்பதுதான் தெரியவில்லை. பன்னிரண்டு மணி வெயிலில் வெட்டவெளியில் மக்கள் கூட்டம் அசையாமல் நிற்க வேண்டுமென எதிர்பார்க்க முடியாது. முற்றவெளி மைதானத்தைசூழ நின்றமரங்களின் கீழ்த்தான் அதிகமானவர்கள் இருந்தார்கள். மேடைக்கு முன்பாக இருந்தவர்களின் எண்ணிக்கைக்கு சமனானது இது. மக்கள் ஒரே இடத்தில் கூடாதது, தொகைக்கணக்கீட்டில் விஞ் ஞானபூர்வசாத்தியங்களை குறைத்துவிட்டது.

மொத்தத்தில் எழுக தமிழ் ஏராளம் தடை களை கடந்தே வந்திருக்கிறது. அவை அரச தரப்பிலிருந்து ஏற்படுத்தப்பட்டதைவிட சொந்த இனத்திலிருந்தே ஏற்படுத்தப் பட்டதென்பதே துயரமானது.

# நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

## ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 4

மோனிஷா

அவர் என் சொந்தக்காரன். வயதானவர். மனைவியுடன் வசித்து வந்தார். எனது வீட்டில் நெருக்கடி அதிகரிக்க அவர்களின் வீட்டில் தங்க சென்றபோதுதான் அந்த கொடுமை நிகழ்ந்தது.

என்னோடு மிக நல்லவர் போல் ஆறுதல் கூறி நன்றாக பழகுவார். என்னை அன்பால் அரவணைக்;கின்றார் என்று நினைத்தேன். ஒருநாள் அவரது மனைவி இல்லை. வெளியே போயிருந்தார். அன்று அவரும் நானும்தான். படம் பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன். 'பிள்ளஞ்தண்ணி கொஞ்சம் கொண்டு வா' என்றார். தண்ணீரை எடுத்து கொண்டு சென்றேன். அவர் சாய்மனை கதிரையில் உட்கார்ந்திருந்தார்.



நான் தண்ணீரை கொடுக்க வாங்கவில்லை. எல்லைமீற முயன்றார். எனக்கு உடம்பெல்லாம் நடுநடுங்க தொடங்கிவிட்டது. அவரை உதறிவிட்டு அறைக்குள் ஓடிச்சென்று தாளிட்டு விட்டேன்.

அவரது மனைவி வீட்டுக்கு வந்த பின்னர்தான் வெளியில் வந்தேன். 'என்னடா முகம் எல்லாம் வேர்த்திருக்கு. என்னாச்சு' என்று கேட்டார். நடந்ததை கூறினேன். அவருக்கு கோபம் வந்துவிட்டது. அவர் எல்லோருடனும் அப்படிதான், பாசமாக பிள்ளை என்று அணைத்திருப்பார் என்று சொல்லி, என்னை திட்டினார். நான் சொல்வது உண்மையாக இருக்காதென்ற முன்முடிவுடன் இருந்தார். நான் அந்த வீட்டை விட்டும் வெளியேறினேன்.

திருநங்கைகள் என்பவர்கள் நம்பத்தகுந்தவர்கள் அல்லவென்றுதான் இந்த சமூகம் நினைக்கிறது. திருநங்கைகள் இழிவானவர்கள், அவர்கள் பொருட்படுத்த தக்கவர்கள் அல்ல, உண்மை பேசமாட்டார்கள் என பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள்.

எல்லா சுய சமாதானங்களையும் விடுங்கள். வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி என இரண்டு இடங்களில் கருத்தமர்வு நடக்கிறது. இரண்டு இடங்களிலும் உங்களிற்கு அறிமுக மற்றவர்கள் கருத்தமர்வில் கலந்து கொள்கிறார்கள். ஒரு இடத்தில் கலந்து கொள்பவர் திருநங்கை. நீங்கள் எங்கு போவீர்கள்? நிச்சயம் திருநங்கை வளவாளராக இருக்குமிடத்திற்கு செல்லப்போவதில்லை. ஒரு திருநங்கை நமக்கு எதை கற்றுத்தரப் போகிறதென நினைப்பீர்கள்.

உங்கள் ஒவ்வொருவரையும் போலத்தான் ஒவ்வொருவரும் இருக்கிறார்கள். அதனால்த் தான் இந்த சமூகமே திருநங்கைகளிற்கு எதிரானது என்றேன். இந்த சமூகத்தை எதிர்கொள்ள எவ்வளவு விலைகள் கொடுக்க வேண்டுமென்பதை திருநங்கையாக நான் உணர்ந்து கொண்டுள்ளேன். எனக்கு முன்பாக நின்று பேசும் ஒவ்வொரு மனிதனும் கேலியும், கிண்டலும், வசையும் தான் பேசினார்கள். என்னை புரிந்து கொண்டவர்கள் . இந்த சமூகத்தில் மிகச்சிலர்தான். என் ஒற்றைக்கை விரல்களே போதும், இந்த சமூகத்தில் எனக்கு ஆதரவாக இருப்பவர்களை கணக்கிட.

என்னை முழுமையாக புரிந்து எனக்கு இன்றுவரை ஆறுதலாக இருக்கும் அம்மம்மா தான் என் உலகம். அவருக்கு வரும் ஓய்வூதியத்தில் என்னுடன் வாழ்கிறார். உலகமும், உறவுகளும் என்னை அவமானச் சின்னமாக பார்த்தபோதும், அவர் என்னை முழுமையாக ஏற்றுக்கொண்டார். என் தாய்போல, தந்தைபோல, சகோதரி போல, நண்பி போல அவரே இருக்கிறார். உலகத்தில் நான் படும் அவமானங்களையெல்லாம் அம்மம்மாவின் மடியில் இறக்கி வைத்துவிட்டுத்தான் உறங்கச் செல்கிறேன். இந்த உலகத்தின் சவால்களையெல்லாம் வென்றுவர அவர் புத்திசொல்லிக் கொண்டிருக்கிறார். அவரது அச்சமெல்லாம், நான் சின்னவயதாக இருப்பதும், அவர் அந்திமகாலத்தில் இருப்பதும். தனக்குப் பின்னால் நான் என்ன செய்வேன் என கவலைப்பட தொடங்கிவிட்டார்.

ஏனெனில், இந்த சமூகத்தின் சவால்களை கடப்பது இன்னும் எனக்கு சிரமமாகத்தான் உள்ளது.

வீதிக்கிறங்கினால் சூப்பி, அலி, ஒன்பது என விதவிதமாக கொச்சையாக கூப்பிடுவார்கள். அவர்களின் பாலியல் வக்கிரம் வெளிப்படும். நீங்கள் இப்பொழுது இசைப்பிரியா பற்றி பேசுகிறீர்கள். ஆயுதம் தூக்காத ஒரு பெண்ணை நூற்றுக்கணக்கான ஆண்கள் முன்னிலையில் நிர்வாணப்படுத்தி, மனவக்கிரங்களை தீர்த்து கொண்டார்கள் என்கிறீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஒவ்வொரு ஆணும் உங்களிடமே கேட்டுக் கொள்ளுங்கள்.

நான் வீதியில் தனிமையில் செல்லும் போது நல்லூரடி, அரசடி, கந்தர்மடம், ஆரிய குளம், யாழ்நகரத்தில் வீதியோரம் நிற்கும் ஆண்களின் சுயரூபத்தை பார்த்திருக்கிறேன். யாருமில்லாத சமயத்தில் ஒரு திருநங்கையிடம் எப்படி வக்கிரப் பேச்சு பேசுகிறீர்கள் என்பதற்கு என் ஒவ்வொரு பயணமும் சாட்சி.

ஒவ்வொரு நாளும் நான் யாராவது ஒருவனால் பாலுறவிற்கு அழைக்கப்படுகிறேன். வீதியில் அழைத்துவிட்டு, வெடித்து சிரிப்பார்கள். இதனால் இப்பொழுது வீட்டைவிட்டு வெளியில் செல்வதென்றாலே அடிவயிறு குமையும். வாசலை கடக்க, கால்களின் கீழே நெருப்பு பற்றிக்கொள்ளும்.

எனது அச்சம் நியாயமானதென்பது ஒருமுறை நிரூபணமானது. எப்பொழுதும் வீதியில் சுற்றித்திரியும் சிலர் என்னை கடத்தினார்கள். கடத்திச் சென்று துஷ்பிரயோகம் செய்வதுதான் அவர்களின் நோக்கம். அதனால் யாழ்ப்பாண பத்திரிகைகள், இணையங்களின் முதல்பக்க செய்தியாகவும் ஆனேன்.

(தொடரும்)

**என்னை முழுமையாக புரிந்து எனக்கு இன்றுவரை ஆறுதலாக இருக்கும் அம்மம்மா தான் என் உலகம். அவருக்கு வரும் ஓய்வூதியத்தில் என்னுடன் வாழ்கிறார். உலகமும், உறவுகளும் என்னை அவமானச் சின்னமாக பார்த்தபோதும், அவர் என்னை முழுமையாக ஏற்றுக்கொண்டார்.**



▶ கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவரது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள் கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர். காரியாலயத்தை திறக்காமல் கல்வியதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அலுவலகத்திற்கு முன்பாக சுலோகங்களை ஏந்தி தமது கண்டனத்தை வெளியிட்டனர்.



▶ வடமராட்சி வல்லை முனியப்பர் ஆலயத்தில் சப்பாத்துக்களுடன் உள்நுழைந்த இராணுவத்தினர் வழிபாடுகளில் ஈடுபட்டதாக இணையத்தளங்களில் வெளியான புகைப்படம்.



# மாட்டுப்படுவாரா மஹிந்தானந்த?

உபாலி எதிரிசிங்க

ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி எனக் கூறிக் கொள்ளும் குழுவின் முக்கியஸ்தரான மஹிந்தானந்த அளுத்கமகே விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுதலையாகியுள்ளார். கொழும்பு குருந்துவத்தையில் ஆடம்பரமான சொகுசு வீடொன்றை இரண்டு கோடி எழுபது இலட்ச ரூபாவுக்கு வாங்கியது தொடர்பாக நிதி மோசடி பிரிவின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். சட்டவிரோதமாக பணத்தைச் சேர்த்தல், அப்பணம் எவ்வாறு ஈட்டப்பட்டது என்பதை தெளிவுபடுத்த இயலாமை, சொத்துகளின் மதிப்பை வழங்கத் தவறியமை என்பவற்றிற்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கங்கசிறிபுர வித்தியாலயத்தில் கல்வி கற்ற மகிந்தானந்த அளுத்கம கொழும்பு ரோயல் கல்லூரிக்கு அனுமதி பெற்றது அவரின் தந்தையின் வரப்பிரசாதத்தால்தான். மகிந்தானந்தவின் தந்தையாரான மீதலாவே சைமன் அளுத்கமகே சில காலம் நாவலப் பிட்டி ஸ்ரீல. சு. க. உறுப்பினராக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

தந்தையின் பின்னர் அவரது தமையன் விஜயானந்த நாவலப்பிட்டி ஸ்ரீல. சு. க பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டாலும் அதில் நீண்ட காலம் இருக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது எழுச்சி காரணமாக அவர் நாட்டை விட்டு வெளியேறினார். அதன் பின்னரே மஹிந்தானந்த அரசியலுக்குள் பிரவேசித்தார்.

1993 ஆம் ஆண்டு மகாணசபைத் தேர்தல் நடைபெற்றபோது சிறிமாவோ பண்டாரநாயக் காவால் போட்டியிட அழைக்கப்பட்டார். அப்போது 1250 ரூபாவில் நிதி நிறுவனமொன்றில் சேவையாற்றி வந்தார். பின்னர் கேகாலை மற்றும் கண்டியில் ஏ அன்ட் ஆர் என்னும் சொத்து நிறுவனம் ஒன்றை அமைத்தாலும் அதுவும் நல்ல நிலைமையில் இயங்கவில்லை. ஆகவே உடனடியாக அவ்வழைப்பை ஏற்று தேர்தலில் போட்டியிட்டார்.

ஊழல் மோசடி தொடர்பாக மஹிந்தானந்தவுக்கு பல குற்றச்சாட்டுகள் இருந்தாலும் அவரின் சொகுசு வாழ்க்கை மற்றும் வருமான மீட்டல் தொடர்பாக அவரது மனைவி ஆஷா விஜயந்தி விவாகரத்து கோரி வழக்குத் தாக்கல் செய்த போதே தெரியவந்தது.

அவர் அதிகளவு நட்டஈடு பெறுவதற்காக அளுத்கமவின் வருமானம் மற்றும் சொத்துத் தொடர்பான விபரங்களை நீதிமன்றத்துக்கு பெற்றுக் கொடுத்திருந்தார். பின்னர் அவ்விபரங்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடாக அளிக்கப்பட்டன. 1200.00 ரூபா மாத வருமானமாக நீண்ட காலம் பெற்று வாழ்ந்த ஒருவர் எவ்வாறு இவ்வளவு பணம் மற்றும் சொத்துக்களைப் பெற்றார் என்பது நம்ப முடியாத விடயமாகும். அளுத்கமவுக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைத்ததும் ராஜபக்ஷவின் ஆதரவாளரான ஜகத் பாலப்பட்டபெந்தி தலைமையிலான ஆணைக்குழு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அப்போது மறைக்கப்பட்ட மஹிந்தானந்தவின் பத்திரங்கள் நல்லாட்சி அரசாங்கம் அமைந்த பின்னர் மீள்விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அதன்படி நிதி மோசடி சட்டத்தின் கீழ் கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதிமன்றில் வழக்கு இல. பி 22467/ 1/ 2015 கீழ் அளுத்கமவிற்கு எதிராக பொலிஸ் நிதிக் குற்றவியல் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்டது. தாக்கல் செய்யப்பட்ட விபரங்களின்படி 1987 ஆம் ஆண்டு நிதி நிறுவனமொன்றில் கடன் வசூலிப்பாளராக கடமை புரிந்து 1200 வருமானம் பெற்ற மஹிந்தானந்த குறுகிய காலத்தில் கீழ்வரும் சொத்துக்களைப் பெற்றுள்ளார்.



பொரளை குறுப்பு பார்தையில் இல. 66 என்னும் 20.85 பேர்ச்சஸ் காணியில் வீடு, கண்டி ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தையில் இல. 309 லீ என்னும் வீடு மற்றும் அதே முகவரியில் 18.03 பேர்ச்சஸ் காணி, ராஜகிரிய, நாவல ரோட், சந்திரா வெத்தசிங்க மாவத்தை இல. 15/1 என்னும் இடத்தில் 15.05 பேர்ச்சஸ் காணி. எல்விடிகல மாவத்தை டிரியம் ரெஸிடென்ஸில் இல. 159/ 9/ 2 என்னும் வீடு (285 இலட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டது) கொழும்பு 07, கிங்ஸி ரோட் இல. 70/ 3/ 1 என்னும் வீடு 270 இலட்ச ரூபாவுக்கு வாங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர இங்கிலாந்தில் வீடொன்று, சிங்கப்பூரில் 5.05 இலட்ச டொலர் வைப்பு என்பன மஹிந்தானந்தவுக்கு உள்ளன.

மிகக் குறுகிய காலத்தில் அவர் பெற்றுள்ள இச்சொத்துக்களுக்கு வருடாந்த சொத்துக்கள் கடன்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. அதோடு வெளிநாட்டிலுள்ள வைப்புகள் பற்றியும் விபரங்களை அறிவிக்கவில்லை.

இதைத் தவிர கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தீர்வையற்ற கடைத் தொகுதியில் உள்ள சேம்பர் ஒப் கிப்ட் மற்றும் விடூலங்கா (V-DOOLANKA) நிறுவனத்தின் உரிமையாளரும் ஆவார். இவற்றோடு குற்றச்சாட்டுகள் முடிந்து விடவில்லை. விளையாட்டு அமைச்சராக இருந்த வேளையில் அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

விளையாட்டு அமைச்சின் ஒப்பந்தமொன்றை தனது ஆதரவாளரான கவிது பில்டர்ஸ் நிறுவனமொன்றுக்கு வழங்கி உள்ளார். வீரவீராங்கனைகளின் வெளிநாட்டு விஜயங்களின் போது விமான பயணச் சீட்டுக்களை ரத்வத்தை என்பவருக்குச் சொந்தமான நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளார். அனைத்தையும் அவர் விருப்பப்படியே செய்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கரம் போர்ட் 14000ம் மற்றும் டாம் போர்ட் 14000ம் வாங்கியுள்ளார். ஆனால் அவை விளையாட்டு அமைச்சின் களஞ்சியசாலைக்கு கிடைக்கவில்லை. பின்னர் கரம் போர்ட் 14000 மஹிந்த ராஜபக்ஷவின் பிரசார நடவடிக்கைகளுக்காக பொருட்கள் விநியோகிக்கும் களஞ்சியசாலையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அக்களஞ்சியசாலையிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மகனின் படங்களுடன் கூடிய சுவர்க் கடிகாரங்கள் ஒரு இலட்சமும் கண்டுபிடிக்கப்பட்டன.

மஹிந்தானந்தவிடம் 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விசாரணையில் தன்னிடமிருந்த வாகன அனுமதி பத்திரங்கள் 5 விற்று 50 மில்லியன் ரூபா பெற்றதாகக் கூறினார். அது உண்மையென்றால் அங்கேயும் அவர் தவறு செய்துள்ளார். அதன்படி அரசுக்கு சேர வேண்டிய வரியை ஏய்ப்புச் செய்துள்ளார்.

தனது சொத்தில் 90 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்து தனது மனைவியின் பெயரில் வாங்கப்பட்டதாகவும் கூறுகிறார். அதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. நீண்ட நாட்கள் ஆயிரம் ரூபாவுக்கு குறைவாக தனியார் நிறுவனத்தில் கடமையாற்றிய அவரால் தர்க்க ரீதியாக முதலீடு செய்ய முடியாது. ஜப்பானில் உள்ள சகோதரன் பணம் அனுப்பியதாகக் கூறினாலும் சட்டத்திலிருந்து தப்பிக்க போதுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க முடியும்.





மட்டக்களப்பு, ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியில் சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, பாடசாலை அதிபர் எஸ்.ஏ. நஜீப் தலைமையில் இடம்பெற்றது.

குப்பிளான் ஐ.சண்முகன்





# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 5

**1966** ஆம் ஆண்டு கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு கலைப்பிரிவு மாணவனாக தெரிவு செய்யப்பட்டேன். எனது 20 வயதில் மயிலிட்டி, பலாலி உட்பட எங்கள் சூழலில் உள்ள பிரதேசங்களில் யாவும் எனக்கும் எனது தம்பியாருக்கும் அக்குவேறு ஆணிவேறாகப் பரீட்சையமானவை. பலாப்பழக் காலங்களில் இந்தப் பகுதிகளில் எல்லாம் நானும் தம்பியும் பலாப்பழங்கள் கொண்டு சென்று விற்போம். அங்குள்ள சனங்களில் பலரும் எங்களுக்கு பழக்கமானவர்களாக இருந்தாார்கள். ஆனாலும் அப்போதும் கூட நான் யாழ்ப்பாணத்திற்குத் தனியாகச் சென்று வருவேன் என்று சொல்லத் தெரியவில்லை.

இந்தச் சூழலில் நான் கொழும்பு நகருக்கு பயணப்பட்டாக வேண்டும். என்னுடன் எங்கள் பாடசாலையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட எனது நண்பனுடன் நானும் கொழும்பு செல்வதாக ஏற்பாடு செய்து கொண்டோம். அவனது தமையனார் அப்போது கொழும்பில் தெமட்டகொட மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் எங்கள் இருவருக்கும் கொழும்பில் தங்குவதற்கான அறை எடுத்து வசதிகளும் செய்து தருவதாக தனது தம்பியாருக்குக் கூறியிருந்தார். அதனால் நாங்கள் பயம் குறைந்தவர்களாக கொழும்புக்குப் புறப்பட்டோம். நான் அதுவரை ஒரு ஆயத்தமும் செய்திருக்கவில்லை. பாடசாலையில் ஏதோ நிகழ்விற்காக தைப்பித்த ஒரே ஒரு முழுக்காற்சட்டை

**ஒருநாள் இரவு நாங்கள் அறையில் படுத்திருந்தபோது பக்கத்தில் சில பெண் குரல்களை நண்பன் கேட்டிருக்கின்றான். உடனே எங்கள் அறையில் விளக்கை போட்டிருக்கின்றான். அவர்கள் கப்சிப்பென்று அடங்கி விட்டார்களாம். இதை அவன் காலையில் எனக்குச் சொன்னான். இதற்குப் பழிவாங்கலாக என்ன நடக்குமோ எனப் பயந்து கொண்டிருந்தோம்.**

இருந்தது. நான் இன்னும் 2,3 காற்சட்டைகளையும், மேற்சட்டைகளையும் தைப்பித்தேன். பயணச்சாமான்களை கொண்டு செல்வதற்கான வசதிகளும் இருக்கவில்லை. எனவே எனது தம்பியார் சுன்னாகத்தில் சூக்கேஸ் வாங்கித் தருவதாக கூறிச்சென்றார். அவர் திரும்பி வரும்போது "தகரசூட்கேஸ் தான் கிடைத்தது அண்ணா" என்று கூறிக்கொண்டே வந்தார். சரி பரவாயில்லை எனக் கூறிக்கொண்டேன்.

எனது பயணத்தில் மேலும் ஒரு சிக்கல் ஏற்பட்டது. எனது நண்பர் எனது ஊரிலிருந்து பயணப்பட முடியாதிருந்தது. அவரது தாய் உருத்திரபுரத்தில் தமக்கையாருடன் இருந்ததால் அங்கிருந்தே பயணப்படுவதாகச் சொன்னார். ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று இரவு மெயில் ரெயினில் என்னைப் புறப்படுமாறும் தான் கிளிநொச்சியில் என்னுடன் இணைவதாகவும் கூறியிருந்தார். அவ்வாறே அன்று மாலையில் கடவுளை வணங்கி பெற்றோரின் ஆசிர்வாதத்துடன் எனது நண்பர்கள் சுன்னாகத்தில் என்னை மெயில் ரெயினில் ஏற்றிவிட்டார்கள். நான் அதற்கு முன் சிறு வயதில் ஒரு முறை மட்டுமே புகையிரதத்தில் ஏறியிருக்கின்றேன். கண்டியில் தோட்டப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்த மாமாவுடன் இணைவதற்காக மாமி அங்கு சென்றபோது அவருடன் நானும் ஒரு முறை சென்றிருக்கின்றேன்.

அதன் பின்பு இன்றே புகையிரதத்தில் பயணப்படுகின்றேன். கிளிநொச்சி வரை நண்பன் வருவானோ மாட்டானோ என பயந்து பயந்து சென்றேன். கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் நண்பன் ஒருவித மைனர் தோற்றத்துடன் அவனது நண்பன் ஒருவனுடன் புகையிரதத்தில் ஏறினான். அவனைக் கண்டவுடனேயே எனக்கு புதுத்தென்பு ஏற்பட்டது அவனது முசுப்பாத்திகளுடன் பயணம் கழிய கொழும்புக் கோட்டை நிலையத்தில் அவனது தமையனான சதாசிவம் வாத்தியார் எங்களை அழைத்துச் சென்றார். முதலில் தனது அறைக்குள் அழைத்துச் சென்று சிரம பரிகாரங்களின் பின்னர் கடையில் காலை உணவை முடித்துக் கொண்டு எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அறைக்குக் கூட்டிச்சென்றார். ஒரு வீட்டில் மேல்மாடியில் பலகையால் பிரித்து அடிக்கப்பட்ட அறையொன்றில் இரண்டு சாக்குக் கட்டில்களையும் வேண்டிக் கொண்டு குடியேறினோம் ஏனைய வசதிகளையும் தமையனாரே செய்து தந்தார். எனினும் இரண்டு மூன்று வயது மூத்தவனான எனது நண்பன் கில்லாடிப்பேர்வழி. சும்மா இருக்க மாட்டான். அங்கும் இங்கும் நோட்டம் பார்த்துத் திரிவான். எங்கள் பக்கத்து அறையிலும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான இரண்டு மூன்று முஸ்லீம் மாணவர்களுடன் வேறு தொழில் புரிகின்ற இன்னும் இரண்டு கூட்டாளிகளும் குடியிருந்தனர். அவர்களுடன் எல்லாம் பரிச்சயப்படுத்திக் கொண்டான். கீழ் வீட்டிலும் எங்களுடன் பல்கலைக்கழகத்திற்கு வரப்போகின்ற ஒரு மாணவியும் உறவினர்களுடன் இருந்தாள். கொஞ்சம் தள்ளி இன்னோர் மாணவியும் தனக்கு வேண்டியவர்களுடன் குடியிருந்தாள்.

முஸ்லீம் மாணவர்கள் ஏற்கனவே கொழும்பிற்கு பரீட்சயம் ஆனபடியால் அவர்கள் தாங்களாகவே தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டனர். நாங்கள் நால்வரும் ஒன்றாகவே பஸ்ஸில் பல்கலைக்கழகத்திற்குப் போவதாக ஏற்பாடு செய்து கொண்டோம். பதிவுகள் மேற்கொள்கின்ற நாளில் மட்டும் சதாசிவம் வாத்தியார் எங்களுடன் வந்தார். அவர் எப்போதும் கையில் ஒரு வளைந்த பிடியுள்ள முழுக்குடையை வைத்திருப்பார். நாங்கள் பதிவு செய்வதற்காக வரிசையில் நின்றோம். பகிடிவதை ஆகையால் சிங்கள மாணவர்கள் எங்களைப் பிடித்துக் கொண்டனர். அதில் ஒரு மாணவனின் கதையில் ஏமாந்து நான் அவனுடன் மாணவ அறைக்குச் சென்றுவிட்டேன். இதை அவதானித்த சதாசிவம் வாத்தியார் கடகட என வந்து ஏதோ சத்தம் இட்டவாறே தனது குடையின் பிடியால் எனது கழுத்தில் கொழுவி இழுத்து என்னை மீட்டெடுத்தார்.

பகிடிவதை தொல்லைகள் எமை சூழ்ந்து கொண்டே இருந்தன. நண்பன் கொஞ்சம் துணிந்தவன் ஆகையால் அவற்றின் சிலவற்றிலிருந்து சாதுரியமாக என்னைக் காப்பாற்றியும் இருக்கின்றான். என்றாலும் ஒருநாள் மாலையில் அறைக்குச் செல்வதற்காக பஸ்ஸிற்கு நின்றபோது ஒருதொகை சிங்கள மாணவர்களால் நாம் சூழ்ந்து கொள்ளப்பட்டோம். எங்களுடன் எங்கள் பகுதிக்கே வரும் வேறொரு தமிழ் மாணவனும் அகப்பட்டுக் கொண்டான். நல்ல வேளையாக நாங்கள் ஏற இருந்த இரட்டைத் தட்டு பஸ் வந்தது. ஒரு வழியாக அதில் ஏறி முன்னுக்குச் சென்று விட்டோம். நண்பனோ கடைசியாக ஏறினான். என்றாலும் சிங்கள மாணவர்களும் பஸ்சை கலைத்து ஏறத்தொடங்கினார்கள்.

இந்த வேளையில் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. கடைசியாக ஏறிய நண்பன் பஸ் புறப்பட்ட போது கொஞ்சம் பின்னுக்கு வந்து பஸ் கைபிடியைப் பிடித்துக் கொண்டு செருப்புக்காலால் அவர்களுக்கு ஒரு உதை விட்டான். அவர்கள் தொடர்ந்து வரவில்லை. ஆனால் எங்களுக்குப் பயம் ஏற்பட்டது. அவர்கள் எங்களை காத்திருந்து பழிவாங்குவார்கள் என நினைத்தோம். எனவே நாங்கள் குறிப்பாக நானும், நண்பனும் பஸ் பாதையை மாற்றி வேறு பாதையால் பல்கலைக்கழகத்திற்கு போய் வந்தோம். கொஞ்சம் சிரமமான வழி என்றாலும் பயமில்லாமல் சென்று வரக் கூடியதாக இருந்தது. ஒரு வாரத்தின் பின் எங்களுடைய வழக்கமான பஸ் பாதைக்கு பயத்துடனேயே சென்றோம். ஆனால் எதிர்பார்த்ததைப் போல எங்களை பழிவாங்குவதற்காக யாரும் காத்திருக்கவில்லை. இவ்வாறே எங்களது பல்கலைக்கழக வாழ்க்கை ஆரம்பாகிற்று.

இன்னோர் விடயத்தையும் இவ்விடத்தில் சொல்ல வேண்டும். கொஞ்சம் கில்லாடியான நண்பன் என்று சொன்னேன் அல்லவா? ஒருநாள் இரவு நாங்கள் அறையில் படுத்திருந்தபோது பக்கத்தில் சில பெண் குரல்களை நண்பன் கேட்டிருக்கின்றான். உடனே எங்கள் அறையில் விளக்கை போட்டிருக்கின்றான். அவர்கள் கப்சிப்பென்று அடங்கி விட்டார்களாம். இதை அவன் காலையில் எனக்குச் சொன்னான். இதற்குப் பழிவாங்கலாக என்ன நடக்குமோ எனப் பயந்து கொண்டிருந்தோம். வழக்கம் போல அறையைப் பூட்டிவிட்டு நாங்கள் பல்கலைக்கழகத்திற்கு சென்று விட்டோம். மாலையில் அறைக்கு திரும்பி வந்தபோது எங்கள் அறையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

நண்பனின் சில பொருட்கள் களவு போயிருந்தன. என்னுடைய ஒரே ஒரு பெறுமதியான சேட்டும், அம்மா தந்த 50 ரூபா நோட்டையும் ஒரு இடத்தில் மறைத்து வைத்திருந்தேன். அதையும் காணவில்லை கொஞ்சம் தள்ளியிருந்த பொலிஸ் நிலையத்திற்கு புகார் பதிவதற்காக சென்றிருந்தேன். அங்கிருந்த சிங்கள பொலிஸ் அதிகாரி நல்லவர். அவர் இந்த இடத்தில் இப்படிக் களவுகள் நடப்பதாகவும் நீங்கள் இடம்மாறிச் செல்வது நல்லது என்றும் எங்களுக்குப் புத்திமதி சொல்லியிருந்தார். அதற்கு இடையில் பல்கலைக்கழகத்திற்கு ஒரு மாத விடுமுறையும் வந்ததால் நாங்கள் ஊருக்கு சென்றுவிட்டு வந்து அறையை மாற்றுவதாக தீர்மானித்தோம்.

பல்கலைக்கழகம் ஒரு அற்புதமான உலகத்தை திறந்து காட்டியது. மனதுக்கு பிடித்தமான விரிவுரையாளர்கள் அந்த உலகத்தின் நுழைவாயிலை எங்களுக்குக் காட்டினார்கள். அவர்களில் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சதாசிவம், வரலாற்று விரிவுரையாளர் அருமைநாயகம் என்போரையும் நான் என் வாழ்வில் மறவேன். இதில் க.அருமைநாயகம் எங்கள் கல்லூரியின் பழையமாணவர். ஐரோப்பிய வரலாற்றில் சிரேஸ்ட விரிவுரையாளரெனவும்இன்னொரு விரிவுரையாளர் கணபதிப்பிள்ளையையும் எங்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள் என அறிந்தேன். இவர்களில் அருமைநாயகம் அவர்கள் ஒருவகையில் எனக்கு அறிமுகமாகியும் இருந்தார். **(தொடரும்)**



## நாயகிகள் பஞ்சம்!

தமிழ் சினிமாவில் மீண்டும் ஹீரோயின் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. முன்னணி நடிகர்கள், முன்னணி நடிகைகளைத்தான் ஜோடியாக்குவார்கள். நாயகி விடயத்தில் நாங்கள் தலையிடுவதில்லை என நாயகர்கள் சொன்னாலும் அது உண்மையில்லை. அஜித் ஜோடியாக காஜல் அகர்வால் நடிப்பது பெரிய விசயமல்ல. இருவரும் முன்னணியில் இருப்பவர்கள். ஆனால் பைரவா படத்தில் விஜய் ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடிப்பது ஆச்சரியமானது. கீர்த்தி இப்பொழுதுதான் வளர்ந்து வருகிறார். சமந்தா திருமணத்திற்காக காத்திருக்கிறார். அனுஷ்கா ஏறக்குறைய அக்காவாகி விட்டார். தமன்னா, நயன்தாரா நாயகர்களை பார்க்காமல் கதைகளை மட்டும்தான் பார்க்கிறார்கள். இவர்களை விட்டால் முதல் வரிசையில் வேறு நாயகிகள் இல்லை. சூர்யாவின் அடுத்த படம், விக்ரமின் சாமி2, தனுசின் வடசென்னை ஆகியவற்றின் நாயகி விபரம் அறிவிக்காமலேயே உள்ளது. நாயகி பஞ்சம்தான் காரணம். இப்போதைய முன்னணி நாயகிகள் நடிக்க வந்து பத்து வருடம் ஆகிவிட்டது. அடுத்த வருடத்தில் இனி புதுப்பட்டியல் உருவாகிவிடும் என்கிறார்கள்.

## சுனைனாவின் புது ஐடியா!

காதலில் விழுந்தேன் படத்தில் அறிமுகமானவர் சுனேனா. அறிமுகமான புதிதில் சக நடிகைகளின் வயிற்றில் புளியை கரைத்தார். மாசிலாமணி, யாதுமாகி, வம்சம், நீர்ப்பறவை என வரிசையாக படங்களில் நடித்தார். திடீரென அவருக்கு பின்னடைவு ஏற்பட்டு, கடந்த வருடம் படமே இல்லாமல் இருந்தார். இப்பொழுதுதான் இரண்டு படங்கள் கிடைத்தன. ஸ்ரீகாந்துடன் நடித்த நம்பியார் ஓடவில்லை. ஜீவாவுடன் நடிக்கும் கவலை வேண்டாம் படத்தில் காஜல் இருப்பதால் அவருக்குத்தான் முன்னுரிமை கொடுக்கிறார்கள். இப்படியே போனால் யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள் என கவர்ச்சிக்கு தாவியிருக்கிறார். அதீத கவர்ச்சியில் போட்டோசூட் நடத்தி இயக்குனர்களுக்கு இப்போது தூது அனுப்பியிருக்கிறார். இந்த ஐடியா கைகொடுக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## அந்தரத்தில் தொங்கிய பூஜா

முகமூடி படத்தில் நடித்தவர் பூஜா ஹெக்டே. நடிக்க வந்து நான்கு வருடங்களில் நான்கு படங்களில்தான் நடித்துள்ளார். கவர்ச்சியாக நடிக்க தயாராக இருந்தும் வாய்ப்புத்தான் கிடைக்கவில்லை. காத்திருந்தவரிற்கு அல்லு அர்ஜுன் ஜோடியாக நடிக்க வாய்ப்பு கிடைத்தது. இந்த படத்திற்காக என்ன ரிஸ்க்கும் எடுக்க தயாராக இருந்தார். அந்தரத்தில் தொங்கியபடி ஆடும் காட்சி என இயக்குனர் சொன்னபோது, தயங்காமல் ஒத்துக்கொண்டார். ஏரியல் சில்க் வகையை சேர்ந்த இந்த நடனத்தை தீவிரமாக இப்பொழுது பயிற்சி செய்து வருகிறார். மேல்தளத்தில் கயிற்றை கட்டிக்கொண்டு ஆடும் இந்த வகை நடனத்தை தீவிரமாக முயற்சிக்கிறார். அந்தப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு லைக்ஸ் அள்ளி வருகிறார்.



# டூரிங் டாக்கீஸ்

## றூமுக்கு அழைத்த நடிகர்!

கபாலி நாயகி ராதிகா ஆப்தே. அரைநிர்வாண காட்சி, ஆண் பெண் உறவு பற்றி வெளிப்படையாக பேசுவது என பரபரப்பை கிளப்பிவருகிறார். அவர் அண்மையில் கிளப்பிய புதிய பரபரப்பு தென்னிந்திய நடிகர் ஒருவர் தன்னை ஏடாகூடமாக அணுக முயன்றார் என்பது. "தென்னிந்திய படமொன்றில் நடித்தபோது அனைவரும் ஹோட்டலில் தங்கியிருந்தோம். நடிகர் ஒருவர் போன் செய்து, தனது அறைக்கு வருமாறு கூப்பிட்டார். அவரை காய்ச்சி எடுத்து விட்டேன். படம் முடியும்வரை அவர் என் கோபத்திற்கு ஆளானார்" என்றுள்ளார்.

## மீண்டும் அஜித்- விஜய் மோதல்!

அஜித் விஜய் மோதல் முன்னர் வெகு பிரபலம். ஒருவர் 45 படம் நடித்தால் மற்றவருக்கும் அந்தச்சமயத்தில்த்தான் 45 படமாக இருக்கும். ஒரே எண்ணிக்கை, ஒரே நேரத்தில் வெளியீடு என அந்த சமயத்தில் களை கட்டியது. பின்னர் விஜய் வருடத்திற்கு இரண்டு படம் நடித்து எண்ணிக்கையை உயர்த்திவிட்டார். அவருக்கு பைரவா 60வது படம். இப்பொழுது 57வது படத்தில் நடிக்கிறார் அஜித். இப்பொழுது ஒரேநேர வெளியீடும் இல்லை. விஜயின் படம் பொங்கலிற்கு வருகிறது. அஜித் படம் இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் எப்பொழுது ரிலீஸ் என்பது தெரியாது. ஆனால் தனது ரசிகர்கள் ஏமாறக்கூடாதென்பதற்காக பொங்கலன்று பெர்ஸ்றலுக்கை வெளியிடவுள்ளாராம்.

## சிம்பு சர்ச்சை முடிந்தது!


அச்சம் என்பது மடமையடா பட இயக்குனர் கௌதம் மேனன், ஹீரோ சிம்புவற்கிடையிலான சச்சரவு தீர்ந்துள்ளது. படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு முடியும்வரை இருவரும் நெருக்கமாக இருந்தனர். படத்தின் இறுதிக்கட்டத்தில் சிம்புவின் சம்பள பிரச்சனை கிளம்பியது. தள்ளிப்போகாதே பாடல்காட்சியில் சிம்பு, மஞ் சிமா நடிக்க வேண்டியிருந்தது. இந்த சர்ச்சையால் பாடல் காட்சி படப்பிடிப்பு நடக்குமா என்ற சந்தேகம் எழுந்தது. பாடல்காட்சி இல்லாமலே படத்தை வெளியிட படக்குழு தயாராவதாக பேச்சும் எழுந்தது. இப்பொழுது சர்ச்சை தீர்ந்து, பாடல்காட்சி படமாக்கப்பட்டு, முழு படமும் முழுமையாக நிறைவடைந்துள்ளது.

## ஸ்ருதியின் காதல்!

ஸ்ருதி ஹாசன் காதலில் விழுந்துவிட்டார் என்று பரவலாக பேசப்படுகிறது. ஹிந்தி நடிகர் ரன்வீர் கபூர்தான் காதலர் என்கிறார்கள். விளம்பர படமொன்றில் இருவரும் நடித்தபோது நெருக்கம் ஏற்பட்டு காதலாகியுள்ளதென்கிறார்கள். அந்த படத்தில் இருவரும் நெருக்கமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். ரன்வீர் கபூர் ஏற்கனவே திபிகா படுகோன், கத்ரினாவை காதலித்தார். கத்ரினாவும் ரன்வீரும் திருமணம் செய்யாமலேயே ஒருவீட்டில் வாழ்ந்தனர். இப்பொழுது ஸ்ருதியுடனான காதல் திருமணத்தில் முடியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## ஆதியின் நம்பிக்கை

அதர்வா நயன்தாரா நடிக்கும் படம் "இமைக்கா நொடிகள்". அதர்வாவிற்கு நயன்தாரா ஜோடியா என இணையவாசிகள் பற்றவைக்க முயன்றாலும், நயன்தாரா அலட்டிக்கொள்ளாமல் நடித்து வருகிறார். இந்த படத்தில் ஹிப் ஹாப் ஆதி இசையமைப்பாளராக ஒப்பந்தமாகியுள்ளார். அண்மைக்காலமாக ஆதியின் பாடல்கள் பேசப்பட்டு வருகின்றன. ஆனாலும் படமாக இன்னும் ஒன்றும் பேசப்படவில்லை. அந்தக்குறையை இந்தப்படம் போக்கும் என ஆதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.




# குழந்தைப் போராளி

சிற்றன்னை வழக்கத்திற்கு மாறாக அமைதியாகவே காணப்பட்டார். எனது விளக்கங்கள், முக்கியமாக மன்றாட்டங்கள் அவருக்குத் திருப்தியளித்திருக்க வேண்டும். தான் அப்பாவைச் சமாதானப்படுத்துவதாக என்னிடம் சொன்னார். சிற்றன்னை குத்தி முறியாதபடியால் அவரை நான் நம்பினேன். அப்பா மதியத்திற்குப் பின் வீட்டிற்கு வருவதாயிருந்தது. நான் அவரின் கேள்விகளுக்காக என்னைத் தயார்படுத்திக் கொண்டேன். ஒரு தகப்பனாக நான் திரும்பி வந்ததற்காக அவர் சந்தோசப்பட்டு வீட்டில் என்னை இருக்க அனுமதிக்கலாமென நினைத்துக் கொண்டேன். ஆனால் இந்த நம்பிக்கை பொய்த்துப் போயிற்று. அப்பா வந்ததும் வராததுமாக மூர்க்கத்துடன் ஒரு சடப் பொருளைக் கையாளுவது போல என்னைத் தூக்கித் தரையில் அடித்தார். எந்தக் கேள்வியும் என்னிடம் கேட்கப்படவில்லை. எந்த விளக்கமும் அளிக்க எனக்கு அவகாசம் தரப்படவில்லை. எல்லாமே மிக விரைவாக நடந்தேறியது. எனக்கு மீண்டும் சுய நினைவு வந்தபோது எனது முகத்தில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நான் அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தேன். நான் இருள்வெளியிற் கிடந்தேன். என் மனமும் இருண்டு கிடந்தது.

அடிபட்டதில் ஒரு கண் வீங்கி மூடிக் கொண்டது. அது என்னைக் கவலைப்பட வைத்தது எப்போதுமே அடிகள் விழும்போது என் கண்களைப் பாதுகாப்பதில் நான் மிகக் கவனமாயிருப்பேன். எனது சட்டையில் ஒரு துண்டைக் கிழித்தெடுத்து முகத்தில் வடிந்த இரத்தத்தில் நனைத்துக் கண்ணில் கட்டிக் கொண்டேன். இது என் கண்ணைத் திறக்க உதவுமென நம்பினேன். விலாப் பகுதியில் வலி எடுத்ததால் வீறிட்டு அலறினேன். அப்பா ஓடி வந்து என்னைக் கண்டதும் அதிர்ச்சியில் உறைந்து நின்றார். "கடவுளே" எனக் கூவிக்கொண்டே எனது உடைகளைக் களையச்சொன்னார். என்னைக் குளியலறைக்குக் கூட்டிச் சென்று சுடுநீரால் என் இரத்தத்தைக் கழுவினார். அவரது முகத்தில் கவலையைக்கண்டதும் தான் விலாப்பகுதியில் வலியெடுப்பது பற்றிக் கூற எனக்குத் தைரியம் வந்தது. எனது உடல் முழுவதும் கன்றிப் போயிருந்தது. நாளை என்னை அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னார். அங்கு என்னைக் கேள்வி கேட்டால் எப்படிப் பதில் கூற வேண்டுமென்றும் சொல்லித் தந்தார். இந்த முறை மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்து விட்டேனென்று சொல்ல வேண்டுமாம். பின்பு நாங்கள் கடைக்குச் சென்று எனக்குப் புதிய சப்பாத்துக்கள் வாங்கலாமாம்.

இரவு முழுவதும் நான் அழுது கொண்டேயிருந்தேன். அந்த இரவில் அடி உதைகளை நினைத்து நான் அழவில்லை. அப்பாவின் அன்பான வார்த்தைகளை நினைத்து, என்றுமே இல்லாதவாறு என் மீது பரிவு காட்டியதை நினைத்து அழுதேன். அழுதுகொண்டே தூங்கிப்போனேன்.

நான் தூக்கம் கலைந்து எழுந்தபோது உடல் முழுவதும் வலித்தது. எழ முயற்சித்தேன், ஆனால் என்னால் அசையவே முடியவில்லை. அப்பா வந்து எனது நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். வெளியே போனவர் சிறிது நேரத்தில் ஒரு வைத்தியருடன் திரும்பி வந்தார். வைத்தியர் என்னைப் பரிசோதித்து விட்டு உடைந்து போன விலா எலும்புகளைச் சரிப்படுத்த என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டும் எனச் சொன்னார். அப்பா வைத்தியரை யோசனையுடன் பார்த்தார். பின்பு ஆஸ்பத்திரியில் என்ன சொல்ல வேண்டுமெனக் கேட்டார்.

"இந்தப் பிரச்சனையைத் தீர்க்க ஒரு வழியுண்டு, ஆனால் அதற்குக் கொஞ்சம் பணம் செலவாகும்"

"எவ்வளவு செலவாகும்?"

"நிலைமை மோசமாய் இருப்பதால் என்னால் எவ்வளவு என்று சொல்ல முடியாது, ஆனால் என் நண்பனொருவன் அங்கு வேலை செய்கின்றான். அவனால் இந்தச் சிறுமியை மீண்டும் சரியாக்க முடியும்."

நான் குணமடைந்தபின்பு அப்பா என்னைக் கடைக்கு அழைத்துச்சென்றார். என் வாழ்வில் முதன் முறையாக என்னால் சந்தோசத்தைத் தாங்க முடியாது போயிற்று. அப்பா கை நிறைய மிட்டாய்களை வாங்கித் தந்தார். எனது சந்தோசம் நீடிக்கவில்லை. அப்பா போனதும் சிற்றன்னை என்னை வீட்டை விட்டு வெளியே துரத்தி மிட்டாய்களைச் சாப்பிட்டு முடிக்காமல் வீட்டுக்குத் திரும்பி வரவேண்டாமெனக் கட்டளையிட்டார். மாஹி சொன்னது தான் நினைவுக்கு வந்தது "இந்தப் பெண் தனது வெறுப்பைத் தனது சவக்குளி வரை எடுத்துச் செல்வாள்"

## ஒரு கடினமான இதயம்

எனது ஓடிப்போன ஒவ்வொரு சகோதரியும் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது ஏதோ ஒரு வகையில் தங்கள் துன்பங்களைச் சுமந்தே வந்தனர். நாங்கள் ஒவ்வொருவரும் அவரவர் சுமையைச் சுமக்க வேண்டியிருந்தது. எப்போதாவது ஒருமுறை அவர்கள் வீட்டிற்கு வருவார்கள். ஒவ்வொரு முறையும் ஒருத்தி வரும்போது 'இவள் இம்முறை என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்வாள்' என நம்பினேன். அவர்கள் ஒவ்வொரு முறையும் தாங்கள் எவ்வளவு சிரமங்களை வெளியே அனுபவிக்கிறார்கள் என என்னிடம் சொல்வார்கள்.

ஆனால் அப்பாவிடமோ சிற்றன்னையிடமோ எதுவும் சொல்ல மாட்டார்கள். எந்த விதத்திலும் அவர்களது வாழ்க்கை சிரமானதெனக் காட்டிகொள்ள அவர்கள் விரும்பவேயில்லை. தாங்கள் வெளியே சந்தோசமாக இருப்பது போல நடிப்பார்கள். ஏதோ உண்மையும் அது போலத்தான் என்றிருக்கும். அப்பாவோ மடையன் போல அவர்களை நம்பினார். நான் எனது சகோதரிகளில் ஒருத்தி வந்து என்னை விடுவித்துச் செல்வாளென்று ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த காலங்களுக்குக் கணக்கில்லை.

(தொடரும்)



▶ மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 143 ஆண்டு தின நிகழ்வு கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.விசேட இறைவழிபாடுகளின் பின்பு புனித மிக்கேல் கல்லூரி கொடி ஏற்றப்பட்டது.



# மல்லிகையைப் பிய்த்து தின்ற மக்கள் திலகம்!




**எம்.ஜி.ஆர்.** தனது படங்களில் காட்சி அமைப்பு அவருக்கு திருப்தி ஏற்படும் வரையில் விடமாட்டார். அதே நேரத்தில் மற்றவர்களின் கருத்து என்ன? குறிப்பிட்ட காட்சியை யூனிட்டில் உள்ளவர்கள் எப்படி ரசிக்கிறார்கள்? என்பதையும் அறிந்து கொள்வார். மற்றவர்களின் கருத்துக்கள் நியாயமாக இருந்தால் அதற்கேற்ப காட்சி அமைப்புகளில் மாற்றங்களை செய்வார்.

'புரட்சிப்பித்தன்'... இந்தப் பெயரைப் பார்த்ததுமே எம்.ஜி.ஆர் படத்தலைப்பு என்பது புரியும். இந்தப் படத்தை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் சகோதரர் என்.எஸ். திரவியமும் தயாரிப்பாளரும் இயக்குநருமான டி.ஆர்.ராமண்ணாவும் தயாரிப்பதாக இருந்து சில காட்சிகள் படமாக்கப்பட்டன. அது ஒரு கன்னடப் படத்தின் கதை. பாடல்களுடன் திரைக்கதை, வசனமும் வாலி எழுதுவதாக இருந்தது. 1975ம் ஆண்டு 'தீபாவளி வெளியீடு' என்று பத்திரிகைகளில் விளம்பரமும் வந்தது. ஆனால், அரசியலில் எம்.ஜி.ஆர் 'பிஸி'யாகி, தேர்தல் வந்து ஆட்சியைப் பிடித்து முதல்வராகிவிட்டதால் அவரால் படத்தில் நடிக்க முடியவில்லை. இந்தபடத்தின் காட்சி படமாக்கப்பட்டபோது ஒரு சுவையான சம்பவம்.

கதைப்படி எம்.ஜி.ஆர் ஒரு விஷயத்துக்காக வேண்டுமென்றே மனநலம் பாதிக்கப்பட்டவரைப் போல நடிப்பார். ஒருநாள் படப்




பிடிப்புக்கு முன்னதாக இயக்குநர் ராமண்ணாவின் ஆலோசனைப் படி, அன்று எடுக்க இருக்கும் காட்சி பற்றி ஒப்பனை அறையில் இருந்த எம்.ஜி.ஆரிடம் சென்று விளக்கினார் வாலி. அதைக் கேட்டுக் கொண்டு படப்பிடிப்பு தளத்துக்கு வந்தார் எம்.ஜி.ஆர்.

அன்று எடுக்க வேண்டிய காட்சியின்படி கோயிலுக்கு காரில் வந்து இறங்கும் கதாநாயகி சாமி கும்பிடுகிறார். அவர் கண்களை மூடி வணங்கும்போது, பின்னால் வரும் மனநிலை சரியில்லாதவர் போல நடிக்கும் எம்.ஜி.ஆர் நாயகியின் தலையில் சூடி இருக்கும் மல்லிகைப் பூவை பிய்த்து தின்ன வேண்டும். அதன்படியே, எம்.ஜி.ஆர் மல்லிகைப் பூவை பிய்த்து தின்றார். எல்லோருக்கும் திருப்தி; காட்சி ஓகே.

ஆனால், வாலி மட்டும் முகத்தில் எந்த பாவமும் இல்லாமல் நின்றார். எல்லோரையும் நோட்டமிட்ட எம்.ஜி.ஆர் அதை கவனித்து விட்டார். "என்ன ஆண்டவனே... காட்சி உங்களுக்கு திருப்தி இல்லையா?" என்று வாலியிடம் கேட்டார்.

"ஆமாண்ணே, நாயகியின் தலையில் உள்ள பூவை நீங்க இன்னும் நிறைய பிச்சு எடுத்து, மனநலம் பாதிக்கப்பட்டவனுக்கு உள்ள வேகத்தோடு தின்னுருக்கணும்" என்ற வாலியின் பதிலால் கோபமடைந்தார் எம்.ஜி.ஆர்.

"அது எனக்கும் தெரியும். ஆனா எப்படிய்யா வேகமா திங்கிறது? மல்லிகைப் பூவை கடிச்சுப் பாரும். எட்டிக் காயா கசக்கும்" என்று வாலியைப் பார்த்து கோபமாக சொல்லிவிட்டு ஒப்பனை அறைக்கு விறுவிறுவென எம்.ஜி.ஆர் சென்று விட்டார்.

படப்பிடிப்பு குழுவினர் வாலியை விரோதியைப் போல பார்த்தனர். எம்.ஜி.ஆரை சமாதானம் செய்வதற்காக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எம்.ஜி.ஆரின் ஒப்பனை அறைக்கு வாலியே சென்றார். வழக்கமாக ஒப்பனை அறையின் முன் நிற்கும் எம்.ஜி.ஆரின் காரைக் காணோம். 'ஒருவேளை வீட்டுக்கே எம்.ஜி.ஆர் புறப்பட்டு போய்விட்டாரோ?' என்று குழம்பியபடி நின்ற வாலியின் சிந்தனையைக் கலைத்தது எம்.ஜி.ஆரின் ஆஸ்தான ஒப்பனையாளர் பீதாம்பரத்தின் குரல்.

"என்னண்ணே, இங்கேயே நிக்கிறீங்க. சின்னவர் (எம்.ஜி.ஆர்) உள்ளேதான் இருக்காரு... வாங்க" என்று வாலியின் வயிற்றில் பால் வார்த்தார் பீதாம்பரம்.

உள்ளே சென்ற வாலி, எம்.ஜி.ஆரைப் பார்த்து பவ்யமாக, "அண்ணே, என்னை மன்னிக்கணும். மனதில் பட்டதைச் சொன்னேன். நான் அப்படி சொல்லியிருக்கக் கூடாது" என்றார். எம்.ஜி.ஆர் புன்னகைத்தபடி, 'நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு' என்ற திருக்குறளை சொல்லி, "நீங்கதான் உண்மையான நண்பர். உங்களை எதுக்கு மன்னிக்கணும்? அதே காட்சியை மறுபடி எடுக்கலாம். ராமண்ணாகிட்ட சொல்லுங்க" என்றார்.

இங்கே ஒரு விஷயம். நியாயமான கருத்தை சுட்டிக்காட்டி குறை சொன்ன வாலியை, உண்மையான நண்பர் என்று பாராட்டியதோடு, ஒருவரோடு நட்புகொள்வது சிரித்து மகிழ மட்டுமல்ல; தவறை இடித்துரைத்து திருத்துவதற்கும் என்று பொருள்படுகிற அதிகம் புழக்கத்தில் இல்லாத பொருத்தமான குறளையும் அவரிடம் எம்.ஜி.ஆர் கூறியிருக்கிறார்.

மறுபடி அதே காட்சியை எடுக்க ஏற்பாடுகள் நடந்தன. ஆனால், சிறிய மாற்றம். வாலி கூறியபடி பூவை நிறைய பிய்த்து வேகமாக தின்ன வசதியாக நாயகி தலையில் இருக்க வேண்டிய மல்லிகைப் பூ, ரோஜாப் பூவாக மாறியது; அதுவும் எம்.ஜி.ஆர் செலவிலேயே. வாலி பார்த்தபோது, எம்.ஜி.ஆரின் ஒப்பனை அறைக்கு முன் வழக்கமாக நின்றிருக்கும் கார் திடீரென காணாமல் போனதன் ரகசியமும் சிறிதுநேரத்தில் தெரிய வந்தது. அந்தக் காரில்தான் ஒரு கூடை ரோஜாப்பூ வந்தது.


'இதயக்கனி' படப்பிடிப்பு இடைவேளையில் எம்.ஜி.ஆருடன் வாலி, நடிகைகள் லதா, ராதா சலூஜா. நிற்பவர்களில் இடது ஓரம் நடிகர் கோபாலகிருஷ்ணன், நடிகரும் முன்னாள் அமைச்சருமான திருச்சி சவுந்திரராஜன் (உயரமாக இருப்பவர்).

வாலியின் கருத்துக்கும் மதிப்பளித்து அதேநேரம் காட்சி சிறப்பாக வர, சாதுர்யமாக மல்லிகைப் பூவை ரோஜாப் பூவாக மாற்றி விட்டார் எம்.ஜி.ஆர்.

மீண்டும் அந்தக் காட்சியின் படப்பிடிப்பு தொடங்கும் முன், "அண்ணே நீங்க ரோஜாப் பூவை தின்னா எப்படி இருக்கும் தெரியுமா?" எம்.ஜி.ஆரை பார்த்து கேட்டார் வாலி.

'இதென்ன மறுபடியும்?' என்று புரியாமல் எல்லோரும் பதைபதைப்புடன் பார்க்க, வாலி சொன்னார்...

"ரோஜாப் பூவே ரோஜாப் பூவை திங்கிற மாதிரி இருக்கும்"

எம்.ஜி.ஆரின் முகம் ரோஜாவாய் மலர்ந்தது.

தொடரும்...


எம்.ஜி.ஆர். அரவணைப்பில் வாலி.


'நேற்று இன்று நாளை' பட பூஜையில் எம்.ஜி.ஆருடன் நடிகர் அசோகன், இயக்குநர் ப.நீலகண்டன்.



# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

பன்னாட்டு குளிர்பானங்களின் நச்சுப் பிடியில் மக்கள் சிக்கத் தொடங்கிய போது இயற்கை ஆர்வலர்கள் இளநீரை முன்வைத்தனர். இளநீரின் சத்துக்கள் மற்றும் சிறப்புக்கள் குறித்த பரப்புரைகள் வேகமாக அரங்கேறின. மாநகரங்களில் இளநீர் பருகும் வழக்கம் தேவைக்கு அதிகமாக உயர்ந்தது.

எல்லாவற்றையும் பணத்திற்காக செய்யத் தொடங்கினால், பணம் இருக்கும் மனிதர்களே இருக்கமாட்டார்கள். எல்லாவற்றையும் பெருமைக்காக செய்யத் தொடங்கினால், பெருமை நிலைக்கும் மனித வாழ்வு நிலைக்காது. சின்னஞ்சிறிய செயலையும் அன்பு வழிப்பட்டு செய்தால் உடல் அழிந்த பிறகும் பெயர் நிலைக்கும், சந்ததி தழைக்கும்.

நமது பல்லாயிரம் ஆண்டுகால மரபில், வேளாண்மையை முழுத்தொழிலாக நம் முன்னோர்கள் செய்ததே இல்லை. உணவு படைக்கும்துறைஎன்பதால்வேளாண்மையில் வணிக நோக்கம் மிகக் குறைவாகவும், பொது நோக்கம் கூடுதலாகவும் இருந்தன. இதனால், இயற்கை விதிகளுக்குப் புறம்பான தொழில் நுட்பங்களை நம் முன்னோர்கள் கையாளவில்லை.

நமக்கு ரசவாதம் தெரிந்திருந்தது. நம் சித்தர்கள், தாவரங்களில் இருந்து, உலோகங்களைப் பிரித்து எடுத்தவர்கள் தான். ஒவ்வோர் உயிரினத்திலும் உள்ளீடாக இருக்கக் கூடிய உயிர்வேதி மூலக்கூறுக்களைப் பற்றிய பாடம் நமக்கு நிச்சயமாகப் புதியது அல்ல. சுண்ணாம்புக் கீரை என்ற தாவரத்தில் சுண்ணாம்புச் சத்து (கல்சியம்) கூடுதலாக இருப்பது கிராமத்து மனிதர்களுக்கு நன்கு தெரியும். எந்த ஆய்வகத்திலும், அமிலங்களை ஊற்றி நுண்ணோக்கிகளைக் குவித்து இந்தத் தாவரத்தில் சுண்ணாம்புச்சத்து உள்ளது எனக் கண்டுபிடிக்கப்படவில்லை. நமக்கே உரித்தான மரபுவழிப்பட்ட மெய்யறிவின் விளைவாகக் கிடைத்த கொடைகள் இவை.

பிரண்டை மற்றும் குப்பைமேனித் தாவரங்களையப் பற்றி, நவீன மருத்துவத்துறை இப்போது பக்கம் பக்கமாக எழுதுகிறது. இவற்றின் உள்ளீடாக உள்ள உலோகங்களையும், வேதிப்பொருட்களையும் பாடல்களில் எழுதி வைத்து சீடர்களுக்குக் கற்றுத் தந்தவர் நம் முன்னோர்கள்.

தாவரங்களின் உள்ளிருக்கும் வேதிப் பொருட்களையும், உலோகங்களையும் புரிந்து, கொண்டு அவற்றின் இயற்கையான குணங்களைச் சிதைத்து விளைச்சலை உயர்த்தும் பொருளாதார நடவடிக்கைகளில் நம் முன்னோர்கள் இறங்கவில்லை. ஒருவர் கொலை செய்யாமல் இருப்பதால், அவருக்கு வீரம் இல்லை என்று பொருள் அல்ல. நமது மரபின் வேளாண் தொழில்நுட்பங்களில் வேதிப்பொருட்களை ஈடுபடுத்தவில்லை. என்பதால், நம் முன்னோர்கள் அறியாமையில் வாழ்ந்தனர் என்று பொருள் அல்ல.

பன்னாட்டு குளிர்பானங்களின் நச்சுப் பிடியில் மக்கள் சிக்கத் தொடங்கிய போது இயற்கை ஆர்வலர்கள் இளநீரை முன்வைத்தனர். இளநீரின் சத்துக்கள் மற்றும் சிறப்புக்கள் குறித்த பரப்புரைகள் வேகமாக அரங்கேறின. மாநகரங்களில் இளநீர் பருகும் வழக்கம் தேவைக்கு அதிகமாக உயர்ந்தது. நவீனர்களின் சொற்களில் கூற வேண்டுமானால் இளநீர் உற்பத்தியில் பணம் கொழிக்கத் தொடங்கியது. இளநீர் ஏற்றிய வாகனங்கள், நகரங்களிலும், மாநகரங்களிலும், ஆயிரக்கணக்கில் வலம் வந்தன. நம் நாட்டில் இவ்வளவு இளநீர் இவ்வளவு இயற்கையான முறையில் விளைய வாய்ப்பு இல்லை. இதற்காக உயர் விளைச்சல் தென்னை நாற்றுக்கள் களம் இறக்கப்பட்டன. இந்த நாற்றுக்களால், பூச்சிகளை, நோய்களை தாக்குப்பிடித்து வளர முடியாமல் போனது. மோசமான நோய்கள் வழக்கத்தை விட அதிகமான வண்டுகள், பூச்சிகளின் தாக்கம் என்பவற்றால் தென்னந்தோப்புகள் நலிவடைந்தன.

பணம் கொட்டும் தொழிலாக ஒருபக்கம் இளநீர் மாறிவிட்டது. மறுபக்கம் தென்னை மரங்கள் நோயுற்று வாடின. இந்த நெருக்கடியை சமாளிக்க நம் வேளாண் சமூகம் கையாளும் இரக்கமற்ற செயல்களில் மிகச் சிலவற்றை மட்டும் இப்போது பகிர்ந்து கொள்கின்றேன்.

மோனோகுரோடோபாஸ் (monocrotophos) எனும் நஞ்சு, அமெரிக்காவிலும், வேறு பல நாடுகளிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. காரணங்களை விளக்கினால் குலைநடுக்கம் வரும், அதன் சுருக்கத்தைக் குறிப்பிடுகின்றேன். "நம் உடலில் நரம்பு மண்டலத்தைச் சிறப்பாக இயக்கும் சுரப்பிகளில் ஒன்று கோலினெஸ்டெரேஸ் (cholinesterase) என்பது. மோனோகுரோடோபாஸ் நஞ்சுகள் இந்த கோலினெஸ்டெரேஸ் சுரப்புக்களை முடக்கிவிடுகின்றன. இதன் விளைவாக நரம்பு மண்டலம் பதற்றமடைகின்றது. திடீரென உடல் ஆட்டம் கொள்ளுதல், அதிவேகமாக மூச்சுவாங்குதல், துடித்தல், வெட்டி இழுத்தல், வலிப்பு வந்து துடித்தல், படபடப்பு, கட்டுப்படுத்த இயலாத நடுக்கம், போன்ற அறிகுறிகள் தோன்றித் துடித்து செத்துவிழுதல் நிகழும் வாய்ப்பை மோனோகுரோடோபாஸ் உருவாக்குகின்றது. "தாவரங்களில் உள்ள பூச்சிகளும் வண்டுகளும் செத்துவிழ வேண்டும்" என்பது நவீன மேதைகளின் கண்டுபிடிப்பு.

'சின்னஞ்சிறு உயிரினங்களை இவ்வளவு குரூரமாகக் கொலைசெய்வது பாவம் அல்லவா?' என்ற அறச்சிந்தனை நம்மிடம் இருந்திருந்தால், இந்த நஞ்சு தொடக்கத்திலேயே விரட்டியடிக்கப்பட்டிருக்கும். "உற்பத்தி உயர வேண்டும் பணம் கொழிக்க வேண்டும்" என்ற எண்ணத்தோடு செயற்பட்டதன் விளைவாக இப்போது தென்னை மரங்களின் உயிர்நாடியாக மோனோகுரோடோபாஸ் கலந்த நஞ்சுகள் மாறிவிட்டன.

தொடக்கத்தில் தென்னைக் குருத்துகள் மீது இந்த நஞ்சைத் தெளித்தார்கள். இப்போது, ஒரு நெகிழிப் பையில் நஞ்சை ஊற்றி நீர் கலந்து, தென்னை மரத்தின் வேர்களை சீவிவிட்டு அவற்றில் கட்டிவிடுகிறார்கள். நெகிழிப்பையில் உள்ள நஞ்சு, ஒரு மணி நேரத்தில் முழுதாக தென்னை வேர்களால் உறிஞ்சப்படுகிறது. இந்த செயல்முறையின் வழியாக, மரம் முழுவதும் நஞ்சாக மாற்றப்படுகின்றது.

வேர்கள், நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இளநீருக்கு வழங்குகின்றன. அந்த இளநீர் நமக்கு அருமருந்தாக இருந்தது. வீடுகளில் கறிவேப்பிலைச் செடி வளர்ப்போர், அந்தச் செடியின் வேரில் தயிர் ஊற்றுவது நமது கிராமங்களில் இருந்த வழக்கம். தயிரை வேர்கள் உறிஞ்சினால் கறிவேப்பிலையின் மணம் கூடுதலாக இருக்கும். வேர்களுக்கும் நமக்குமான உறவை இந்த சமூகம் புரிந்து கொண்ட விதம் இதுதான். அது நவீனச் சிந்தனை இல்லாத மூடர்களின் காலம். இது பகுத்தறிவும் நவீனக் கல்வியறிவும் செழித்து வளர்ந்துள்ள காலம். அதனால் வேரில் நஞ்சு ஊற்றுகின்றார்கள்.

வேர்களில் மோனோகுரோடோபாஸ் நஞ்சைக்கட்டிய பிறகு, 'இரு மாதங்களுக்கு அந்த தென்னையில் இருந்து காய், இளநீர்

எதனையும் பறிக்கக் கூடாது' என்ற கட்டுப்பாடு வேளாண் துறையினரால் விதிக்கப்பட்டுள்ளது. வேறு பல நஞ்சுகளும் தென்னை வேரிலும் தண்டிலும் செலுத்தப்படுகின்றன. அவற்றைச் செலுத்தினால், ஆறு மாதங்களுக்கு காய் பறிக்கக் கூடாது. கூர்மையான ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு, 'வலிக்காமல் குத்த வேண்டும், ரத்தம் சிந்தாமல் அறுக்க வேண்டும்' என்பது போன்ற உபதேசங்களை அந்த ஆயுதங்களில் மேல் அச்சிட்டு விற்பனை செய்வது நவீன அறிவாளிகளின் நேர்மை.

தென்னையில் நிகழும் "பசுமைப்புரட்சி" மோனோகுரோடாபாஸீயுடன் முடியவில்லை. சல்ஃபோனமைடு (sulfonamide) எனும் வேதி நஞ்சுக்கான மாத்திரைகளை தென்னைமரத்தில் பதிப்பது, வேளாண் துறையில் அரங்கேறும் மற்றொரு புரட்சிகர தொழில்நுட்ப நடவடிக்கை. தென்னையின் குருத்துகளில், பாளைகளில் இருக்கும் வண்டுகளை அழிப்பதற்காக சல்ஃபோனமைடு நஞ்சு வில்லைகளைப் பயன்படுத்துகின்றனர். தென்னை மரத்தின் தண்டுப்பகுதிகளில் ஒரு துளையிட்டு அதன் உள்ளே மாத்திரைகளைப் பதித்து இந்தத் துளையை சீமெந்தால் அடைத்துப் பூசிவிடுவது இந்தத் "தொழில்"நுட்பம். இவ்வாறு செய்த சில நிமிடங்களில் தென்னை மரத்தின் உச்சியில் வண்டுகள் செத்து விழும். என்று பரவலாகப் பேசிக்கொள்ளும் அளவுக்கு வீரியமிக்கது சல்ஃபோனமைடு நஞ்சு.

சல்ஃபோனமைடு மாத்திரைகள் பதிக்கப்பட்ட தென்னை மரங்கள் செத்து, இற்று விழத் தொடங்கும் நிலை இப்போது உருவாகி விட்டது. புரிகிறதா உங்களுக்கு? தன் மீது தெளிக்கப்பட்ட நஞ்சுகளின் அளவைத் தாள இயலாமல், அவ்வளவு கம்பீரமான தென்னைகளே செத்துக்கொண்டுள்ளன.

கொப்பரைத் தேங்காய்க் கிடங்குகளிலும், பசுமைப்புரட்சியின் எண்ணற்ற செயற்பாடுகள் நிகழ்கின்றன. அவற்றில் முக்கியமான தொழில்நுட்பம் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.

கொப்பறைத் தேங்காய் என்றால், எண்ணெய் தன்மையுடன் உள்ள முற்றிய, காய்ந்த தேங்காய். கிடங்குகளில், கொப்பரைத் தேங்காய்கள் குவியல் குவியலாகக் கொட்டி வைக்கப்பட்டிருக்கும். நாளடைவில் ஈரப்பதன் உருவாகி தேங்காய் மீது கருமை

**தென்னையின் வேரில் நெகிழிப் பையுடன் நச்சுநீர், தண்டுப் பகுதியில் சிமெந் பூச்சுடன் நச்சு மாத்திரைகள் பாளையில் நச்சுக் குருணைகள், தென்னையின் கீழே வெட்டப்பட்டுள்ள குழிகளில் பிராய்லர் கோழிப் பண்ணைக் கழிவுகள். இதுதான் இப்போதைய தோட்டங்களின் காட்சிப் பதிவு.**

படியத்தொடங்கும். அதாவது, தேங்காய்கள் மீது கறுட்பு வண்ணத்தில் பூஞ்சைகள் வளரும். இந்த நிலையில் தேங்காய்களை வெய்யிலில் காய வைத்தால், பூஞ்சை கட்டுப்பட்டு விடும். இந்த நவீனப்புரட்சிக் காலத்தில் வெயிலில் உலர்த்துவது, பழைமையான, முட்டாள்தனமான அல்லது நடைமுறைக்கு ஒவ்வாத தொழில்நுட்பம் அல்லவா! அதனால், கந்தகம் அடங்கிய வேதி நஞ்சுகளை (sulphar) கொப்பரைக் கிடங்குகளில் பயன்படுத்துகின்றனர்.

பெரிய வட்டமான இரும்புச்சட்டியில் நெருப்புத் துண்டுகளை நிரப்பி, அதில் கந்தக மாத்திரைகளைப் போட்டு, சட்டையை சல்லடை போன்றஇரும்புமூடியால்மூடினால், மிக அதிக அளவில் புகை வரும். கொப்பறை தேங்காய்க் குவியலை ஒரு தார்ப்பாயால் மூடிவைத்து, அதன் உள்ளே கந்தகப் புகை கொண்ட சட்டியை வைத்து விடுகின்றார்கள். தீயுடன் சேர்ந்த கந்தகப் புகை மிக வீரியமான உயிர்கொல்லி. இவ்வாறான கந்தகப் புகையில் மூட்டம் போடப்பட்ட தேங்காய்கள் கருமை நிறம் நீங்கி, பளிச்சென்ற வெண்மை நிறத்தில் இருக்கும்.

இந்தக்கால பொதுச் சமூகத்துக்கு, வெண்மை நிறம் மிகவும் பிடித்தமானது அல்லவா? சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவது தானே நவீன அறிவியல் துறையின் ஒரே ஒரு குறிக்கோள். கந்தகத் தேங்காய்களில் இருந்து எண்ணெய் பிழிந்த பின்னர், அந்தத் தேங்காய் எண்ணெயும் வெண்மை நிறத்தில் உள்ளது. உண்மையான இயற்கையான தேங்காய் எண்ணெய் மங்கலான பழுப்பு வண்ணத்தில் தான் இருக்கும்.

"தென்னைமரத்தின் உச்சியில் ஏறிய குரங்குகள், தேங்காய்களைப் பறித்து இளநீர் பருகி விட்டு, அங்கு இருந்து தாவி அருகே இருந்த பாக்கு மரங்களில் இறங்கின. பாக்குக் கொட்டைகளை மென்று விட்டு, கீழே இருந்த பலாமரத்தில் குதித்தன. பலாப்பழங்களைச் சிதைத்து உண்ட அந்தக் குரங்குகள் அருகே இருந்த வாழைப்பழங்கள் மீது இறங்கின. செழித்துப் பழுத்திருந்த வாழைப்பழங்களைத் தின்று விட்டு, அருகே இருந்த குளத்தில் குதித்து நீந்திக் கரையேறின" என்பது நமது சங்கப்பாடலில் உள்ள அந்தக் காலத்துத் தோட்டங்களின் காட்சி. கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகிய தொகுப்புக்களில் இவ்வாறான அடுக்குமுறைத் தோட்டங்களின் விவரணைகள் சிறப்பாகப் பதியப்பட்டுள்ளன.


தென்னையின் வேரில் நெகிழிப் பையுடன் நச்சுநீர், தண்டுப் பகுதியில் சிமெந் பூச்சுடன் நச்சு மாத்திரைகள் பாளையில் நச்சுக் குருணைகள், தென்னையின் கீழே வெட்டப்பட்டுள்ள குழிகளில் பிராய்லர் கோழிப் பண்ணைக் கழிவுகள். இதுதான் இப்போதைய தோட்டங்களின் காட்சிப் பதிவு. இவ்வளவிற்குப் பிறகு வந்து சேரும் இளநீரையும் தேங்காய்களையும் எண்ணையையும் தான் இந்த சமூகத்தில் வாழும் கோடிக்கணக்கான மனிதர்கள் உணவாக உட்கொள்கின்றனர்.

தீயுடன் இணையும் கந்தகம் மற்றும் மோனோகுரோடாபாஸ், சல்ஃபோனமைடு நஞ்சுகள் எல்லாம், தென்னைப் பொருட்கள் வழியாக இந்த சமூகத்தில் அன்றாடம் பரவிக்கொண்டுள்ளன. இவற்றைக் கண்காணிக்க எந்த ஏற்பாடும் இல்லை. கட்டுப்படுத்த எந்த வழிமுறையும் இல்லை. தடுக்கும் சிந்தனையோ துளி கூட இல்லை.

உண்மை என்னவென்றால், இவற்றை இனிக் கட்டுப்படுத்தவோ ஒரேயடியாக ஒழிக்கவோ இயலாது. வேதிப்பொருட்களை தடைசெய்தால் இப்போதைய விவசாயிகளில் பெரும்பாலானோர் விவசாயத்தில் இருந்தே விலகிச் செல்வார்களே தவிர உடனடியாக மரபு முறைக்குத் திரும்ப மாட்டார்கள். ஏனெனில் கடந்த 60 ஆண்டுகால பசுமைப் புரட்சியின் விளைவாக அவர்களது மனங்களும், நிலங்களும் பக்குவம் இழந்துவிட்டன.

தென்னைச் செடிகளை, நம் மரபு "தென்னம்பிள்ளை" என அழைத்தது. பணத்துக்காகவும், வேறு பல போலித்தனங்களுக்காகவும் "பிள்ளைகளை"ப் பலியிடும் காலம் தானே இது.

---



# பல் ஜோதிடம்: இடைவெளிகளிற்கும் இருக்கிறது அர்த்தம்!

புன்னகைமிக்க முகம் ஒருவரின் அழகை மேலும் அதிகரித்துக் காட்டும். சிலருக்கு பற்களின் இடையே இடைவெளி இருப்பதால், அதை அசிங்கமாக எண்ணு வார்கள். மேலும் அதை சரிசெய்ய சிகிச்சைகளையும் மேற்கொள்வார்கள்.

ஆனால் அத்தகையவர்களுக்கு ஓர் நற்செய்தி. அது என்னவெனில் பல் ஜோதிடப்படி, பற்களின் இடையே இடைவெளி இருந்தால், அது மிகவும் அதிர்ஷ்டமாம். மேலும் அப்படிப்பட்ட பற்களைக் கொண்டவர்கள் துணிச்சல் மிக்கவர்கள்.

இதுபோன்று ஏராளமான நல்ல குணங்கள் பற்களின் இடையே இடைவெளிகொண்டவர்களிடம் இருக்கும். இங்கு பற்களின் இடையே உள்ள இடை வெளி எதைக்குறிக்கிறது என்று கொடுக்கப்பட்டுள்ளது. அதைக் கொஞ்சம் படித்துப் பாருங்கள்.

### அதிர்ஷ்டக்காரர்கள்

நிறைய மக்களுக்குபற்களின்இடையே இடைவெளிஇருந்தால் பிடிக்கா து. ஆனால் அது அதிர்ஷ்டத்தைக் குறிக்கும்ஒன்றுஎன்பது தெரியுமா? நீங்கள் பற்களின் இடையே உள்ள இடைவெளியை பல் மருத்துவரைக் கொண்டு சரிசெய்ய விரும்பினால், உங்களைத் தேடி வரும் அதிர்ஷடத்தை குப்பைத் தொட்டி யில் தூக்கி எறிகிறீர்கள் என்றர்த்தம்.

### நம்பிக்கை மற்றும் தைரியம்

முன்பற்களுக்கு இடையே இடைவெளி இருந்தால் , நீங்கள் நம்பிக்கையா னவர்கள் மற்றும் மிகுந்த தைரியத்தைக் கொண்டவர்கள் என்பதைக் குறிக் கும். சொல்லப்போனால் உங்களுக்கு ரிஸ்க் எல்லாம் ரஸ்க் சாப்பிடுவது போல். மற்றவர்களால் முடியாத எந்த ஒரு கஷ்டமான காரியத்தையும் தைரியத்துடன் மேற்கொள்வீர்கள்.

### எதிலும் வெற்றி


பற்களுக்கு இடையே இடைவெளி உள்ளவர்கள், எந்த ஒரு விஷயத்திலும் வெற்றி அடையாமல் ஓயமாட் டார்கள். அந்த அளவில் இவர்கள் வெற்றியை ருசி காண விரும்புபவர்க்ள். அவர்களின் முயற்சிக்கு ஏற்ப வெற்றி யும் அவர்களுக்கே வந்து சேரும்.

### புத்திசாலி

முன்பற்களிடையே இடைவெளி இருப்பவர்கள் மிக வும் புத்திசாலி மற்றும் கற்பனைவளமிக்கவர்கள். மேலும் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் இருப்பார்கள்.

### சிறந்த பேச்சாளர்

இம்மாதிரியான பற்களைக்கொண்டவர்கள் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார்கள். நாள் முழுவதும் பேச சொன்னாலும் சற் றும் தளராமல் பேசுவார்கள். இந்த பேச்சாற்றலை அவர்களது அலுவலகத்தில்



காண்பித்தால், வாழ்க் கையில் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம்.

### நல்ல நிதி மேலாளர்

பற்களுக்கு இடையே இடைவெளி உள்ளவர் கள், நிதி பிரச்சனைகளை பயனுள்ள முறை யில் சமாளிப்பார்கள். இவர்களிடையே நல்ல சேமிப்பு பழக்கம் இருப்பதால், நிதி சம்பந்தப் பட்ட பிரச்சனைகளை புத்திசாலித்தனமாக கையாள்வார்கள்.




# திக்கோடை -தும்பாலைமக்களின் குறைகள் தீர்க்கப்படுமா?

திலக்ஸ் ரெட்ணம்

"என்ன செய்யிறமனே இந்த தொழில செஞ்சாத்தான் சோறு தின்னலாம். இரண்டு பொம்பிளையல் ஒன்றை கரை சேர்த்துவிட்டேன். இன்னொன்டு இருக்கே. நானும் என்ட மனுசனும் மகனும் இந்த குடில்லதான் இருக்கோம். இருபது வருச மாக இந்த கல்லுடைக்கும் தொழில செஞ்சு வாறன். இதில பத்து பதினஞ்சு நாளைக் கொருக்கா ஆறாயிரம் ரூபாய் காசு மிஞ்சும். அதிலதான் எல்லாம் செய்யனும். இங்க முக்கிய பிரச்சினையாக குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. கோடைகாலத்தில் கிட்டமுட்ட நான்கு மாதங்கள் இந்த குடிநீர் பிரச்சினை வரும். இதையும் தீர்த்து வைக்கவேண்டும். திக்கோடை பிரதான வழியூடாக மாத்திரம் தான் குடிநீர்க்குழாய் திட்டம் செல்கின்றது. எங்களுக்கும் அந்ததிட்டம் வருமாக இருந்தால் மிகவும் பெரிய கொடையாக இருக்கும்" என்கின்றார் லவகுமார் மலர்.

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திக்கோடைக் கிராமத்தின் பிரிவுதான் தும்பாலை. திக்கோடையில் 485 குடும்பங்கள் வாழ் கிறார்கள். தும்பாலையில் 85 குடும்பங்கள் வாழ்கிறார்கள். எத்தனை ஆட்சி மாறினா லும் இந்த கிராமத்தில் அடிப்படை பிரச்சி னைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. காட்டு யானைகளின் அட்டகாசமும், குடிநீர்ப்பிரச் சினையும் வீடில்லாததும் இந்தகிராமத்தின் சாபங்கள்.

ஆரம்பத்தில் இந்த கிராமத்தில் 3 குடும் பங்கள்தான் இருந்தன. 1990 வன்செயலின் பின்னர் பலரும் குடியேறியுள்ளனர்.

திக்கோடையில்: 144 குடும்பங்கள் வீடில்லாமல் வாழ்வதுடன் 122 குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலும் 22 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கி வாழ்கின் றனர். இங்கு 139 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி தேவையாக உள்ளது. விவசாயம் மற்றும் மந்தை வளர்ப்பு ஜீவனோபாயத் தொழிலாக இருந்தாலும் தற்போது கல்லுடைக்கும் தொழிலும் ஜீவனோபாயத் தொழிலாக மாறிவிட்டது.

இந்த கிராமத்தில் முறையான பாதை வசதியில்லாமல் மக்கள் நீண்டகாலம் சிரமப்படுகிறார்கள். போக்குவரத்து வசதிகள் சீரின்மை, பாதைகள் புனரமைக்கப்படாமை என்பன தீர்க்கப்படவில்லை. தற்போது கொங்கிறீட் பாதை இடப்பட்டாலும், நீண்ட காலமாக அது முடியாமல் இழுபறியில் இருக்கிறது.


சிவகுணம்


நிமலன் சாரதா


ராமக்குட்டி புவனேஸ்வரி


லவகுமார் மலர்

பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் அடுத்த பிரச்சனை, வைத்தியசாலை. திக்கோடையை சுற்றிலும் சுமார் 25 ஊர்கள் உள்ளன. ஆனால் வைத்தியசாலை கிடையாது. திக்கோடையில் 40 வருடங்களாக வசித்து வரும் சிவகுணம் இதுபற்றி குறிப்பிடும்போது 'விபத்து அல்லது அவசர பிரச்சனையில் ஒருவரை வைத்தியசாலைக்குகொண்டுசெல்வ தென்றால் எட்டு கிலோமீற்றர் தொலை விலுள்ள பளுகாமம் பிரதேச வைத்திய சாலைக்கு அல்லது பதினைந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு போக வேண்டும். மேலதிக சிகிச்சையெனில் நாற்பது கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அல்லது கல்முனை வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் தும்பங் கேணியில் வைத்தியசாலை நிறுவ இடம் பார்த்தார். ஆனால் எதுவும் நடக்கவில்லை' என்றார்.

## காட்டு யானை பிரச்சினை

இந்த கிராமம் எதிர்கொள்ளும் பெரிய ஆபத்து காட்டு யானைகள். தாராளமாக யானைகள் கிராமத்திற்குள் வருகின்றன. மூன்றுபேர் இதுவரை யானைத்தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளனர்.

'பிள்ளைகள் மூன்றரை கிலோமீற்றர் கால்நடையாக காட்டுவழியாக நடந்து பாட சாலை போகிறார்கள். அது யானைக்காடு. அதை கடந்துதான திக்கோடை பிரதான வீதியில் உள்ள பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. பிரத்தியேக வகுப்புகளுக்கு அந்தி நேரத்திலும் இரவு நேரத்திலும் செல்வது ஆபத்தாக உள்ளது. காட்டுயானை அச்சத்தா லேயே கல்வியை அனேகர் நிறுத்திவிடு கிறார்கள். பாடசாலைக்கு செல்லாமல் கல்லு டைக்கச் செல்கிறார்கள். கிராமத்தில் அதிக மாணவர்களுக்கு அதுதான் தொழில். முன்னர் கல்குவாரிக்கு சென்று உடைத்தார்கள். யானைகள் அட்டகாசத்தால் குவாரிக்கு போய் சரளைக்கற்களை ஏற்றிவந்து வீடுகளில் வைத்து உடைக்கிறார்கள். இதனால் மேலதிக செலவுகள்தான் ஏற்படுகிறது' என்று ஆதங்கப்பட்டார் நிமலன் சாரதா.

## குடிநீர்ப்பிரச்சினை

'நீர்ப்பிரச்சினை பெரிய பிரச்சனையாக உள்ளது. சாதாரண பாவனைக்கும், குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு முன்னர் குளிப்பதற்கு ஒரு கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. அதிகாலையிலும் செல்ல முடியாத நிலை. காரணம், காட்டுயானைகள் பற்றைகளில் மறைந்திருக்கும் என்கிற பீதியில் விடிந்த பின்னர்தான் செல்கிறார்கள். இதனால் பாடசாலைக்கு பிந்திச் செல்கிறார்கள்.

எனக்கு வீடு இல்லை. கணவர் யுத்தத்தில் இறந்துவிட்டார். விறகு விற்றுத்தான் பிள்ளை களை வளர்த்துள்ளேன். பலவீட்டுத்திட் டங்கள் இங்கு வழங்கப்படுகின்றன. எனினும், எனக்குத்தான் வீட்டுத்திட்டம் தாவில்லை' என்றார் சோகமாக ராமக்குட்டி புவனேஸ்வரி.

பல்வேறு குறைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தும்பாலை கிராமமக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா? அத்தியவசிய தேவைகள் எட்டாக் கனி யாகவே மாறிவிடுமா?







முல்லைத்தீவு ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலயத்தின் கலை இலக்கியவிழாவும் பரிசளிப்புவிழாவும் இடம் பெற்றுள்ளது. சுப்பிரமணியம் வித்தியாலய அதிபர் இ.செல்வநாயகம் தலைமையில் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி கலையரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பி.சியா

கடந்த பதினைந்து இதழ்களாக தொடர்ந்த இந்த பகுதியின் இறுதிப்பகுதி இது. நமது சமூகத்தில் பெண்களின் நிலை என்ன? சமூக அசைவியக்கத்தில் பெண்களின் பாத்திரம் என்ன? ஒரு பெண் தன்னை முழுமையாக வெளிக்காட்டிக்கொள்ளவும், பாதுகாப்பாக உணரவும் சமூக உருவாக்கத்தில் வாய்ப்புள்ளதா? ஒரு ஆண் எடுத்துக் கொள்ளும் சுதந்திரங்களை பெண்ணிற்கும் சமூகம் வழங்குகிறதா?

கலாசாரம், பண்பாடு என்ற பெயரில் உருவானவையெல்லாம் பெண்களை கட்டியிருக்கும் நுண்ணிய வலைகளா? ஆண்களின் விருப்பு, எதிர்பார்ப்பிற்கு ஏற்ப நடக்கும் பெண்களைத்தான் சமூக நடைமுறைகள் பாதுகாக்கிறதா? ஆண்களின் உலகத்திற்குள் நுழையாத பெண்களிற்கு சமூகத்தின் நீதிமுறை இரக்கமே காட்டாதா?

இப்படி பல கேள்விகளை இந்த தொடர் முழுவதும் எழுப்பி, அது பற்றி பேசியிருந்தோம். பெண்கள் ஏன் விழிப்படைய வேண்டும், எவற்றிலெல்லாம் விழிப்படைய வேண்டும், பொதுப்பார்வையில் எவ்வாறான மாற்றங்களை கோர வேண்டுமென்றெல்லாம் பேசினோம்.

எனினும், எழுதுவதை... பேசுவதை... படிப்பதை நடைமுறையாக்கும் போதுள்ள சிக்கல் பெரியது. அதிக விலை கொடுக்க வேண்டும். ஆனால், நமது சுயத்தை அறிந்து கொள்ளும்போது இந்த சவால்களை இலகுவாக கடக்க முடியும்.

கடந்தவாரம், ஒரு சம்பவம். யாழ்ப்பாணத்தின் புறநகரொன்றை சேர்ந்த ஒரு பெண். நிதி நிறுவனமொன்றில் பணிபுரிகிறார். அவர் சட்டத்தின் உதவியை நாடினார். எல்லா பெண்களும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் சந்திக்கும் சிக்கல்தான். நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பெண்களை எப்படியெல்லாம் அச்சப்படுத்துகிறது, தொழில்நுட்ப சாதனங்கள் பெண்களை பாதுகாப்பாக உணர வைக்கவில்லையென்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த சிக்கலில் சிக்குப்படும்

## பெண்ணெழுத்து 16

பெண்களில் மிகப்பெரும்பாலானவர்கள் சரணடைந்துவிடுகிறார்கள். மிகச்சிலர்தான் துணிந்து எதிர்கொள்கிறார்கள்.

இந்த யுவதியின் வீட்டின் பக்கமாகமுள்ள கிணற்றடியின் ஒருபக்க மறைப்பு அயல்வீட்டுக்காரர்களின் சுவர். அந்த வீட்டில் சில வாலிபர்கள் உள்ளனர். அந்த வீட்டில் சிசிரிவி கமரா பொருத்தியிருக்கிறார்கள். வீதியை இலக்காக வைப்பதாக கூறப்பட்டிருந்தாலும், அது பெரும்பாலும் இவர்களின் கிணற்றடியையே இலக்கு வைத்திருந்தது. காலையில் குளிக்க வந்தபோதுதான் யுவதி அதனை அவதானித்து, பொலிசில் முறையிட்டாள்.

தொழில்நுட்பத்தின் துணையோடோ, சமூக நடைமுறைகளின் துணையோடோ நடக்கும் தாக்குதல்களை பெண்கள் துணிந்து எதிர்கொள்ள வேண்டும்.

பெண்கள் தம்மை அறியவும், தமது உரிமைகளை தெரியவும் வைப்பது ஊடகங்களின் கடமை. அதனை நான் பயன்படுத்திக் கொண்டுள்ளேன் என்ற திருப்தி கடந்த வாரங்களை திரும்பிப் பார்க்கும்போது எஞ்சுகிறது. பெண்கள் தம்மை உணர்வதும், தமது உரிமைகளிற்காக குரல்கொடுப்பதும் ஆண்களிற்கெதிரான நடவடிக்கைகள் அல்ல. அப்படி சமூகத்தில் நிலவும் தவறான அபிப்பிராயங்களை போக்க வேண்டும். பெண்கள் தமது உரிமைகள் பற்றி பேச




**பெண்கள் தம்மை அறியவும், தமது உரிமைகளை தெரியவும் வைப்பது ஊடகங்களின் கடமை. அதனை நான் பயன்படுத்திக் கொண்டுள்ளேன் என்ற திருப்தி கடந்த வாரங்களை திரும்பிப் பார்க்கும்போது எஞ்சுகிறது.**

தயாரானால் ஆண்கள் வீட்டிலிருந்து சமைக்க வேண்டும் என்பதை போல கதைக்கும் சரியான புரிதலில்லாதவர்களை அன்பாக அணுகி, புரிய வைக்க வேண்டும். யாராவது ஒருவர் வீட்டிலிருந்து சமைக்கவேண்டுமென்ற எண்ணத்தை விட செய்யுங்கள். துணைகள் இருவருமே இணைந்து அனைத்து கடமைகளையும் செய்யலாம் சமையல் உட்பட.

பெண் விடுதலையை பாடசாலையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். பெண்பிள்ளைகளின் உரிமைகளை புரிய வைக்க வேண்டும். சவால்களை எப்படி சமாளிப்பதென்பதை கற்றுக்கொடுக்க வேண்டும். சட்டம் எப்படியான பாதுகாப்பை வழங்குகிறதென்ற அறிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சமூகநடைமுறையில், கலாசார கூறுகளில், தொழில்நுட்பத்தின் பெருக்கத்தில் பெணகள் எப்படியான வலைகளால் பின்னப்பட்டு, சிக்கவைக்கப்பட்டுள்ளார்கள் என்ற புரிதல் ஒவ்வொரு பெண்பிள்ளையும் சிறிய வயதிலேயே தெரிந்து வைத்திருக்கட்டும். அதுபோல, ஒவ்வொரு ஆண்குழந்தையும் தனது சகோதரியின் உரிமைகளை உணர வைக்கப்பட வேண்டும்.

சகோதரிகளின் உரிமைகளை அங்கீகரிக்க... பெண்களையும் சக உயிராக உணர்ந்து உரிமைகளை அங்கீகரிக்கும் உயர்ந்த மனித விழுமியத்தை கற்றுக்கொடுத்தால் தொழில்நுட்பம் உள்ளிட்ட சாத்தியங்களை பயன்படுத்தி பெண்களை வேட்டையாடும் வெறியை இல்லாமல் செய்யலாம்.

ஆனால், இது சாதாரண கடமை கிடையாது. பிற்போக்குதனங்களும், கலாசார நடைமுறையென்ற பெயரில் மூடத்தனங்களும் கற்றவர்கள் மத்தியில்த்தான் அதிகமுள்ளன. நமது கல்விக்கட்டமைப்பில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்தால்தான் பெண்விடுதலை செயற்திட்டத்தை முன்னெடுக்கலாம்.


ஆனால் முன்னரைவிட பெண்களின் உரிமைகள் பற்றிய உரையாடல்கள் அதிகரித்துள்ளது. அது தீவிரம் பெற்றால்த்தான் பெண்கள் ஓரளவு பாதுகாப்பான நிலையை அடையலாம். அதை நோக்கிய பயணத்தில் ஒரு சிறு பங்களிப்பாக இந்த தொடரையும் கருதுகிறேன்.

இந்த தொடர் வெளிவந்த நாட்களில் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலுமுள்ள பெண்கள் பலர் தொடர்பு கொண்டார்கள். ஏதோ பேசாப்பொருளை பேசத் துணிந்ததைபோல பாராட்டி பேசினார்கள், எதையும் பேச தடையில்லை, ஒரு நுண்ணிய தடையே இருக்கிறது. அது உங்கள் மனங்களில் உள்ளது, அதை கடந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றேன்.

தொடரின் இந்த இறுதி அத்தியாயத்தை எழுதிக்கொண்டிருக்கும் இன்றைய நாளில் எதேச்சையாக ஒரு சந்திப்பு. பாடசாலை மாணவியொருவர் இந்த தொடரின் அனைத்து பகுதிகளையும் கத்தரித்து வைத்திருந்து, காட்டினார்.

தொடர் வெளிவந்த காலம் முழுக்க படித்து கருத்து சொன்னவர்கள், இந்த மாணவி போன்றவர்கள்தான் இறுதிப்பகுதியை எழுதிக் கொண்டிருக்கும்போது மனதில் நிறகிறார்கள். சமூக அசைவியக்கத்தில் மெல்லிய அலைகளை உருவாக்க வேண்டிய காலத்தில் நிற்கிறோம். அதற்கு இந்த தொடர் ஏதும் பங்களிப்பை வழங்கியிருந்தால் முழு நிறைவடைவேன்.

நன்றி.



சிறுமிகள் இளம் பெண்களுக்கு இந்த கொண்டை மிகவும் பொருத்தமாக இருக்கும். உங்கள் வீட்டு பிள்ளைகளுக்கோ இல்லை நீங்கள் இளம் பெண்களாயின் உங்களுக்கோ இந்த கொண்டயை போட்டு பாருங்கள் அழகு பிய்த்து கொள்ளும். ஆனால் ஜீன்ஸ் மற்றும் முக்கால் சோட்ஸ் ரீசேட் , சட்டைகள் போடும் பொழுது தான் இந்த ஹெயாஸ்ரைல் பொருத்தமாக இருக்கும்.

# குழந்தைகளை குளிப்பாட்டுகையில் பாதுகாப்பு அவசியம்

குழந்தைகள் பிறந்தது குழந்தை பருவத்தை கடக்கும் வரைக்கும் அவர்களின் தூய்மையில் முழுப் பொறுப்பும் தாய்மாரையே சாரும். உங்கள் குழந்தையை பாதுகாப்பாகவும் தூய்மையாகவும் வைத்திருக்க வேண்டும். தூய்மையை கடைப்பிடிப்பதாக கருதி குழந்தைகளின் உறுப்புகளில் பாதிப்பு ஏற்படும் வகையில் நடக்க கூடாது. உஙகள் குழந்தையில் உடல் உறுப்பு தொடர்பான மாற்றங்களை அறிந்து அதற்கு ஏற்றால் போல் அவர்களை தூய்மைப்படுத்த வேண்டும்.

ஆண் குழந்தையின் பிறப்புறுப்பை ஆரோக்கியமாக வைத்திருப்பது எப்படி?

சோப்பு நுரையுடன் கூடிய தண்ணீரில் குழந்தையை குளிப்பாட்டாதீர்கள். அது காயும் போது அவர்களது பிறப்புறுப்பின் தோலில் எரிச்சலை உண்டாக்கும். உங்கள் ஆண்குழந்தையைக் குளிப்பாட்டும் போது அதன் பிறப்புறுப்பின் முன் தோலை மேலே எற்ற வேண்டாம். ஆண் பிறப்புறுப்பின் முன் தோலானது முழுமையாக தனியாகப் பிரிய பல மாதங்கள் ஆகும். சில குழந்தை களுக்கு பல வருடங்கள் கூட ஆகும். ஆகவே அதை ஒன்றும் செய்ய வேண்டாம். அது தானாகவே சுத்தமாக இருக்கும். அதை சுத்தம் செய்வது என்று ஆரம்பித்தால் அதனால் கெடுதல் தான் அதிகம்.


உங்கள் மகளின் பிறப்புறுப்பினை மென்மையான சோப்பு மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தி சுத்தப்படுத்தவும். பிறந்து சில காலம் வரை உங்கள் மகளின் பிறப்புறுப்பு மிகவும் சிவப்பாக இருக்கும். அதிலிருந்து மஞ் சள் நிறத்திலான திரவம் வடியும். அது ஆறி வருவதற்கான அறிகுறி. எனவே கவலைப்பட வேண்டாம்.

ஆனால் பிறப்புறுப்பு தொடர்ந்து சிவப்பாக இருந்தாலோ, அதன் நுனி வீங்கியிருந்தாலோ மஞ்சளாகப் புண்ணாகி யிருந்தாலோ குழந்தையை உடனே டாக்டரிடம் எடுத்துச் செல்லுங்கள்.

பெண் குழந்தையின் பிறப்புறுப்பை ஆரோக்கியமாக வைத்திருப்பது எப்படி?

எப்போதுமே பெண் குழந்தையின் பிறப்புறுப்பை முன்பிலிருந்து பின்பாகத் துடைக்கவும். அப்போது தான் குதத்திலிருந்து கிருமிகள் எதுவும் பிறப்புறுப்பிற்குள் வராது. பிறந்து முதல் சில வாரங்களுக்கு குழந்தையின் பிறப்புறுப்பு வீங்கியும் சிவந்தும்' காணப்படும். வெள்ளையான அல்லது இரத்தம் கலந்த திரவம் குழந்தையின் பிறப்புறுப்பிலிருந்து வடியக்கூடும். இது சாதாரணமான ஒன்று தான். குழந்தை உங்கள் கர்ப்பத்தில் இருக்கும் போது அதற்கு உங்கள் ஹார்மோன்களுடன் ஏற்படும் தொடர்பே இதற்குக் காரணம். இது தொடர்ந்து இருந்தால் குழந்தையை டாக்டரிடம் எடுத்துச் செல்லுங்கள்.





# வழுக்கையில் முடிவளர வீட்டிலேயே வைத்தியம்

வழுக்கைத் தலை பிரச்சினையில் பெண்களை விட ஆண்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் ஆண்கள் பெண்களைப். போல் தங்கள் முடிக்கு போதிய பராமரிப்புக்களைக் கொடுப்பதில்லை.

உண்மையில் ஆண்களை விட பெண்கள் தான் அதிக முடி உதிர்தல் பிரச்சினைக்கு ஆளாகின்றனர். ஆனால் பெண்கள் முடி உதிர்தல் பிரச்சினை ஆரம்பித்த உடனேயே முடியை சரியாக பராமரிக்க ஆரம்பித்து விடுவ தால் வழுக்கை தலை ஏற்படாமல் தப்பிக்கின்றனர்.

**முடி ஆரோக்கியமாக இருப்பதோடு முடி உதிர்தலில் இருந்து தப்பிக்க சில வழிகள்.**

***எண்ணெய் மசாஜ்:*** அனைத்து ஆண்களும் முடி உதிர்தலைத் தடுக்க முதலில்செய்ய வேண்டியது வாரத்திற்கு இரண்டு முறை நீங்கள் பாவிக்கும் எண்ணெயை கொண்டு (தேங்காயெண்ணெய் நல்லெண்ணெய்) மசாஜ் செய்து ஊற வைத்து குளிப்பது தான். இதனால் முடிக்கு தேவையான சத்துக்கள் கிடைத்து முடி நன்கு ஆரோக்கியமானதாக இருக்கும்.

***தேங்காய் பால்:*** தேங்காய் பால் முடியின் வளர்ச்சியை அதிகரிப்பதோடு முடியில் ஏற்படும் வறட்சியை தடுக்கும். எனவே தேங்காய்பாலை தலைக்கு தடவி ஊற வைத்து குளிக்க வேண்டும். குறிப்பாக இந்த முறையால் முடி நன்கு மென்மையாகும்.

***கற்றாழை:*** முடி வலிமையோடு வளர வேண்டுமெனில் கற்றாழை ஜெல்லைக் கொண்டு தலையில் தடவி மசாஜ் செய்ய வேண்டும். அதிலும் இந்த முறையை வாரத்திற்கு இரண்டு முறை செய்து வந்தால் முடி உதிர் தல் குறைந்து முடிவேரில் ஏற்படும் பிரச்சனையை தடுக்கலாம்.

***வேப்பிலை:*** வேப்பிலை அரைத்து தலையில் தடவி ஊற வைத்து குளித்தால் தலையில் உள்ள அழுக்கலைன் சீராக இருப்பதோடு பொடுகு மறைந்து முடி உதிர்தலும் நிறுத்தப்படும். மேலும் இந்த முறையை இன்னும் சிறப்பானதாக மாற்றுவதற்கு வேப்பிலை பேஸ்டுடன் தேன் மற்றும் ஒலிவ் ஒயிலை கலந்து தேய்க்கலாம்.

***முட்டை:*** முடி பராமரிப்பில் முடிக்கு புரோட்டீன் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம். முடி நன்கு வலுவோடும் அடர்த்தியாகவும் வளர வேண்டு மெனில் இந்த புரோட்டீன் சிகிச்சையை வாரத்திற்கு 3 4 முறை மேற் கொள்ள வேண்டும். அதற்கு செய்ய வேண்டியதெல்லாம் முட்டை உடைத்து பாத்திரத்தில் ஊற்றி நன்கு அடித்து ஈரப்பத முள்ள முடியில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து வெதுவெதுப்பான நீரில் முடியை அலச வேண்டும்.

***வெந்தயம்:*** 2 டேபிள் ஸ்பூன் வெந்தயத்தை நீரில் 810 மணி நேரம் ஊற வைத்து அரைத்து தலையில் தடவி ஊற வைத்து குளித்தால் முடி உதிர்வது குறைவது மட்டுமின்றி முடியின் வளர்ச்சியும் அதிகரித்து பொடுகுத் தொல்லையும் நீங்கும்.



# உங்கள் பிள்ளைகளின் வளர்ப்பில் கவனம் இருக்கட்டும்

ஒவ்வொரு குழந்தையும் வளர்க்கப்படும் போதே அது பல விஷயங்களைக் கற்றுக் கொள்கிறது. எனவே பெற்றோர்கள் அந்தக் குழந்தை வளர்ப்பில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாகக் குழந்தைகள் கற்றுக் கொள்ளும் சில முக்கியமான நடைமுறைகள் குறித்து இங்கே கவனிக்கலாம்.

1. ஒரு குழந்தை உற்சாகத்துடன் ஊக்கமும் தந்து வளர்க்கப்பட்டால் அது தன்னம்பிக் கையைக் கற்றுக் கொள்கிறது.
2. ஒரு குழந்தை குறைகள் சொல்லியும் விமரிசக்கப்பட்டும் வளர்க்கப்பட்டால் அது பிறரைப் பழிப்பதைக் கற்றுக் கொள்கிறது.
3. ஒரு குழந்தை சகிப்புத் தன்மையுடன் வளர்க்கப்பட்டால் அது பொறுமையை கற்றுக் கொள்கிறது.
4. ஒரு குழந்தை கேலி கிண்டல் செய்து வளர்க்கப்பட்டால் அது பிறரை கண்டு வெட்கப்பட்டு விலகி நிற்கக் கற்றுக் கொள்கிறது.
5. ஒரு குழந்தை பாராட்டி வளர்க்கப்பட்டால் அது பிறரை போற்ற வாழ்த்தக் கற்றுக் கொள்கிறது.
6. ஒரு குழந்தை பகை எதிர்ப்பு உணர்வோடு வளர்க்கப்பட்டால் அது எப்பொழுதும் சண்டை போட கற்றுக் கொள்கிறது.
7. ஒரு குழந்தை பாதுகாப்பு பயமின்மையோடு வளர்க்கப்பட்டால் அது நம்பிக்கையோடு வாழக் கற்றுக் கொள்கிறது.
8. ஒரு குழந்தை ஸ்திரமற்ற நிலையிலே வளர்க்கப்பட்டால் அது சந்தேகத்தோடு வாழக் கற்றுக் கொள்கிறது.
9. ஒரு குழந்தை மரியாதை மதிப்பு உணர்வோடு வளர்க்கப்பட்டால் அது தன்னை மதித்து விரும்பி வாழக் கற்றுக் கொள்கிறது.
10. ஒரு குழந்தை பழிகள் சொல்லியே பழித்து வளர்க்கப்பட்டால் அது குற்ற உணர்வோடு வாழக் கற்றுக் கொள்கிறது.
11. ஒரு குழந்தை நடுநிலையோடு வளர்க்கப் பட்டால் அது எப்பொழுதும் நேர்மையாக வாழக் கற்றுக் கொள்கிறது.
12. ஒரு குழந்தை ஏமாற்றத்தோடு வளர்க்கப் பட்டால் அது பொய் சொல்லி வாழக் கற்றுக் கொள்கிறது.
13. ஒரு குழந்தை ஏற்பு உணர்வோடும் நட்பு உணர்வோடும் வளர்க்கப்பட்டால் அது எப்பொழுதும் இவ்வுலகை இவ்வுலக மக்களை அன்புடன் ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்கிறது.



# மலச்சிக்கல்

இது பெரும்பாலும் ஆண் பெண் குழந்தைகள் வயோதிபர்கள் என்று வேறுபாடு இல்லாமல் எல்லோர் மத்தியிலும் ஏற்படும் பிரச்சினையாகும். இதன் விளைவாக உணவு உட்கொள்ள மனமின்மை வயிற்று குத்து தண்ணீர் தாகம் வயிறு குமட்டுதல் போன்ற அறிகுறிகள் தென்படலாம்;.

ஒரு நாளுக்கு இந்த நோய் வந்தாலே அந்த நாள் முழுதும் சினம் கோபம் வேறு வேலைகளில் நாட்டமின்மை என்பன காணப்படும். குழந்தைகள் அழுதபடியே இருப்பார்கள். மிக கஸ்ரப்பட்டு மலம் கழித்தால் குதை வழியில் எரிவு ஏற்பட்டு புண் வந்து தொடர் வேதனையை கொடுக்க கூடும். எனவே பெரும்பாலும் இந்த நோய் ஏற்படாமல் எம்மை நாமே பாதுகாத்துகொள்ள வேண்டும்.


ஏன் மலச்சிக்கள் ஏற்படுகின்றது?

1. நார்த் தன்மையான உணவுகளை சேர்த்து கொள்ளாமையினால்.
2. தேவையான அளவு நீர் அருந்தாமை யினால்.
3. உடற் பயிற்சியின்மை
4. உணவு பழக்கவழக்கத்தில் ஒழுங் கின்மை. (குறிப்பிட்ட ஒரு நேரத்தை உணவு உண்பதற்காக கடைப்பிடிக் காமை.)
5. உயிர்ச்சத்து “பீ” நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொள்ள வேண்டும். அதை உணவில் கவனிக்காவிடத்து.
6. மலம் கழிப்பதை நாளாந்த பழக்கமாக கொள்ளாமல் அடக்குதல் மற்றும் தாமதித்து .செல்லுதல்.
7. நீண்ட நேரமாக உடலை ஒரே நிலையில் வைத்திருத்தல்.
8. பெருங் குடலின் தசைகள் பலவீனமாகுதல். துசைகளின் சக்தி குறைவடைதல் எனலாம்.
9. போதுமான நீர் அருந்தாமை.
10. குளிர்மையான உணவுகள்(பழங்கள் பச்சை காய்கறிகள்) உணவில் சேர்க்க தவறுதல்.

இவ்வாறான செயற்பாடுகளினால் மலச்சிக்கல் இலகுவாக ஏற்படக் கூடும். எனவே அதை கவனத்தில் எடுப்பதனூடாக எம்மை நாமே பாதுகாத்து கொள்ள முடியும்.

நீங்களும் வேலைக்கு போகும் பெண்களா? இன்றய இயந்திர கால ஓட்டத்தில் பெண்கள் வேலைக்கு போவது என்பது சர்வசாதாரணமாகியுள்ள நிலையில். ஒரு பெண்ணும் ஆனும் சேர்ந்து சம்பாதித்தால் மட்டுமே ஒரு குடும்பத்தை கொண்டு நடத்த முடியும். அப்படி இருக்கையில் வேலைக்கு போகும் பெண்கள் வீட்டு பணிகளையும் தவறாமல் செய்வதனால் தூங்கும் நேரத்தை தவிர மற்றய நேரமெல்லாம்

# நீங்களும் வேலைக்கு செல்லும் பெண்களா?



இயந்திரமாக தான் சுற்றி வருவார்கள். தங்களுடைய உடல் ஆரோக்கியத்தில் கூட அக்கறையற்றவர்களாக காணப்படுவார்கள். ஆனால் பம்பரமாக தொடர்ந்தும் சுற்றி வருவதற்கு உடல் ஆரோக்கியம் அவசியம் என்பதை மறக்க கூடாது பெண்களே.

பெண்கள் பின்பற்ற வேண்டிய ஆரோக்கிய குறிப்புகளை பார்க்கலாம்..

1 தொலைபேசியில் உரையாடும் பொழுது நடந்தபடியே உரையாடுங்கள். வேலைத் தளங்களில்ரைப்பிங்போன்றகடுமையான வேலையை தவிர பெரும்பாலும் நின்று கொண்டு செயற்படும் வாய்ப்பு கிடைத்தால் நின்று கொண்டே செயற் படுங்கள். அதிக நேரம் ஒரே இடத்தில் இருப்பதை கறைப்பதே உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்த வழி. தோப்பை வைத்தல் போன்ற சிறு பிரச்சனைகளில் இருந்து கூட பாதுகாப்பு பெற முடியும்.

2 உங்களுக்கு பொருந்தக்கூடிய சில உடற்பயிற்சிகளை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக வாரத்திற்கு இரண்டு முறை 20 நிமிடங்களுக்கு தசை வலுவூட்டும் பயிற்சிகள் சிலவற்றை செய்வது நல்லது. அல்லது இடைவேளைப் பயிற்சியாக நடைப்பயிற்சி அல்லது மெது ஓட்டம் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இவை உடல் ஆரோக்கியத்திற்கும், உடற்கட்டுக் கும் புதுப்பொலிவை அளிக்கும்.

3 வேலைக்கு போகும் பெண்களின் ஆரோக் கியத்தை பேணுவதில் உணவுமுறை மற்றும் உடற்பயிற்சி ஆகிய இரண்டும் முக்கிய பங்கு வகிக்கின்றன. காலை உணவில் புதிதான பழ வகைகளை சேர்த்துக் கொள்வது சிறந்தது. இதனால் பழங்களில் உள்ள குளுக்கோஸ் உடலின் இனிப்பு வேட்கையை பூர்த்தி செய்துவிடும். முடிந்த வரை காலை உணவை தவிர்க்க கூடாது.

4 உடல் ஆரோக்கியத்திற்கும், சீரான இயக்கத்திற்கும் நீர் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. எனவே அன்றாடம் குறிப்பிட்ட இடைவேளைகளில் நீர் அருந்தும் வழக்கத்தை கடைப்பிடிப்பது அவசியம். இது உடலில் நீர்ச்சத்து குறைந்து போகாமல் தடுக்கும். மேலும் தினமும் 3 லிட்டா தண்ணீர் குடிக்க வேண்டியது முக்கியம். இதனால் உடலில் உள்ள தேவையில்லாத கழிவுகள் வெளியேறும்.

5 மா பொருள் கொண்டு தயாரிக்கப்படும் பிஸ்கட், இனிப்பு றொட்டிகள் போன்றவற்றையும்,தேன் மற்றும் சொக்லேட்டுக்கள் போன்றவற்றையும், அதிக அரிசி உணவையும் தவிர்த்திடுங்கள். இவை இரத்த சர்க்கரை அளவை திடீரென்று அதிகரிக்கும் தன்மை கொண்டவை என்பதோடு, இன்சுலின் சுரப்பை தூண்டிவிட்டு, உடலில் கொழுப்பையும் சேர்த்துவிடக்கூடும்.

6 பெண்களை பொறுத்தவரையில் ஒரு மணிநேர உடற்பயிற்சி செய்முறைகள் போதுமானது. எனவே அதிக நேரம் ஜிம்மில் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது களைப்பையும், சோர்வையும் ஏற்படுத்தி விடும்.

இவ்வாறு சின்ன சின்ன விடயங்களை கடைப்பிடிப்பீர்கள் ஆனால் நீ;ங்களும் அரோக்கியம் நிறைந்தவர்கள் தான். முதுமை யிலும் ஒரு இளமை வெளிப்பட வாழ்ந்திடுவீர் பெண்களே.



# முடியும் என்ற வார்த்தையில் வெற்றியுள்ளது

சியா

'விளையாட்டு துறையில் அதிகம் ஈடுபாடு காட்டாத என்னை இனம் கண்டது பயிற்றுவிப்பாளர்தான். நான் குண்டாக இருப்பதாலோ என்னமோ என்னை 'குண்டெறிவதற்குதான் தெரிவு செய்தார். பின்னர் பளுதூக்க ஆரம்பித்தேன்' உற்சாகமாகவும், நகைச்சுவையாகவும் அறிமுகம் செய்து கொள்கிறார் மனோஜர் ஸ்ரீநீஸ்கந்தராசா.

19 வயது பிரிவில் 138 கிலோ எடை தூக்கி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். கொக்குவில் இந்து கல்லூரி மாணவனான இவரை பாடசாலையிலேயே சந்தித்தோம்.

'சொந்த இடம் நல்லூர். அப்பா விற்பனையாளர். அண்ணா, அக்கா, தம்பியென நாங்கள் நால்வர்.

பளுதூக்குவதற்கு சேர் கூப்பிடும்போது ஓடி ஒளிந்திருக்கிறேன். நாங்கள் என்ன பதக்கமா பெறப் போகிறம். சும்மா நேரத்தை வீணடிக்க கூடாது என்று நினைப்பேன். ஆனால் சேர்தான் உன்னால் முடியும் என்ற தைரியத்தை தந்தார். அவருடைய தைரியத்தில் தான் பளுதூக்கவே ஒப்பு கொண்டேன்.

குறுகியகால பயிற்சிதான். ஆனால் காலை மாலை தவறாமல் பயிற்சி எடுப்பேன். சேர் எனக்கு அடிக்கடி சொல்வார் 'எதற்கும் நீ பயப்பிட தேவையில்லை. நீதான் வெற்றி பெறுவாய். உருவத்தை வைத்து ஒருவரை எடை பொட முடியாது. உன்னிடம் திறமை உள்ளது. முழு ஈடுபாடு இருந்தால் போதும்' என்பார். அவர் சொன்னதை போலவே ஈடுபாட்டுடன் செயற்பட்டு வெற்றியை ஈட்டியுள்ளேன்' என பூரிப்பாக பேசினார்.


பளுதூக்குவதற்கு வீட்டில் எப்படி சம்மதித்தார்கள், எதிர்காலமும் பளுதூக்கல்தானா என்று கேட்டோம்.

'வீட்டில் படிப்பில்தான் அதிகம் வழிநடத்துவார்கள். எனவே விளையாட்டு என்றதும் பேசுவார்களோ என்று பயந்தேன். ஆனால் 'நாங்கள் வித்தியாசமானவர்கள்' என பெற்றோர் நிரூபித்தனர். முழு குடும்பமுமே எனக்கு ஆதரவு தந்து உற்சாகப்படுத்தியது. நான் பயிற்சிக்கு, போட்டிக்கு எங்கு சென்றாலும் அப்பா ஏற்றிச்செல்வார். பிள்ளைகளின் வளர்ச்சியில் அப்பா அவ்வளவு அக்கறையாக இருக்கிறார்.

எல்லோரும் போல எனக்கும் சின்ன வயதில் இருந்து இலட்சியம் உள்ளது. பொறியியலாளர் ஆக வேண்டும் என்று. நிச்சயம் படித்து என் இலட்சியத்தை அடைவேன். பளுதூக்கலையும் கைவிடும் எண்ணமில்லை. வாய்ப்பிருக்கும்வரை அதிலும் ஈடுபடுவேன்.

பெற்றோர் எவ்வளவு கஸ்ரப்பட்டு எங்களை படிக்க வைக்கிறார்கள் என்பது தெரிந்துள்ளேன். ஆகவே, அவர்கள் தொடர்ந்தும் சந்தோசப்படும் விதமாக எனது செயற்பாடிருக்கும்' என சமர்த்தாகவும் பேசினார் இந்த சாதனையாளர்.

வளப்பற்றாக்குறை, வசதிகள் இல்லாமை போன்ற காரணங்களை குறிப்பிட்டு ஒதுங்கிச் செல்லாமல் தடைகளை கடந்து சாதித்துள்ள இந்த மாணவனை தீபமும் வாழ்த்துகிறது.



# மின்சாரமில்லை... எரிபொருளில்லை
## அசத்தல் நீர்இறைக்கும் இயந்திரம்

வாழையூரான்



நம் நாட்டு கண்டுபிடிப்பாளர்கள் செலவீனங்களை குறைக்கும்வகையிலான கண்டுபிடிப்புக்களை நிகழ்த்திக் கொண்டு தானிருக்கிறார்கள். வசதிகள், வளங்கள் இல்லாமல் சாதிக்கும் நம்மவர்களிற்கு முறையான வாய்ப்புக்கள் கிடைத்தால் பெரியளவில் சாதிப்பார்கள் என்பது நிச்சயம். அப்படியான ஒருவர்தான் வாழைச்சேனை பிரதேசத்தின் மருதநகர் பகுதியைச் சேர்ந்த வீரக்குட்டி ஜெயராஜ். மின்சாரம் மற்றும் எரிபொருள் இன்றி நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

இவ் இயந்திரமானது மின்சாரம் மற்றும் எரிபொருள் இன்றி மனிதவலு மூலம் இயங்குவது. 150 லீற்றர் நீர்த்தாங்கியை நிரப்பி, பின்பு பாவிக்கும் போது சமயலறை, குளியலறை அல்லது வேறு இடங்களில் பாவிக்கும்போது நீர் இறைக்கும் இயந்திரம் தானாகவே சுழன்று நீரை வழங்கும்.

இந்த நீர் இறைக்கும் இயந்திரம் முதலில் மனிதவலு மூலம் இயங்கியது. 2004இல் வடக்கு கிழக்கு கைத்தொழில் திணைக்களத்தினால் மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியின் நடாத்தப்பட்ட கைத்தொழில் கண்காட்சியில் மாகாண மட்டத்தில் முதலாது பரிசும், சான்றிதழும் பெற்றார்.

'நான் வீட்டுத் தோட்டம் அமைந்திருந்தேன். அதனை பராமரிப்பதற்கு தண்ணீர் தேவை, எனினும் தண்ணீர் சேமித்து பயிர்களுக்கு வழங்குவதற்கு இயந்திரம் மற்றும் மின்சார வசதிகள் இருக்கவில்லை.

அச்சமயத்திலே மின்சாரம் இன்றி நீர் இறைக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்து நீர்த்தாங்கியில் நீரை ஏற்றி வீட்டுத் தோட்டம் செய்து வந்தேன்.

மின்சாரம் மற்றும் எரிபொருள் இன்றி மனிதவலு மூலம் இயங்கி 150 லீற்றர் நீர்த்தாங்கியை நிறைத்து, அதன் பின்பு தானாக இயங்கி பாவனையாளரின் தேவைகளை நிறைவேற்றும். அதாவது பாவனையாளர் அதனை பாவிக்கும் போது சமயலறை, குளியலறை அல்லது வேறு இடமோ பாவிக்கும் போது நீர் இறைக்கும் இயந்திரம் தானாகவே சுழன்று நீர் வழங்கும்.

இந்த நீர் இறைக்கும் இயந்திரம் பற்றி முழுமையாக இப்போது கூறமாட்டேன். தோழில்நுட்பத்தை பெற்றுக்கொள்ளும் நிறுவனத்திடமே வழங்குவேன்' என்றார்.

'இயந்திரத்தை தயாரித்து சொந்த பாவனைக்காக பாவித்துக் கொண்டிருந்த சமயத்தில் யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்தேன். இதனால் இயந்திரத்தின் சில பாகங்கள் சேதமடைந்துவிட்டது. பின்னர் சில நண்பர்களின் உதவி மூலம் மீண்டும் இயந்திரத்தை உருவாக்கினேன்.

இவ் இயந்திரமானது 50அடி ஆழத்தில் இருந்து 50 அடி உயரத்திற்கு நீரை உறிஞ்சி நீர் தாங்கிக்கு ஏற்றும் திறன் கொண்டது. கிணறு இல்லாமல் 08 நிமிட நேரத்தில் 500 லீற்றர் நீரை நிரப்ப முடியும்.

அத்தோடு நீர் இறைக்கும் இயந்திரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ளும் பட்சத்தில் குறித்த இயந்திரத்தை கச்சிதமாகவும் அளவில் சிறியதாகவும் குதிரை வலுவினையும் அதிகரித்து கொள்ள முடியும்;.

இவ்வாறு பல கண்டு பிடிப்புக்கள் என்னிடம் உள்ளது. போதிய நிதி வசதியின்மையால் முழுமையாக்க முடியாமல் உள்ளது. நிதிவசதி கிடைத்தால் அவற்றை சாத்தியமாக்கலாம்' என்றார்.

அண்மையில் வவுனியாவை சேர்ந்த போலி கண்டுபிடிப்பாளர் ஒருவர் பத்திரிகைகளையும் வளைத்துப்போட்டு செய்த தில்லுமுல்லை போலல்லாமல் இது அசத்தல் கண்டுபிடிப்பு தானென்பதை வாழைச்சேனை பிரதேசசெயலரும் உறுதி செய்தார். நமது கண்டுபிடிப்பாளர்களை ஊக்கப்படுத்துவது நமது கடமையல்லவா!

# அஷ்ரப்:
# தலைநிமிர்ந்த அரசியல் பயணம் - 2

முகம்மத் இக்பால்


ஹெலி வீழ்ந்த இடத்திலிருந்து மீட்கப்பட்ட உடல்பாகங்கள்



அரசியல் யாப்பில் இருக்கும் முஸ்லிம் சமூகத்தினை பாதிக்கின்ற தேர்தல் விகிதாசார முறையில் பன்னிரெண்டரை சதவீதமாக இருந்த வெட்டுப்புள்ளியை ஐந்து சதவீதமாக குறைக்க செய்யுமாறு கோரப்பட்டதே பிரேமதாசாவுக்கு அஷ்ரப் விதித்த நிபந்தனையாகும். பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு பத்து நாட்களே இருந்த நிலையில் அஷ்ரபின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஜே.ஆர் தலைமையிலான அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் பாராளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

அஷ்ரபின் இந்த தீர்க்கதரிசனமான செயற்பாட்டின் மூலம் சிறுபான்மை சமூக கட்சிகள் மட்டுமல்ல, பெரும்பான்மை சமூகத்தின் சிறிய கட்சிகள் கூட பாராளுமன்றம் செல்லக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் முதன்முதலாக பொதுத்தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு நாடு முழுவதிலுமிருந்து 202016 வாக்குகளை பெற்று நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பாராளுமன்றம் சென்றது. அஷ்ரப் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு முதல்முதலாக பாராளுமன்றம் சென்றார். அத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் மூன்று பாராளுமன்ற பிரதிநிதித்துவம் என்ற அஷ்ரபின் இலக்கை அடைய முடியாததும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தல் மற்றும் பொது தேர்தல் மூலமாக முஸ்லிம் மக்களின் ஆணை இக்கட்சிக்கு கிடைத்தது. இதன்மூலம் பேரம்பேசும் சக்தியாக வளர்ச்சியடைந்ததுடன், அதன் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் ஆளுமையும், திறமையும் பலரையும் திரும்பிப் பார்க்க செய்தது.

இதனால் அஷ்ரபை கொலை செய்வதற்கும் முயற்சிகள் நடந்தன. அதில் குறிப்பிடக்கூடியது, இந்திய படையினருடன் ஒட்டிக்கொண்டு தனது இனத்துக்காக போராடிய சகோதரர்களை காட்டிக் கொடுத்து கொலை செய்துகொண்டிருந்த ஈ.என்.டி.எல்.எப் என்ற தமிழ் ஆயுத குழுவினர் 1989.08.22 ஆம் திகதி மருதமுனை பிரதேசத்தில் வைத்து அஷ்ரபை கொலை செய்வதற்கு துரத்திய பொழுது அஷ்ரப் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரைக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டு ஒவ்வொரு பாராளுமன்ற அமர்விலும் முஸ்லிம் மக்களுக்காக அஷ்ரப் துணிச்சலுடன் உரை நிகழ்த்தியிருந்தார். அஷ்ரப் அவர்களின் அயராத உழைப்பினால் முஸ்லிம் மக்கள் இந்நாட்டில் ஓர் தனித்துவ தேசிய இனம் என்பதனை உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசமும் அங்கீகரிக்கும் வகையில் தனது செயற்பாட்டினை முன்னெடுத்திருந்தார்.

அஷ்ரபின் அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தியது, கருத்து வேறுபாடு காரணமாக தவிசாளராக இருந்த சேகு இஸ்ஸதீனை முஸ்லிம் காங்கிரசிலிருந்து விலக்கியது. இதன் மூலம் கட்சியில் பிளவு ஒன்று ஏற்பட்டு புதிய கட்சி ஒன்று உருவானது.

1994.07.01 ஆம் திகதி சந்திரிக்காவுடன் அஷ்ரப் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டு அவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டார். அந்தகூட்டணி அமோக வெற்றி பெற்றது. அத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஏழு பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக் கொண்டது. யாழ்பாணம் மாவட்டத்திலிருந்தும் முஸ்லிம் காங்கிரசுக்கு ஓர் ஆசனம் கிடைக்கப்பெற்றது. இத்தேர்தலில் ஆட்சியை தீர்மானிக்கும் பேரம்பேசும் சக்தியாக உருவானார்.

பத்தாவது பாராளுமன்றத்தில் கப்பல், துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக பதவி ஏற்று துறைமுக அதிகாரசபையிலும், மற்றும் ஏனைய திணைக்களங்களிலும், ஏராளமான இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்கினார்.

முஸ்லிம்களின் உயர்கல்வியினை அபிவிருத்தி செய்யும்பொருட்டு 1995.10.23 ஆம் திகதி ஒலுவில் பிரதேசத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினை உருவாக்கினார். பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் முஸ்லிம்களுக்காக உயர் கல்விக்கென்று ஓர் நிறுவனம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்க நிகழ்வு. அத்துடன் ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் ஒன்றினையும் அபிவிருத்தி செய்தார்.

இனப்பிரச்சினை தீர்வின்போது முஸ்லிம்களுக்கென்று உருவாக்கப்பட இருக்கின்ற தென்கிழக்கு அலகு என்னும் முஸ்லிம் சுய ஆட்சி பிரதேசத்தில் ஒரு தனி இராச்சியத்துக்குரிய அனைத்து அம்சங்களும் அமைந்து இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதுவே அவரது கனவாகவும் இருந்தது.

அஷ்ரப் ஓர் சிறந்த அரசியல்வாதியாக மட்டுமல்லாது, சிறந்த சட்டத்தரணியாகவும், சிறந்த கவிஞனாகவும் தன்னை அடையாளப் படுத்தி இருந்தார். அவர் எழுதிய கவிதை தொகுப்பான "நான் எனும் நீ" என்ற கவிதை நூல் 1999.09.26 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

சந்திரிக்கா இரண்டாவது ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்ட வேளையில் அவரது ஆட்சியில் அஷ்ரபுக்கு ஏற்பட்ட கசப்புணர்வுகள் கடிதம் மூலமாக பரிமாறப்பட்டு, இறுதியில் ஜனாதிபதி சந்திரிக்கா அஷ்ரபிடம் மன்னிப்பு கோரியிருந்தார்.

அதனை தொடர்ந்து அஷ்ரபின் தயவுடன் மீண்டும் சந்திரிக்கா 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதியானார். 2000 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்காக மீண்டும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் தலைமையிலான பொதுஜன முன்னணியுடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட்டது.

இந்த நிலையில் தேர்தல் பிரச்சாரத்தில் பொருட்டு 16.09.2000 அன்று வானூர்தி மூலம் அம்பாறையை நோக்கி அஷ்ரப் வந்துகொண்டிருந்தபோது வானூர்தி வெடித்து சிதறியதன் மூலம் மரணமானார். இவரது மரணம் திட்டமிட்ட கொலையா அல்லது விபத்தா என்று இதுவரையில் குழப்பமான நிலை இருந்து கொண்டிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் மூன்று பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினை பெறும்பொருட்டு, அதற்கான வியூகத்தினை வகுத்திருந்த அஷ்ரப், அந்த இலக்கினையும் தாண்டி நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருந்தார். ஆனால் அதை பார்ப்பதற்கு அஷ்ரப் உயிருடன் இருக்கவில்லை.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மாமனிதர், மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் தனித்துவ ஆளுமையும், அவரது சாதனைகளும் என்றென்றும் பேசப்பட்டுக்கொண்டே இருக்கும். அவரது இழப்பு இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.





▶ யாழ்ப்பாணம் புதிய சோனகத் தெரு அல் அஸ்ஹர் முன்பள்ளி மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. ஜே 87 கிராம சேவகர் பிரிவில் வாழும் முஸ்லிம் மக்கள் 250 க்கும் மேற்பட்டோர் தற்போது மீள் குடியேறிய தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் இணைத்து வருகின்றனர். ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ரொசான் தமீம் இவ் பாடசாலை கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

## மரபுத்தொடர்

1. 'இறக்கைகட்டிப் பறப்பது' விரைவாக செல்வது அல்லது விரைவாக இயங்குவது
2. 'கதைகட்டி விடுதல்' தவறான ஒரு விடயத்தை ஏனையவர்களுக்கும் சொல்லி பரப்புதல்
3. வெட்டு ஒன்று துண்டு இரண்டு மிகவும் கண்டிப்பாக இருத்தல் அல்லது சொல்லுதல்
4. நாவை அடக்கு அமைதியாக எதுவும் பேசாமல் இருத்தல்
5. மனப்பாரம் மிகுந்த கவலை

## விடுகதை அறிவோம்

1. சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அது என்ன?
2. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?
3. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ் சாதவன், பள்ளநீரைக் கண்டு பதைபதைக்கிறான். அது என்ன?
4. கலர்ப்பூ கொண்டைக்காரி, காலையில் எழுப்பிவிடுவாள். அது என்ன?
5. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?
6. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?
7. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு, வெள்ளைக் காகம் நிற்குது. அது என்ன?
8. காலாறும் கப்பற்கால் கண்ணிரண்டும் கீரை விதை. அது என்ன?
9. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன?
10. உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்?

*விடைகள்*

*(1. மின்விசிறி 2. தொலைபேசி 3. நெருப்பு 4. சேவல் 5. சோளக்கதிர் 6. உப்பு 7. உளுந்து 8. ஈ 9. ஈசல் 10. எறும்பு)*




அன்னம் என்பது 'அனாடிடே' குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவையாகும். இவற்றில் 67 வகையானவை உண்டு. அவை 'அனாசெரினே' எனும் துணைக் குடும்பத்தைச் சேர்ந்தவை. எனினும் அவை வழமையான அன்னங்களிலிருந்து வேறுபட்டவை. இவை முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதன் மூலம் இனம்பெருக்குகின்றன. இவை 3 8 வரை முட்டையிடுகின்றன. தனது குறித்த ஜோடியுடனேயே வாழ்க்கை நடத்தும். சில வேளைகளில் ஜோடிகள் பிரிவதும் உண்டு.

இவை பொதுவாக குளிரான நாடுகளிலேயே அமைதியான நீர் ஏரிகளில் வாழ்கின்றன. அருகிவரும் அழகிய பறவையினமாகும். இலங்கை, இந்தியா போன்ற வெப்ப வலய நாடுகளில் இவை அருகியிருப்பினும் ஏனைய சில ஐரோப்பிய நாடுகளில் இன்னும் வாழ்கின்றன.

### அலங்காரங்களில் அன்னப் பட்சி

அன்னப் பட்சி இற்கு பழங்கதைகளில் கற்பனையான அபூர்வமான இயல்புகள் பல ஏற்றிச் சொல்லப்பட்டுள்ளன. பாலில் கலந்துள்ள நீரைவிடுத்துப் பாலை மட்டும் குடிக்கின்ற பண்பு இதற்கு இருப்பதாகக் கூறப்படுவது இவற்றுள் ஒன்று. இது ஒரு மங்களகரமான குறியீடாகக் கொள்ளப்படுவதன் காரணமாக மரபுவழி அலங்காரங்களிலும், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் அன்னப் பட்சிக்கு முக்கிய இடம் உண்டு. இந்துக்களுக்கு மட்டுமன்றி பௌத்தர்களுக்கும் அன்னப்பட்சி மங்களமான ஒன்றாகும். இதனால் பௌத்த வழிபாட்டுத் தலங்களில் காணப்படும் அலங்காரங்களில் அன்னப் பட்சியின் உருவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

## அறிவுத்திறனும் உடல் பலமும்

ஒரு முதலாளி தனக்குச் சொந்தமான பரந்த இடம் முழுதிலும் தென்னங்கன்றுகளை நட வேண்டும் என்று முடிவு செய்தார். மரக் கன்றுகள் நடுவதற்குப் பள்ளம் வெட்ட வேண்டிய வேலையை ரங்கன் என்பவனிடம் ஒப்படைத்தார். இந்தவாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நன்றாக உழைத்து நிறையச் சம்பாதித்துவிட வேண்டும் என்று நினைத்தான் ரங்கன். ஏனென்றால் அவன் தன் மகளின் திருமணத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் காசு சேர்த்து வருகிறான். இன்னும் போதுமான அளவு பணம் சேரவில்லை. ரங்கன் முதல் நாளில் இருபது மரக் கன்றுகளை நடுவதற்குப் பள்ளம் தோண்டினான். அவன் உழைப்பைக் கண்டு முதலாளி அவனை மிகவும் பாராட்டினார். பிறகு ஒவ்வொரு நாளும் அவன் தோண்டுகிற பள்ளத்தின் எண்ணிக்கை குறைந்து வரத் தொடங்கியது.

நாற்பதாம் நாளில் அவன் காலையிலிருந்து மாலை வரை எவ்வளவோ முயன்றும் இரண்டு பள்ளங்கள்தான் தோண்ட முடிந்தது. ரங்கன் மிகவும் ஏமாற்றமடைந்தான். 'முதல் நாளின்போது இருபது பள்ளங்கள் தோண்டியவன் நாற்பதாம் நாளில் இரண்டு பள்ளம் தோண்டுகிறானே. இவனுக்கு என்ன ஆயிற்று?' என்று முதலாளியும் குழம்பினார். அவர் ரங்கனின் மண்வெட்டியை வாங்கிப் பரிசோதித்துப் பார்த்தார். மண்வெட்டியின் முனை கூர் மழுங்கியிருந்தது. அவர் ரங்கனிடம் கேட்டார்: 'நீ உன் பணி ஆயுதத்தைக் கூர்தீட்டி நன்றாக வைத்துக் கொண்டால் என்ன?' ரங்கன் சொன்னான்: 'இதற்கெல்லாம் எனக்குக் கொஞ்சம்கூட நேரமே இல்லை அய்யா! நான் நாள் முழுதும் சிறிதும் ஓய்வெடுக்காமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன். நிறைய வேலை செய்து நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டுமே. முதலாளி சொன்னார்: 'ரங்கா இந்த மண்வெட்டியைப் போலத்தான் நாமும். நம் அறிவுத்திறனும் உடல் பலமும் மழுங்கி விட்டால் நம்மால் எதுவுமே செய்ய முடியாது. நமக்கு எவ்வளவோ கடமைகள் இருக்கலாம். நிறைய உழைக்க வேண்டி வரலாம். ஆயினும் நம் உடலையும் மனதையும் அறிவையும் எப்போதும் பேணிக் கூர்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மால் நிறையச் சாதிக்க முடியும். நம் இலக்கை விரைவில் அடைய முடியும்.





## யானை பற்றி அறிவீர்களா?

மனிதர்களுக்கு அடுத்து அறிவுத்திறனில் சிறந்து விளங்குபவை யானைகள். நுட்பமான கேட்கும் திறன் மற்றும் மோப்பத் திறன் பெற்றவை. ஆனால் கிட்டப்பார்வை உடையவை. இவற்றின் பாதங்களுக்கு மிகக் குறைந்த அதிர்வுகளையும் உணரும் ஆற்றல் உண்டு.

ஆண் யானைகள், பருவ வயதை எட்டியதும், தனித்து வாழ ஆரம்பிக்கும். பெண் யானைகள் தாய், சகோதரி, மகள் என குழுவாக வாழ்கின்றன. இனப்பெருக்க காலத்தில் பெண் யானையும் தனித்து இருக்கும்.

சாதாரணமாக, மணிக்கு 6 கிலோமீற்றர் வேகம் நடக்கும் அவசியம் ஏற்பட்டால் 40 கிலோமீற்றர் வேகத்தில் விரையும். இவ்வளவு வேகமாக சென்றாலும், வழியில் குறுக்கிடும் சிறிய பள்ளங்களை இவற்றால் தாண்ட முடியாது.

யானையின் கால்களின் அடிப்புறத்தில் வளரும் மென்மையான சதைப் பகுதி சத்தமின்றி நடக்க உதவுகிறது. இதனால் எவ்வளவு அருகில் யானை வந்தாலும் நம்மால் உணர முடியாது.

ஒருநாளைக்கு 200 முதல் 250 கிலோ இலை மற்றும் தழைகளைச் சாப்பிட வேண்டும். அதில் 50 சதவிகிதமே ஜீரணம் ஆகும். ஒரு நாளைக்கு 200 லீற்றர் தண்ணீர் வரை தேவைப்படும். இதற்காக ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு நகர்ந்துகொண்டே இருக்கும். இதற்காக ஆயிரக்கணக்கான சதுர கிலோமீட்டர் பரப்பளவை தனது வசிப்பிடமாக கொண்டிருக்கின்றன.

மனிதர்களால் வனப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுவது காட்டுத் தீ போன்றவற்றால் யானைகள் வாழ்வுப் போராட்டமாக உள்ளது. வேட்டையாடப்படுவது ரயிலில் அடிபடுவது மின்சார வேலியால் தாக்கப்படுவது என யானைகளின் இறப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. காட்டுப் பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகள் வீசும் பிளாஸ்டிக் பொருட்களை உண்பதாலும் யானைகள் இறக்கின்றன.

யானைகளின் உணவுப் பழக்கம் பிற உயிர்களுக்கும் உதவுகின்றன. மரங்களில் உள்ள பழங்கள் இலைகளை யானை சாப்பிட்டது போக கீழே விழும் செடி கொடிகளை சிறிய உயிரினங்கள் சாப்பிடுகின்றன. அடர்த்தியான மரங்களின் பெரிய கிளைகளை உடைத்து இலைகளை உண்பதால் சூரியக்கதிர்கள் தரையில் படுகின்றன. அதனால் அங்கே புற்கள் வளரும். அதை நம்பி பல சிறு உயிரினங்கள் வாழ்கின்றன.

நூறு ஆண்டுகளுக்கு முன் ஆசியாவில் லட்சத்துக்கும் மேலான யானைகள் இருந்தன. இப்போது அவற்றின் எண்ணிக்கை 35,000க்கும் குறைவாகவே உள்ளது.

இப்படி பல உயிரினங்களுக்கு உதவும் யானையை 'பாதுகாப்பது' நமது கடமை.



உலகிலேயே மிகக் காரமான, விலை உயர்ந்த மிளகாய் அஜி சரபிடா. பட்டாணி அளவுக்கு உருண்டையாகவும் ரஞ்சு வண்ணத்தில் பழம் போன்றும் காட்சியளிக்கிறது. காட்டு மிளகாய் என அழைக்கப்படும் இதன் தாயகம் பெரு நாடு. மிகச் சமீபத்தில்தான் இது வணிக ரீதியாக விற்பனைக்கு வந்திருக்கிறது. பார்ப்பதற்கு சிறியதாக இருந்தாலும் உச்சபட்ச காரத்துடன் இருக்கிறது. மிளகாயைக் காய வைத்து, தூளாக்கித்தான் உணவுகளில் பயன்படுத்தி வருகிறார்கள். மிளகாய்களிலேயே அதிக மதிப்பு மிக்கதாக இருக்கும் அஜி சரபிடா, 5 நட்சத்திர உணவகங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது பெரு நாட்டைத் தவிர, வேறு எங்கும் கிடைக்காது. ஒரு கிலோ விலை ரூ.16 லட்சம் முதல் ரூ.23 லட்சம் வரை. நறுமணப் பொருட்களில் வெனிலா, குங்குமப்பூ அளவுக்குச் செல்வாக்கு மிக்கதாக இருக்கிறது.



உலகின் மிகப்பெரிய ரேடியோ டெலஸ்கோப் ஒன்றை சீனா, அந்நாட்டின் தென்மேற்குப் பகுதியான பிங்டாங்க் கவுன்டியின் மலைகளுக்கு இடையே நிறுவியுள்ளது. இது எந்த அளவுக்கு மிகப்பெரியது என்றால், இந்த டெலஸ்கோப் டிஷ் ஆன்டனாக்குள் ஒரே நேரத்தில் 30 கால்பந்து அணிகள் ஓடியாடி வசதியாகக் கால்பந்து விளையாடலாம், அவ்வளவு பெரிது. 500 மீட்டர் அதாவது சுமார் 1500 அடி விட்டம் கொண்டுள்ளது இந்த டெலஸ்கோப். 11 மீட்டர் கொண்ட 4450 முக்கோண வடிவிலான பேனல்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக ரஷ்யாவில் அமைக்கப்பட்ட RATAN எனப்படும் பெரிய டெலஸ்கோப்பும் இதே போன்று வேலை செய்து வருகிறது.



கன மழை காரணமாக ஆந்திர மாநிலம் விசாகப்பட்டித்தில் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. அங்குள்ள ஒருவர் உடல்நிலை சரியில்லாத தனது 6 மாத மகளை காப்பாற்ற தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு சென்ற புகைப்படங்கள் வெளியாகி வைரலாகி வருகின்றன.

காலி, பத்தேகமயில் 4 பிள்ளைகள் தமது தாய்க்கு பணிவிடை செய்யும் பொருட்டு இன்றளவும் திருமணம் ஆகாமல் உள்ளனர். குறித்த தாயின் வயது 91. அவரின் பிள்ளைகளின் வயது 53,58, 62 மற்றும் 66. இவர்களில் இருவர் ஆண்கள், இருவர் பெண்கள். இவர்களில் யாருக்கும் வேலை இல்லை.எனினும் தமது தாயை தம்மால் முடிந்தளவு மிகவும் அன்பாக கவனித்து வருகின்றனர்.







சீனாவில் நடந்த சம்பவம். யுவதியொருவர் இளைஞனொருவரை நாய்ப்பட்டியால் கட்டி, நாயைபோல வீதியில் இழுத்து சென்றுள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தளத்தில் வேகமாக பரவி வருகிறது. இதற்காக காரணம்தான் இன்னும் வெளியாகவில்லை.



பிரிட்டனைச் சேர்ந்த 26 வயது லாரா ஒயிட்ஃபீல்ட் 4 அடி உயரமும் 37 வயது நாதன் பிலிப்ஸ் 3 அடி உயரமும் கொண்டவர்கள். இருவரும் 'ஸ்நோ ஒயிட்' திரைப்படத்தில் குள்ளர்களாக நடித்தபோது நண்பர்களாக பழகினர். நட்பு, காதலானது. அவர்களின் மகன் இரட்டைக் குறைபாட்டுடன் பிறந்தான். சில வாரங்கள் மட்டுமே உயிருடன் இருப்பான் என்று மருத்துவர்கள் கூறியபோதும், இரண்டரை வயதாகிவிட்டது.















இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 02.10.2016 அன்று வெளியிடப்பட்டது.